# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 267 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 03, வெள்ளிக்கிழமை 19.08.2016


## நடைமுறைக்கு வருமானால் சிறப்பான சட்டம்

### காணாமற்போனோர் அலுவலகம் அமைப்பு குறித்துக் கருத்து

யாழ்ப்பாணம், ஓக. 19

காணாமற்போனோர் அலுவலகம் நிறுவும் சட்டம், அடிப்படையில் மிகச் சிறப்பானது என்று மனித உரிமை ஆர்வலர்கள் வரவேற்றுள்ளனர்.

ஆனாலும் இதேபோன்று ஏற்கனவே பல சட்டங்கள் இலங்கையில் இருந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை மோசமான பதிவையே கொண்டிருக்கின்றது. எனவே நடைமுறைப்படுத்தலிலேயே இது தங்கியுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சட்டம் பன்னாட்டுச் சட்டங்களுக்கு நிகரானது. மிகச் சிறப்பான சட்டம். இலங்கையில் ஏற்கனவே உள்ள சித்திரவதைகள் தொடர்பான சட்டமும் பன்னாட்டுச் சட்டங்களுக்கு நிகரானது. ஆனால் அது நடைமுறைப்படுத்தலில் தோல்வியான பதிவையே கொண்டிருக்கின்றது. எனவே காணாமற் போனோர் அலுவலகச் சட்டவரைவும், இதற்கு யாரை நியமிக்கப் போகின்றார்கள், எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகின்றார்கள் என்பதிலேயே தங்கியுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

(விரிவு: பக்கம் 07)

## வடக்கில் விகாரை அமைப்பதில் என்ன தவறு?

### கேட்கிறார் ஆளுநர் ரெஜினோல்ட் கூரே

கொழும்பு, ஓகஸ்ட் 19

வடக்கு மாகாணத்தில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதில் என்ன தவறு இருக்கின்றது? அங்கு ஏராளமான இந்துக் கோவில்களும், கிறிஸ்தவ ஆலயங்களும் உள்ளன. அதேபோன்று விகாரைகளை அமைத்தால் என்ன? என்று வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் விகாரை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



அவர் தெரிவித்ததாவது:

கொக்கிளாயில் விகாரை அமைப்பதில் என்ன தவறு? இந்த விகாரை அமைக்கப்படுவது தொடர்பில் எனக்கு நன்றாகவே தெரியும். அது தொடர்பில் நான் தேடிப் பார்த்தேன். அந்த விகாரை உரிய அனுமதியுடனேயே

>> 06ஆம் பக்கம்

## 30 வருடம் படை வசம் இருந்த மைதானம் நேற்று விடுவிப்பு

### வவுனியா - இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயத்திடம் கையளிப்பு

வவுனியா, ஓக. 19

வவுனியா – இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயத்தின் மைதானம், படையினரின் 30 வருடக் கட்டுப்பாட்டிலிருந்து நேற்று விடுவிக்கப்பட்டது. அதனைப் பாடசாலை நிர்வாகம் பொறுப்பேற்றுக் கொண்டது.

1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் நிலவிய பாதுகாப்புச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயத்தின் மைதானம் (வவுனியா ஜோசப் முகாம்) விமானப் படையினரால் சுவீகரிக்கப்பட்டது.

இதனால் பாடசாலை மாணவர்கள், 30 வருடங்களாகக் குறித்த மைதானத்தைப் பயன்படுத்த முடியாத நிலை இருந்து வந்தது.

சில வருடங்களாகப் பாடசாலை நிர்வாகத்தினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், குறித்த மைதானத்தை விடுவிக்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் தொடர்ச்சியாகக் கோரி வந்தனர்.

வவுனியா பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்தில் அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தில் பாடசாலை அதிபரின் மைதான விடுவிப்புத் தொடர்பான கோரிக்கையைப் பரிசீலனை செய்த பாதுகாப்பு அமைச்சின்

>> 06 ஆம் பக்கம்

## சன்னா குழுவினால் குடும்பஸ்தர் சங்குவேலியில் வெட்டிக் கொலை

### ஆள்மாறி நடத்தப்பட்ட தாக்குதல் என மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

சங்குவேலியில் நேற்று முன்தினமிரவு சன்னா குழு துரத்தித் துரத்தி நடத்திய வாள்வெட்டில் ஒருவர் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்டார் என்று யாழ்.பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸ் தெரிவித்தார்.

குறித்த வாள்வெட்டுக் குழுவினர், தாம் இலக்கு வைத்த நபரைவிட்டுவேறொருவரை ஆள்மாறி வெட்டிக் கொன்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

சங்குவேலியில் சன்னா உட்பட மூவர் அடங்கிய குழு ஒருவர் மீது வாள்வெட்டு நடத்தச் சென்றுள்ளது. இதனைக் கண்ட குறித்த நபர் அந்த இடத்தில் இருந்துதப்பியோடிவிட்டார். அவருடன் நின்றிருந்த குடும்பஸ்தரும் தப்பியோடியுள்ளார். இதன்போது வாள்வெட்டுக் குழுவினர், ஆள்மாறி குடும்பஸ்தரைத் துரத்திச் சென்றுள்ளனர். அவர் கால் இடறி விழுந்தபோது வாள் வெட்டு நடத்தப்பட்டுள்ளது.

சங்குவேலி வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த சிவகுமார் பிரணவன் (வயது-30) என்ற குடும்பஸ்தரே வெட்டிக் கொல்லப்பட்டார்.

இரவு 10 மணியளவில் வாள் வெட்டு

>> 24ஆம் பக்கம்

## அரச நிதியில் நடக்கக்கூடாது ஓராண்டுப் பூர்த்தி கொண்டாட்டம்

### பிரதமர் ரணில் பணிப்புரை

கொழும்பு, ஓக. 19

தேசிய அரசின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு இன்று கொண்டாடப்படும் விழாவுக்கு அரச வளங்களையோ, நிதியையோ பயன்படுத்தவேண்டாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்பாட்டாளர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

நல்லாட்சி அரசின் ஓராண்டுப் பூர்த்தி விழா ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் தலைமையில் இன்று பிற்பகல் மாத்தறை சனத் ஜயசூரிய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யும்போதே அரச வளங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

கூட்டத்தை மாத்திரம் நடத்திக் குறைந்த செலவில் நிகழ்வை நடத்தி முடிப்பதற்கு அரச தரப்பில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஓராண்டு காலப் பகுதிக்குள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறை

>> 24ஆம் பக்கம்

## பரவிப்பாஞ்சான் காணி விடுவிப்பு எப்போதெனத் தெரியாது

### அமைச்சர் சுவாமிநாதன் கிளிநொச்சியில் கூறினார்

யாழ்ப்பாணம், ஓக. 19

பரவிப்பாஞ்சான் காணிகள் விடுவிக்கப்படும். ஆனால் எப்போது என்பதைச் சொல்ல முடியாது. இவ்வாறு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

இரண்டு வாரங்களில் மக்களின் மீள்குடியமர்வு இடம்பெறும் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலர் தெரிவித்தார் என்று, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுமுன்தினம் அந்த மக்களிடம் உறுதியளித்தார்.

>> 23ஆம் பக்கம்



ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில கண் பாருங்கோ...

## சோதனை செய்யப்படாத மகிந்தவின் பயணப் பைகள்

### பிரதமர் ரணிலிடம் முறைப்பாடு

கொழும்பு, ஓக. 19

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும் போதும், மீள நாடு திரும்பும் போதும் அவரது பயணப் பைகள் உரிய நெறிமுறைகளுக்கமையச் சோதனைக்கு உட்படுத்தப்படுவதில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது விடயத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு கோரிச் சிவில் பிரதிநிதிகள் பிரதமருக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

முன்னாள்

>> 06ஆம் பக்கம்

## கருத்துக்களை உள்வாங்கியே காணாமற்போனோர் சட்டம்

### கூறுகிறது மக்கள் கருத்தறியும் குழு

கொழும்பு, ஓக. 19

காணாமற்போனோர் சட்ட வரைவு உருவாக்கத்தின்போது காணாமற்போனோரின் உறவுகளின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டுள் ளன. அவர்களை நேரடியாக அழைத்துக் கலந்துரையாடிக் கருத்துக்களைப் பெற்றோம்.

இவ்வாறு நல்லிணக்கப் பொறிமுறைக்கான மக்கள் கருத்தறியும் செயலணியின் உறுப்பினர் பேராசிரியர் சித்திரா மௌன குரு தெரிவித்தார்.

>> 25ஆம் பக்கம்


உங்கள் சேமிப்பிற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம்

வர்தன எக்ஸ்றீம் சேவர்

ரூ.1000 தொடக்கம் ரூ.50 மில்லியனுக்கு மேல் நீங்கள் தொடர்ச்சியாக சேமிக்கும் எந்தவொரு தொகைக்கும் அதிகபட்ச வட்டி வருமானமாக 6.75% (AER 6.96%) முதல் 9.25% (AER 9.65%) வரை கவர்ச்சிகரமான வருடாந்த வட்டி வீதத்தினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112350000

இச்சலுகைகளை இன்றே அனுபவித்திட அருகிலுள்ள DFCC வங்கி கிளைக்கு விஜயம் செய்து வர்தன எக்ஸ்றீம் சேவர் கணக்கினை ஆரம்பியுங்கள்.

www.dfcc.lk

*நிபந்தனைகள் உண்டு.

DFCC வங்கி 'பிச் ரேட்டிங் லங்கா லிமிட்டெட்டின் AA- (lka) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது.

DFCC வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி

உங்கள் வளர்ச்சிக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரமாக எதிரணியை சந்தித்தார் மகிந்த

## அமைப்பாளர் பதவிகள் பறிக்கப்பட்டதை அடுத்து

யாழ்ப்பாணம், ஓக. 19

அமைப்பாளர் பதவியைப் பறித்து மகிந்தவின் சகாக்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிர்ச்சி வைத்தியம் கொடுத்த நிலையில், அன்றிரவே ஒன்றிணைந்த எதிரணி உறுப்பினர்களுடன் முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச அவசரச் சந்திப்பை நடத்தினார்.

மிரியானையிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு 7 மணி முதல் 10.30 மணி வரை நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் காணாமற்போனோர் அலுவலகம் குறித்தான சட்டவரைவு, தேர்தல்முறை மாற்றம், அரசமைப்பு மறுசீரமைப்பு நடவடிக்கை உட்பட முக்கிய பல விடயங்கள் பற்றி ஆராயப்பட்டன.

மகிந்தவுக்குச் சார்பாகச் செயற்பட்டவர்களிடமிருந்து தொகுதி அமைப்பாளர் பதவி பறிக்கப்பட்டதற்கு இதில் கண்டனம் வெளியிடப்பட்டதுடன், அடுத்து எவ்வாறான நடவடிக்கைகள் எடுப்பது என்பது பற்றியும் பேசப்பட்டது.

மேற்படி சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து கருத்து வெளியிட்ட சி.பி.ரத்நாயக்க,

காணாமற்போனோர் அலுவலகம் குறித்த சட்டவரைவு தன்னிச்சையான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் திருத்தங்கள் மாத்திரமே உள்வாங்கப்பட்டுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் திருத்தங்கள் இறுதிவரை வெளிப்படுத்தப்படவில்லை.

சட்டவிரோதமான முறையிலேயே அது நிறைவேற்றப்பட்டுள்ளது. இது பற்றிச் சபாநாயகரிடம் முறையிடத் தீர்மானிக்கப்பட்டது. அந்தவகையில் இன்று (நேற்று) கடிதம் கையளிக்கப்பட்டது.

தேர்தல்முறை மாற்றம் பற்றியும் பேசப்பட்டது. தொகுதி அமைப்பாளர் பதவிகள் ஏன் பறிக்கப்பட்டன என்று தெரியவில்லை. எந்தவொரு விரோத நடவடிக்கையிலும் நாம் ஈடுபடவில்லை. ஆகவே, பதவி பறிக்கப்பட்டதற்கு அதிருப்தி வெளியிடப்பட்டது - என்றார்.

மகிந்தவின் சகாக்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஒன்றுகூடி தொடர் நடவடிக்கையை ஆராயவுள்ளனர் எனக் கூறப்பட்டது. (த-5)



வவுனியா– தாண்டிக்குளத்தில் சாரதிகளுக்குப் பயிற்சி வழங்கிக் கொண்டிருந்த வாகனம் விபத்தில் சிக்கியதில் இருவர் காயமடைந்துள்ளனர். பயிற்சியின்போது பிரதான வீதிக்கு வாகனத்தை செலுத்த முற்பட்டபோது பின்பக்கமாக வந்த டிப்பர், பயிற்சி வாகனத்துடன் மோதியது. பின்னால் வந்த காரும் டிப்பருடன் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4)

# பதிவு இல்லாத மீனவர்கள் காப்புறுதியை இழக்க நேரிடும்

## இம்மாத இறுதிவரை அவகாசம்

யாழ்ப்பாணம், ஓக. 19

மீன்பிடி அமைச்சின் ஊடாக மீனவர்களுக்கு ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான காப்புறுதித் திட்டத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 4 மீன்பிடிப்பரிசோதகர் பிரிவில் உள்ள 3 ஆயிரத்து 500 மீனவக் குடும்பங்கள் தமது பதிவுகளை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் வி.கலிஸ்ரன் கோரியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

பதிவுகள் அனைத்தும் இந்த மாத இறுதிக்குள் மேற்கொள்ளப்படவேண்டும். தவறும் பட்சத்தில் அவர்கள் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான காப்புறுதியை இழக்க நேரிடும்.

திடீர் விபத்து, சொத்து அழிவு, கடற்கலம் காணாமற்போதல் போன்ற சம்பவங்களினால் கடந்த காலங்களில் பல மீனவர்கள் பொருளாதார ரீதியாகப் பாதிப்படைந்திருந்தனர். தற்போதைய அரசின் ஊடாக மீனவர்களின் வாழ்வாதரத்தை மேலும் மேற்படுத்துவதற்காக ஒரு மில்லியன் ரூபா காப்புறுதி வழங்கப்படவுள்ளது. இது தொடர்பில் அந்தப் பகுதிகளுக்குரிய சங்கங்கள் மற்றும் சமாசங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சங்கங்கள் ஊடாகப் பதிவை மேற்கொள்ள முடியாதவர்கள் அவர்களின் பகுதிக்குரிய மீன்பிடிப் பரிசோதகர் மூலம் பதிவை மேற்கொள்ளமுடியும்.

இந்தப் பதிவைக் கொண்டே இனி வரும் காலங்களில் படகுகள், வலைகள் போன்ற கடற்றொழில் உபகரணங்களை வழங்குவதற்கு மீன்பிடி அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது-என்றார். (த-4-107)

### 4 முஸ்லிம் குடும்பங்கள் மட்டுமே பங்கேற்ற நடமாடும் சேவை

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களுக்காக நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் 4 முஸ்லிம் குடும்பங்கள் மாத்திரமே கலந்து கொண்டுள்ளன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீள்குடியேறுவதற்காக 95 முஸ்லிம் குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டிருந்தன. இருப்பினும் 4 குடும்பங்கள் மாத்திரம் நடமாடும் சேவையில் பங்கேற்றுத் தமது தேவைகளை எடுத்துக் கூறியுள்ளன. அவற்றில் மூன்று குடும்பங்கள் தமக்குக் காணி தேவையெனவும், ஒரு குடும்பம் வீடமைப்புத் திட்டம் வழங்குமாறும் கோரியுள்ளன.

இதற்குப் பிரதேச செயலக அதிகாரிகள், காணி தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், வீடமைப்புத் திட்டத்துக்கு விண்ணப்பித்தவர் அடுத்த வருடத் திட்டத்தில் இணைக்கப்படுவார் என்றும் பதிலளித்துள்ளனர்.

தற்போது 20க்கு மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் வசித்து வருகின்றன. அந்தக் குடும்பங்கள் பள்ளிவாசல் காணியில் குடியமர்ந்துள்ளன. பள்ளிவாசலும் செயற்பட்டு வருகின்றது. இவைகளுக்கு நிரந்தரக் காணி இல்லாததால் பள்ளிவாசல் காணியில் தங்கியுள்ளன. இதில் மூன்று குடும்பங்களே நடமாடும் சேவையில் காணி கோரி விண்ணப்பித்துள்ளன. நடமாடும் சேவையில் பிரதேச செயலக அனைத்துப் பிரிவுகளின் தலைவர்களும், சாவகச்சேரி நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றின் செயலாளர்களும் கலந்து கொண்டனர். (த-5-9)



# பளையில் சிக்கியது 27 கிலோ கஞ்சா

பளைப் பகுதியில் 25 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் மன்னார் - மறிச்சுக்கட்டிப் பகுதியிலும் 2 கிலோ கஞ்சா மீட்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

பளைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின்படி அங்கு ஓர் இடத்தில் 25 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை. இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மன்னார் - மறிச்சுக்கட்டிப் பகுதியில் 2 கிலோ கஞ்சா போதைப் பொருளை மீட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்தனர். அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

கடற்படைப் புலனாய்வுத் துறையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சந்தேகநபரைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளுக்காகச் சந்தேகநபர் வவுனியா போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (த-4-107)

# ஒஸ்மானியா கல்லூரியில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் மீள் குடியேற்றத்துக்கான விசேட நடமாடும் சேவை நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இதில் புதிய மீள்குடியேற்றப் பதிவுகள், காணியற்றோர் காணிகளைக் கோருவதற்கான பதிவுகள், வீட்டுத் திட்டத்துக்கான பதிவுகள் ஆகியவற்றுடன், வாழ்வாதார உதவிகளுக்கான பதிவுகள், யாழ். மாநகரசபை அலுவலகத்தின் சோலைவரி மதிப்பீடுகள் மற்றும் வீடமைப்புக்கான அனுமதி தொடர்பிலான பதிவுகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# கோட்டையில் திருடப்பட்ட இரும்புக் குழாய்கள் சிக்கின

## சந்தேகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ். கோட்டையில் நேற்றுமுன் தினம் திருடப்பட்ட இரும்புக் குழாய்கள், யாழ். ஐந்து சந்தியிலுள்ள இரும்புக் கடையில் நேற்று மீட்கப்பட்டன. இரும்புக் கடை முதலாளி விசாரணைக்கு அழைக்கப்பட்டுப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.கோட்டையில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்காகத் தண்ணீர்த் தாங்கி வைக்கவென 20 அடி நீளமான தரம்மிக்க இரும்புக் குழாய்கள் யாழ்.முனியப்பர் கோயிலுக்குப் பின்புறமாக [illegible] யாழ். பல்கலைக்கழகத் தொல்லியல் துறையினரின் பொறுப்பில் புனரமைப்பு இடம்பெறுகின்றது.

இந்த நிலையில் நேற்றுக் காலை கோட்டைக்குச் சென்றபோது குறித்த இரும்புக் குழாய்கள் திருடப்பட்டமை தெரியவந்தது. அது தொடர்பில் தேடுதல் நடத்தியபோது, யாழ்.ஐந்து சந்தியிலுள்ள இரும்பு விற்கும் கடையின் முன்பாகத் திருடப்பட்டதாகக் கூறப்பட்ட இரும்புக் குழாய்கள் காணப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நிர்வாகம் ஊடாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் அந்த இரும்புக் குழாய்களை மீட்டனர். இரும்புக்கடை உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இரும்புக் குழாய்களைத் திருடியவர் கைது செய்யப்படவில்லை. விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைசெய்யப்பட்ட வலைகளுடன் பொலநறுவை மீனவர்கள் சிக்கினர்

### நந்திக்கடலில் தொழில் செய்ய முயற்சித்தபோது

முல்லைத்தீவு, ஓக. 19

முல்லைத்தீவு - நந்திக்கடலில் தடைச்செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிக்கத் தயாரான பொலனறுவையைச் சேர்ந்த மீனவர்களிடமிருந்து வலைகள் மற்றும் கடற்றொழில் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இவ்வாறு முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவுக் கடலில் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி தென்னிலங்கை மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதாக உள்ளூர் மீனவர்கள் தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் உதவியுடன் கடற்றொழில் மீன்பிடி நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் நேற்று மாலை 6 மணியிலிருந்து தேடுதலில் ஈடுபட்டனர். இதன்போதே பொலநறுவையிலிருந்து தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளுடன் வாகனத்தில் வந்திருந்த மீனவர்கள் மாட்டினர்.

அவர்கள் மேலதிக விசாரணைக்காக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் பொலநறுவை மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டது.

இங்குள்ள ஒருசில மீனவர்களின் ஒத்துழைப்புடன் பொலநறுவை உள்ளிட்ட பிற மாவட்டங்களில் இருந்து வந்து நந்திக் கடலில் தொழிலில் ஈடுபடும் மீனவர்களினால் எமது தொழில் நடவடிக்கைகள் பாதிப்படைகின்றன. இதனை நிரந்தரமாக நிறுத்துவதற்கு திணைக்கள அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றனர் முல்லைத்தீவு மீனவர்கள்.

(வ-4,102)

# சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப் பலமில்லையே

### மகிந்த அணி கவலை

கொழும்பு, ஓக. 19

சட்டத்துக்குப்புறம்பாக அரசினால் நிறைவேற்றப்பட்ட காணாமற்போனோர் அலுவலக சட்டவரைவில் இறுதியாகக் கையொப்பமிட்டவர் என்ற வகையில் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படலாம். ஆனால் எம்மிடம் உள்ள உறுப்பினர் தொகையைக் கொண்டு அவ்வாறான செயற்பாடுகளுக்குச் செல்வதில் எந்தவிதமான பயனுமில்லை.

இவ்வாறு கவலை தெரிவித்தார் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில.

மகிந்த ஆதரவு கூட்டு எதிரணியினரின் செய்தியாளர் சந்திப்பு நேற்று என். எம் பெரேரா மண்டபத்தில் நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில, பந்துல குணவர்தன, செனவிரத்ன, ஜி.எல். பீரிஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்ததாவது:

அரசினால் கொண்டுவரப்பட்ட காணாமற்போனோர் அலுவலக சட்டவரைவு விவாதிப்பதற்கு இரு நாள் கால அவகாசம் எம்மால் கோரப்பட்டிருந்தது. எனினும் எமது கடும் எதிர்ப்பின் பேரில் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று பகல் 12 மணியுடன் விவாதங்கள் நிறைவுபெற்றன.

இந்தச் சட்டவரைவு தொடர்பில் விவாதங்களை மேற்கொள்ளவோ, எமது தரப்பு கருத்துக்களை வெளியிடுவதற்கோ எந்த வித சந்தர்ப்பமும் வழங்கப்படவில்லை. இது மிகவும் பாரதூரமான அரசமைப்பு மீறலாகும்.

சபாநாயகர் தாய்நாட்டை நேசிப்பவர் என்ற வகையில், அவருடன் நாம் கலந்துரையாடினோம். இந்த விடயத்துக்கு முறையான தீர்வை அவர் முன்வைப்பார் என நினைக்கின்றோம். சட்டவரைவுக்கு இறுதி கைகொப்பமிட்டவர் என்ற வகையில் அவருக்கெதிராக நம்பிக்கை இல்லாப் பிரேணை கொண்டு வரப்படலாம் - என்றார்.

(வ-5)

# சுன்னாகத்தில் நேற்றிரவு மூவர் மீது வாள்வெட்டு

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாமுக்கு அருகே வைத்து நேற்றிரவு 3 பேர் மீது வாள் வெட்டு நடத்தப்பட்டது. அதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் சங்குவேலியில் ஒருவர் வாளால் வெட்டிக் கொல்லப்பட்ட நிலையில், நேற்றிரவு சபாபதிப் பிள்ளை முகாமில் வாள் வெட்டு இடம்பெற்றது. 2 பேருக்குச் சிறு காயம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றிரவு 7.45 மணியளவில் வாள் வெட்டு நடத்தப்பட்டது. வீதியோரம் நடந்த இந்தச் சம்பவத்தினால் அங்கு குழப்பம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அங்கு சென்ற சுன்னாகம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். சம்பவத்தையடுத்து மதுபோதையில் அந்தப் பகுதியில் நின்ற ஒருவரைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-4,101)

# முஸ்லிம் மீதான படுகொலைகளுக்கு பக்கசார்பற்ற விசாரணைவேண்டும்

### மக்கள் கருத்தறியும் செயலணியிடம் வலியுறுத்தல்

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்கள் மீது இன ரீதியாக மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், பலவந்தமாக வெளியேற்றப்பட்டமை தொடர்பாக பக்கச்சார்பற்ற நீதி விசாரணைகளை முன்னெடுத்து, அவற்றின் உண்மை நிலை கண்டறியப்பட வேண்டும்.

இவ்வாறு மக்கள் கருத்தறியும் செயலணியிடம் முஸ்லிம்கள் சார்ந்த சிவில் அமைப்புகளினால் வலியுறுத்தப்பட்டது.

போர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுப்பது தொடர்பில் மக்களிடம் கருத்தறியும் மட்டக் களப்பு வலயச் செயலணியின் அமர்வு நேற்று வியாழக்கிழமை பட்டிப்பளை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

அங்கு கருத்தை முன் வைத்த சமூக நல்லிணக்கத்திற்கும் வலுவூட்ட லுக்குமான அமைப்பின் இயக்குநர் எம். எஸ் .எம். நஸீர்,

“வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு தொடர்ந்து தடைகள் காணப்படுகின்றன. அந்தத் தடைகள் நீக்கப்படவேண்டும்.

தற்போது உள் நாட்டில் பௌத்த கடும்போக்குடையவர்களின் செயற்பாடுகள், இனங்களிடையே, மதங்களிடையே நல்லிணக்கத்திற்கு தடையாக உள்ளன. குறிப்பாக வடக்கு- கிழக்கு மாகாணங்களில் பௌத்த குடியிருப்புகள் இல்லாத இடங்களில் பௌத்த வழிபாட்டுக்குரிய அடையாளங்களை நிறுவதில் பாதுகாப்புத் தரப்பினர் ஈடுபடுகின்றனர்.

எந்த மதமாக இருந்தாலும் ஒரு இடத்தில் மத வழிபாட்டுக்குரிய அடையாளம் நிறுவுவது என்றால், அந்த பகுதியிலுள்ள பதிவு செய்யப்பட்ட சிவில் மற்றும் மத அமைப்புகளின் கருத்துக்களைப் பெற வேண் டும் என்பது சட்ட ரீதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும் -என்றார்.

(வ-5)

# ஆலய நிர்வாக உறுப்பினர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக. 19

அரச உத்தியோகத்தர் உள்ளிட்ட இருவர் வல்லிபுர குருக்கட்டு சித்திவிநாயகர் கோயில் தீர்த்தக் கேணிக்குள் இறங்கிக் குளித்ததோடு, அதனுள் இறங்கிக் குளிக்க வேண்டாம் என்று கூறிய கோயில் நிர்வாகத்தைச் சேர்ந்த ஒருவரைத் தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பகல் இடம்பெற்றது. தாக்கியமை தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸில் முறையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த கோயிலின் தீர்த்தக் கேணிக்குள் எவருமே இறங்கிக் குளிப்பதில்லை. தேவையெனின் வெளியே நின்று வாளியால் அள்ளிக் குளிக்க முடியும். வாகனம் ஒன்றில் நேற்று அங்கு ஒரு குழுவினர் வந்தனர். அவர்கள் போதையில் இருந்துள்ளதாகத் தெரிகிறது. அவர்களில் 2 பேர் கேணிக்குள் இறங்கிக் குளித்தனர். அவ்வாறு குளிக்க வேண்டாம் என்று கூறிய போதே தாக்கினார்கள் என பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

(வ-4)

# மைத்திரியின் பரிந்துரைகளை உதாசீனம் செய்தவர்களே நீக்கமாம்

கொழும்பு, ஓக.19

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகித்த 13 அமைப்பாளர்கள் கட்சித் தலைவரின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தவில்லை. அதனாலேயே அவர்கள் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அரசியல் பழிவாங்கல்களுக்கு அமைவாக எவரும் நீக்கப்பட்டவில்லை. மாறாக கட்சியின் மறுசீரமைப்புக்காகவே பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

எவ்வாறாயினும் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ச, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய மூவரதும் பங்கேற்பு உடனே கட்சியின் 65 ஆவது மாநாடு நடைபெறும் - என்று கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

(வ-5)

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் ப்ளாட்டினம 10.00 a.m / 1.00 p.m
கபாலி 4.00 p.m / 7.00 p.m
Fri/Sat/Sun 9.30 p.m
சில்வர்
10.15 / 1.15 / 4.15 / 7.15
ப்ரொன்ஸ்
10.30 / 1.30 / 4.30 / 7.30
Fri/Sat/Sun 9.30 p.m
விசாரணை 021-2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

வேலைவாய்ப்பு
Cleaning
Garden வேலை
நிறுவனம் : பிரெஞ்சுமொழி கற்பிக்கும் தனியார் நிறுவனம்
ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, KACHCHERI NALLUR ROAD, JAFFNA.
Phone - 021 222 8093

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்
மஹோற்சவ கால கடைகள் அமைப்பதற்கான இட ஒதுக்கீட்டு கூறு விலை

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவ கால கடைகள் அமைப்பதற்கான இட ஒதுக்கீட்டு கூறு விலை எதிர்வரும் 21.08.2016 ஆம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கக் காரியாலயத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

செயலாளர்
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 538
சீட்டிழுப்பு திகதி 2016.08.18
வெற்றி இலக்கங்கள்
02 29 33 71 G
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 46,224,280/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1289
சீட்டிழுப்பு திகதி 2016.08.18
வெற்றி இலக்கங்கள்
21 38 43 65 P
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 22,283,520/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறைகள் வாடகைக்குண்டு**
கொழும்பு Passport office , கண் ஆஸ்பத்திரி ஆகியவற்றுக்கு அருகில் அறைகள் வார.நாள் அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்.
**077 378 7373**

**மணமகள் தேவை**
1987 இல் பிறந்த அனுஷ நட்சத்திரம், கிரகபாவம் 49. இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த என்ஜினியர் மகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். செவ்வாய்க் குற்றம் இல்லை. பொருந்தக்கூடிய நட்சத்திரங்கள் கார்த்திகை, புனர்பூசம், மிருகசீரிடம், திருவோணம்,ரேவதி,சித்திரை, அவிட்டம்,சதயம்,கணித விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் மற்றும் தகுந்த அரச சேவையில் பணிபுரிபவர்கள் எதிர்பார்க்கப்படுகிறது.
**077 163 0982, 077 617 6548**

**தவறிவிட்டது**
A9 வீதி, புளியங்குளம் சந்தியில் இருந்து யாழ்ப்பாணம் வரும் வீதியில் கைதடி, நாவற்குழி தெற்கு, கைதடி எனும் முகவரியில் வசிக்கும் நாகரத்தினம் வசந்தன் ஆகிய எனது குடும்ப அட்டையும், பிறப்புச் சான்றிதழும் 14.08.2016 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.
**077 222 1713**

**பணியாளர் தேவை**
கிளிநொச்சி மாவட்டத்தில் வீதிப்பாலம் அமைக்கும் வேலைக்கான பணியாளர்கள் தேவை.
01. மேசன்
02. கூலியாள்கள்
**077 4952 706, 076 821 8763**

**அறைகள் வாடகைக்குண்டு**
பல்கலைக்கழகத்துக்கு மிக அருகில் அமைதியான சூழலில் மாணவிகளுக்கு அறைகள் வாடகைக்குண்டு.
**077 431 9797**

**உதவியாளர் தேவை**
கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் வதியும் வயோதிபப் பெண்ணுடன் தினசரி காலை 7.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை தங்கியிருந்து பணிபுரிய 40 வயதிற்கு மேற்பட்ட பெண் உதவியாளர் தேவை. கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும். (J 3869)(12.18)
**077 172 8353, 075 0422 906**

**கடைகள் வாடகைக்குண்டு**
யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள 3 தொடர் கடைகள் (28'x16') வாடகைக்குண்டு. கடையாகவும், களஞ்சியமாகவும் பயன்படுத்தலாம். (J 3869)(12.18)
**076 668 8206**

**வீடு வாடகைக்கு உண்டு**
பத்தமேனி அச்சுவேலியில் (பஸ்தரிப்பிடத்துக்கு அருகில்) சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் வாடகைக்கு உண்டு.
அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் விரும்பத்தக்கது.
**தொடர்பு: 077 086 8673**

## கேள்வி அறிவித்தல்
### கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்

**2016/2017 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் சேவைக்கான விலைமனுக்கோரல்**

**பெறுகை இல: NP/03/03/LCB/SEC.SER/2016**

தலைவர், பிரதம செயலாளர் பெறுகைக்குழுவினால் வடமாகாண சபையின் காரியாலயங்களுக்கான 2016/17ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் சேவையை (Security Service) வழங்குவதற்கு தகைமையுள்ள கேள்விதாரர் களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1) கேள்விதாரர் பாதுகாப்புச் சேவையை வழங்குதலுக்கான வியாபாரப் பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச் சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும். அத்துடன் கேள்விதாரர் பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2) கேள்விதாரரின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் வடக்கு மாகாணத்தில் அமைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் சேவையை வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வழங்கல் வேண்டும்.

3) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களை எழுத்து மூலமான கோரிக்கையுடன் ரூபா 3,500.00 இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்தி கடமை நாள்களில் 22.08.2016 ஆம் திகதி தொடக்கம் 13.09.2016 ஆம் திகதிவரை மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 3.30 மணிவரையான காலப்பகுதியில் **செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.** எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

4) கேள்வி ஆவணங்கள் 14.09.2016ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு **"செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"**. என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது கல்வி அமைச்சில் பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

5) சகல கேள்விகளுடனும் ரூபா650,000.00 பெறுமதியான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும். அத்துடன் பிணைப்பொறுப்பு செல்லுபடிகாலம் 14.09.2016 முதல் 09.01.2017 வரையானதாகும்.

6) கிடைக்கப்பெற்ற கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் கேள்வி கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

7) கேள்வி முன்னாயத்தக் கூட்டம் 05.09.2016 அன்று காலை 10.00 மணியளவில் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் நடைபெறும்.

**அ.பத்திநாதன்**
**தலைவர்,பிரதமசெயலாளர் பெறுகைக்குழு,**
**பிரதம செயலாளர் செயலகம்**
**வடக்கு மாகாணம்**
**திகதி:16.08.2016**

(சி.24981) (13.18)

## கோப்பாய் நடுவர் சபை அமர்வு இடமாற்றம்

வலி.கிழக்கு கோப்பாய் நடுவர் சபையின் அமர்வு 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புத்தூர் சிவன் கோயில் முன்றிலில் உள்ள புத்தூர் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும் என மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் இகிருஷ்ணபிள்ளை தெரிவித்தார்.

புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலையில் வாராந்தம் நடைபெற்று வரும் அமர்வுகள் பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறுவதால் 21ஆம்திகதிஞாயிற்றுக்கிழமை மட்டும் பொதுநோக்கு மண்டபத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (ற-11)

## சைவ பரிபாலன சபை யாழ்ப்பாணம்

### பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம்: 11. 09.2016 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 10.00 மணிக்கு
இடம்: நாவலர் ஆச்சிரம மண்டபம்

**நிகழ்ச்சி நிரல்**
* திருநீறணிதல்
* தேவாரம்
* அறிக்கை சமர்ப்பித்தல்
* புதிய நிர்வாகிகள் தெரிவு
* பிறவிடயங்கள்

+ பொதுசபை உறுப்பினர்கள் பொதுக்கூட்டத்தில் பிரேரணை சமர்ப்பிக்க விரும்பின் 31.08.2016 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளருக்கு பிரேரணையை சமர்ப்பிக்கவும்.
+ பொதுச் சபை உறுப்பினர்கள் கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**இரா. செல்வவடிவேல்**
**(கௌரவ செயலாளர்)**

## கேள்வி கோரல்கள்
### இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
### உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகாரசபை
### யாழ்ப்பாணம்

**யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வீதிகள் புனர் நிர்மாணம் செய்வதற்கான கேள்வி அறிவித்தல்**

**நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிதியின் மூலம் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்**

1) பின்வரும் புனர் நிர்மாண வேலைகளிற்கான மூடிய கேள்வி கோரல்களை நிறைவேற்றுப் பொறியியலாளர் யாழ்ப்பாணம், மற்றும் நிறைவேற்றுப் பொறியியலாளர் பருத்தித்துறை கேள்விச்சபைகளின் சார்பாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக் கொள்வார்.

| வேலை விவரம் | கேள்வி பாதுகாப்பு பணம் | ஒப்பந்தகாரர் தரம் ICTAD |
|---|---|---|
| 1. மீள் புனரமைப்பு - யாழ்ப்பாணம் பொன்னாலை பருத்தித்துறை வீதி, 2/5 மதகு | 29,000.00 | C 8 அல்லது அதற்கு மேலும் |
| 2. மீள் புனரமைப்பு - சாவகச்சேரி தனங்கிளப்பு வீதி, 1/1 மதகு | 25,000.00 | C 8 அல்லது அதற்கு மேலும் |
| 3. செம்மணி சந்தியை புனரமைத்தலும் உயர்ந்த பாதசாரிக் கடவை அமைத்தலும் கண்டி வீதி 314 + 950 km | 34,000.00 | C 8 அல்லது அதற்கு மேலும் |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 01.09.2016 அன்று முற்பகல் 10.00 மணியுடன் முடிவடையும். கேள்விப்பத்திரங்கள் 01.09.2016 அன்று காலை 10.30 மணிக்கு பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்விப்பத்திரங்களை தயாரிப்பதற்குரிய படிவங்களை பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம், காரியாலயத்தில் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப்பத்திர ஆவணங்கள் 25.08.2016 தொடக்கம் 31.08.2016 பிற்பகல் 3.00 மணிவரை மீள் அளிக்க முடியாத வைப்புத்தொகையான 2,000/= பெறுமதி சேர்வரி 12% செலுத்திப்பெறவேண்டும்.

2) தகுதி வாய்ந்த கேள்வி கோரல்கள் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.
அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ரட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் மேற்குறிப்பிட்ட தரத்திற்கமைய பதிவு செய்திருத்தல் வேண்டும்.

03. கேள்வி கோரல் ஆவணங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிட முடியும்.

04. முன் கேள்வி கோரல் கூட்டம் 30.08.2016 அன்று முற்பகல் 10 மணிக்கு பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.

05. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவு திகதியில் இருந்து 60 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாக இருக்கும்.

06. மேலே குறிப்பிடப்பட்ட கேள்விப்பாதுகாப்பு பணத்தொகை அவற்றிற்குரிய பாதுகாப்பு பத்திரம் ஓவ்வொரு கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடிய பாதுகாப்பு பத்திரம் இல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்பாண காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு காலத்திற்கு (01.09.2016 மு.ப 10.00) முன் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

08. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.
கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

09. மேலதிக விவரங்கள் பின்வரும் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் தயவு செய்து தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம். |
|---|---|
| பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம். | 021- 222- 2968. |

**மாகாணப்பணிப்பாளர் (வ)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கடற்கரை வீதி,யாழ்ப்பாணம்**

**பிரதம பொறியியலாளர்**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கடற்கரை வீதி,யாழ்ப்பாணம்.**

(சி.24983) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிச் சந்தைகளில் மாம்பழ விலைகள் உச்சம்

தென்மராட்சி, ஓக.19

தென்மராட்சிப் பிரதேச சந்தைகளில் மாம்பழங்களின் விலை என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. கறுத்தக் கொழும்பான் மாம்பழம் 175 ரூபா தொடக்கம் 200 ரூபா வரை விற்கப்படுகிறது. விளாட், அம்பலவி போன்றவை 40 ரூபா தொடக்கம் விற்பனை செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரை மாம்பழம், பலாப்பழம் கிடைக்கும் காலம் என்பதால் சந்தைகளில் பெருமளவு மாம்பழங்கள் தேங்கிக் காணப்படும். அவ்வேளையில் மாம்பழங்கள் 5 ரூபா தொடக்கம் 10 ரூபா வரை விற்கப்படும். கடந்த பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களில் பெய்த பெரு மழையால் மாமரங்களில் காணப்பட்ட பூக்கள் கொட்டியதால் இந்த முறை மரங்களில் காய்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்பட்டன. அதனால் சந்தைக்கு வரும் பழங்களின் எண்ணிக்கை குறைந்தது.

மரங்களில் காய்களாகக் காணப்பட்ட மாங்காய், பலாக் காய்களை மொத்தமாக வாங்கிச் சென்ற வியாபாரிகள் அவற்றுக்கு மருந்து விசிறிப் பழுக்க வைத்து பழங்களைச் சந்தையில் விற்பனை செய்தனர். பொதுமக்கள் செய்த முறைப்பாட்டை அடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சந்தைகளில் திடீர் பரிசோதனைகளை நடத்தி அவற்றை அழித்தனர். அவ்வாறான பழங்கள் விற்பனை செய்வதையும் தடை செய்திருந்தனர்.

இவற்றால் தற்போது மிகக் குறைந்த அளவு மாம்பழங்களே சந்தைக்குக் கொண்டு வரப்படுகின்றன. உற்பத்தியாளர்கள் அவற்றை உச்சவிலைக்குவிற்பனை செய்கின்றனர். புலம்பெயர் நாடுகளிலிருந்து வருகை தந்தவர்கள் இயற்கையாகப் பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங்களை விரும்பிக் கொள்வனவு செய்வதால் விலைகள் அதிரித்துச் செல்கின்றன – என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்ட தமிழ் – முஸ்லிம் மக்களின் அமைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தான் நியமிக்கப்பட்டார். நேற்று முன்தினம் புதன்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் நியமனம் வழங்கப்பட்டது. (ற-5-56)




## சிறப்பு அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி லத்தீப்

கொழும்பு, ஓக. 19

மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம். ஆர்.லத்தீப் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையின் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்தது.

மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம். ஆர்.லத்தீப்பை பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையின் கட்டளை அதிகாரியாக நியமிக்குமாறு பொலிஸ் ஆணைக்குழு அண்மையில் பரிந்துரை செய்திருந்தது. கடந்த மாதம் 9 ஆம் திகதி முதல் இந்த நியமனம் வழங்கப்பட வேண்டிய போதிலும் இதுவரை பொலிஸ்மா அதிபரால் நியமனம் வழங்கப்படாத நிலையில் நேற்று நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று ஆணைக் குழுவின் செயலாளர் ஆரியதாச குரே தெரிவித்தார். (ற-5)

# சர்வதேச விசாரணையே தமிழ் மக்களின் விருப்பு

### அரசு ஆதரவு வழங்க வேண்டும் என ரெலோ இயக்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 19

உள்ளக விசாரணையில் நம்பிக்கை இல்லை. சர்வதேசப்பொறிமுறையிலான விசாரணையே தேவை என்பது வடக்கு மக்களின் கோரிக்கையாக இருக்கிறது. நல்லாட்சி அரசு அதற்கு ஆதரவு வழங்க வேண்டும்.

இவ்வாறு ரெலோ இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளர் க.வேலாயுதம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றிணைந்தே இந்த அரசை ஆட்சிக்கு கொண்டு வந்தோம். இந்த அரசுக்கும் சிறுபான்மையின மக்களுக்குமிடையே நெருக்கமான உறவு இருக்கிறது.

ஜெனிவாவில் நடந்து முடிந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 32ஆவது கூட்டத் தொடரில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களுக்கான தீர்வு என்பவற்றை வலியுறுத்தி ஜெனீவா மனித உரிமைகள் சபை வளாகத்தில் உப குழுக் கூட்டம் ஒன்று இடம்பெற்றது. அரசு முன்னெடுத்துள்ளதாகக் கூறப்படும் உள்ளக விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்க வேண்டும் என பல தரப்பினராலும் அதில் வலியுறுத்தப்பட்டது.

இந்த விவகாரத்தைப் பொறுத்தவரையில் எப்போதும்போல் நம்பிக்கை வைக்க முடியாத நிலை காணப்படுகிறது. பன்னாட்டு நீதிபதிகள், சட்டவாளர் உள்வாங்கப்படுவது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிடம் முன்வைத்துள்ள கருத்துக்கு எதிராகத் தேசிய அரசியலில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் உள்ளிட்ட பலர் விமர்சனம் செய்கின்றனர். அதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போர்க்குற்ற விசாரணைகளுக்கு இடமில்லை எனவும் உள்ளூரிலேயே விசாரணை நடத்தும் திறன் இலங்கைக்கு உள்ளது எனவும் இலங்கையின் நீதித்துறை மீது தனக்கு நம்பிக்கை உள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

சர்வதேச நீதிபதிகள் மற்றும் நீதித்துறைக்குப் பதில் சிலவகையான சர்வதேசப் பங்களிப்பை ஏற்றுக் கொள்வது என்ற நிலைப்பாட்டுக்கு அமெரிக்கா இணங்கியுள்ளது. இலங்கையின் இனப்பிரச்சினையில் முக்கிய பங்கு வகிக்கும் இந்தியா சர்வதேச நீதிபதிகளை எதிர்த்து வருகின்றது. வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதிப்பது இலங்கையின் இறைமையில் தலையிடுவதற்குச் சமமானது என அது தெரிவித்து வருகின்றது.

உள்நாட்டுப்போரின் இறுதித்தருணத்தில் தங்களுக்கு இழைக்கப்பட்ட மாபெரும் அநீதிகளுக்கு நியாயம் கிடைக்கலாமென தமிழ் மக்கள் வைத்துள்ள சிறு நம்பிக்கையில் கூட பாதிப்பு ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

பொறுப்புக் கூறல் என்ற விடயத்தில் தமிழ்த் தலைவர்களுக்கு மத்தியில் ஒற்றுமை அவசியம். அதற்காக எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பிரிந்து செயற்படுவார்களாயின் ஒரு நேர்த்தியான பயணத்தை முன்னெடுத்துச் செல்லமுடியாது. சர்வதேச சமூகத்திடம் அடுத்த கட்டத்தை நோக்கிப் பயணிக்கும் வகையில் அதிகப்படியான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் – என்றார். (ற-4)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
05.03.1938

மறைவு
17.08.2016

**கந்தையா வேலாயுதபிள்ளை**

(கிளை இல.06. நீர்வேலி சந்தி கிளைக்குழு உறுப்பினரும் பொதுச்சபை உறுப்பினரும்)

எமது சங்கத்தின் அரைக்கும் ஆலை முகாமையாளர் **வே.தனீஸ்வரன்** அவர்களின் பாசமிகு தந்தையாரின் திடீர் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
வலி.கிழக்கு தென்பகுதி
ப.நோ.கூ.சங்கம் நீர்வேலி .



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
01 . 05 . 1949



மறைவு
20 . 07 . 2016

அமரர் **பொன்னன் குமாரு**

**கடந்த 20/7/2016 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (19/08/2016) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்,தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

சிறுப்பிட்டி கிழக்கு,நீர்வேலி. குடும்பத்தினர்.



## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் தில்லையம்பலம் சுதந்திரபாலன்**

(ஓய்வு பெற்ற பிரதம கணக்காளர்)

23.07.2016 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் தில்லையம்பலம் சுதந்திரபாலன் அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள், பிரசுரித்தவர்களுக்கும் மலர் வளையங்களை அனுப்பி வைத்தவர்களுக்கும் மற்றும் பலவழிகளில் பிரிவுத் துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 22.08.2016 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தயவுடன் வேண்டி நிற்கின்றோம்.

ஆடியபாத வீதி,
(ஞானபண்டித வித்தியாசாலை முன்பாக)
கொக்குவில் மேற்கு.

குடும்பத்தினர்.
021 222 2314

(J 2993)(12.18)


# கிணற்றில் தவறி வீழ்ந்து குழந்தை சாவு

*முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்தபோது இடம்பெற்றது*

கிளிநொச்சி, ஓக. 19

பூநகரிப் பிரதேசத்தில் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து இரண்டு வயது ஆண் குழந்தை உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். வசந்தராசா திசாணன் (வயது-2) என்ற குழந்தையே நேற்று உயிரிழந்தது.

பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஆலங்கேணிப் பகுதியில் காலையில் சம்பவம் நடந்துள்ளது.

வீட்டு முற்றத்தில் குழந்தை விளையாடிக் கொண்டிருந்தபோது தவறுதலாக கிணற்றில் வீழ்ந்துள்ளது. உறவினர்கள் உடனடியாக குழந்தையை கிணற்றிலிருந்து மீட்டனர். பூநகரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். மருத்துவர்கள், உடனடியாகவே குழந்தையை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றினர். சிகிச்சை வெற்றியளிக்காமல் குழந்தை உயிரிழந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-5-101)


## பதின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

**செல்வி கந்தவனம் தர்சிகா**

(மாணவி - கொக்குவில் இந்துக் கல்லூரி)

திதி : பிரதமை (19.08.2016)

சிந்தாமணி விநாயகர் அருளியது
25.05.1990

சிந்தாமணி விநாயகர் கழல் சேர்ந்தது
23.08.2002



**கந்தவனம் மனையில்
களித்தூறி மீண்டென்கால்
வந்திடுவாய் என்றேதான்
வரந்தந்தனுப்பினரோ
சிந்தாமணி கஜனார்
செல்வி தர்சிகா மகளே!
சிந்தாமணியின் பாதம்
தித்திக்க வாழ் அம்மா!**

அப்பா, அம்மா, அண்ணாமார்,
அக்கா, அத்தான், பெறாமகள்,
அண்ணிமார், மருமகள்,
உற்றார், உறவினர்.

கவி போட்டோ,
நவாலி தெற்கு.

(J/3615) (13.18)


## என்ன தவறு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கப்படுகின்றது. இது தொடர்பான அனைத்து ஆவணங்களும் காணப்படுகின்றன. இந்த நடவடிக்கைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீளப் பெறப்பட்டுள்ளது. அது தொடர்பான தகவல்களும் என்னிடம் காணப்படுகின்றன.

அந்த விகாரைக்கு அருகில் சுமார் 250 சிங்கள மீனவக் குடும்பங்கள் வாழ்கின்றன. அவர்களின் மத உரிமையை மதிக்க வேண்டும். அதுமாத்திரமன்றி வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 13 பௌத்த விகாரைகளே காணப்படுகின்றன.

வடக்கு மாகாணத்தில் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களிலும் ஏராளமான இந்துக் கோயில்கள் காணப்படுகின்றன. அது தொடர்பில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். கவலையடைய வேண்டிய அவசியமில்லை. வடக்கில் பல கிறிஸ்தவ தேவாலயங்களும் காணப்படுகின்றன. இதுவே நிலமை - என்றார். (த-5)

## சோதனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியும், அவரது குடும்பத்தாரும் நிதி மோசடிக் குற்றச்சாட்டில் சிக்கியுள்ள நிலையில், விமான நிலையத்தில் இப்படியான சிறப்புரிமை வழங்கப்படுவது நாட்டுக்குத் தவறான முன்னுதாரணமாகும்என்று மேற்படி கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-5)

## 30 வருடம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர், அதனை விடுவிக்க இணக்கம் தெரிவித்தார்.

இதனையடுத்து நேற்று மைதானத்தை விடுவித்து அங்கிருந்து படையினர் வெளியேறினர் எனக் கூறப்பட்டது.

(த-4-402)


## 3ஆம் ஆண்டு கண்ணீர்க் காணிக்கை



**நாகன் எட்வேட்**

அப்பா எங்கள் அன்புத் தெய்வமே !
நீங்கள் எங்களுடன் வாழ்ந்தவரை
எங்கள் குடும்பத்திற்கு இழப்புகள் எதுவுமில்லை
ஆனால் என்று எங்களை விட்டு
உயிர் பிரிந்தீர்களோ
அன்றுடன் இழப்பதற்கே
எங்களிடம் எதுவுமில்லை
மீண்டும் எங்கள் குடும்பத்திற்குள்
ஓர் உயிரின் உறவாக வந்திடுவீர்களென்று
விழி நீர் சொரிய நாம்
காத்திருக்கின்றோம்............

பிறப்பு
02.06.1942

இறப்பு
2013.08.19

குடும்பத்தினர்.
18/1, ஆசீர்வாதலேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(J 2893)(12.18)



## மரண அறிவித்தல்

**செல்வராசா சிதம்பரநாதன்**

(ஓய்வு நிலை அதிபர் - யா/ கலட்டி (R.C.T.M.S)



தும்பளை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா சிதம்பரநாதன் 16.08.2016 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா- மாணிக்கம் தம்பதிகளின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற பாலசுந்தரம்- மகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் கமலாதேவியின் பாசமிகு கணவரும் சகுந்தலா, Dr. சுந்தரமூர்த்தி, உமாபதி, காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மற்றும் பீதாம்பரம், சின்மையானந்தன், விமலா, இந்திரா, சுமதி ஆகியோரின் மைத்துனரும் ஸ்ரீதரனின் சகலனும் ராணி ராஜேஸ்வரியின் உடன் பிறவா சகோதரரும் அகல்யா, மதியழகன், அன்பழகன், காலஞ்சென்ற ரவியழகன், பிரணவன், மிருணாளினி, காயத்திரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜனார்த்தனன், குகரூபன், ஸ்ரீஅஜயன், சுபாங்கி, மாதங்கி, அனுஷா, ஸ்ரீஜனனி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.08.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம்
26.03.1946

மறைவு
16.08.2016

அம்புலியோடை, தும்பளை,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைமுறைக்கு வருமானால் மிகச் சிறப்பானதொரு சட்டம்

## காணாமற்போனோர் அலுவலகம் அமைப்பு குறித்து மனித உரிமை ஆர்வலர்கள் கருத்து

யாழ்ப்பாணம், ஓக. 19

காணாமற்போனோர் அலுவலகம் நிறுவும் சட்டம் அடிப்படையில் மிகச் சிறப்பானது ஏன்று மனித உரிமை ஆர்வலர்கள் வரவேற்றுள்ளனர்.

ஆனாலும் இதேபோன்று ஏற்கனவே பல சட்டங்கள் இலங்கையில் இருந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை மோசமான பதிவையே கொண்டிருக்கின்றது. எனவே நடைமுறைப்படுத்தலிலேயே இது தங்கியுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை அரசினால் காணாமற்போனோர் அலுவலகத்தை நிரந்தரமாக நிறுவும் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக் கிழமை நிறைவேற்றப் பட்டது. இந்தச் சட்டவரைவில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றது, இதனால் தமிழ் மக்களுக்கு நன்மை கிடைக்குமா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, பன்னாட்டு மனித உரிமைச் சட்டங்களில் நிபுணத்துவம் உடையவரும், மனித உரிமை ஆர்வலருமான நிரான் அங்கிரல் தெரிவித்ததாவது:

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற ஓர் அலுவலகமே காணாமற்போனோர் அலுவலகமும். இதற்குச் சில சிறப்பு அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

எமது நாட்டில் காணாமற் போனோர் தொடர்பில் பொலிஸார் மாத்திரமே விசாரணை முன்னெடுக்கக் கூடிய நிலமை காணப்பட்டது. இதன் பின்னர் சில ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. இவர்களால், காணாமற் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியக் கூடிய அளவுக்கு ஆற்றலும் - அதிகாரமும் இருக்கவில்லை.

நல்லாட்சி அரசிடம், சிவில் சமூகப் பிரதிநிதிகள் காணாமற் போனோர் விடயத்தில் முக்கிய கோரிக்கையை முன்வைத்தனர். இனிமேல் இவ்வாறு ஆணைக் குழுக்கள் அமைத்துக் காலம் கடத்தக் கூடாது. நிரந்தர அலுவலகம் அமைத்துப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அரசினால் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகத்துக்கு நாடாளுமன்றத்தின் அரசமைப்புப் பேரவையினாலேயே உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்.

இந்த அலுவலகம் காணாமற் போனோர் தடுத்து வைக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் இடங்களை நீதிமன்ற அனுமதி பெற்றுத் தேடுதல் நடத்த வேண்டியதில்லை. அரச ஆவணங்கள், அரச அதிகாரிகளை நீதிமன்றில் விரைவு அனுமதியைப் பெற்று விசாரணைக்கு உட்படுத்தலாம். மனிதப் புதைகுழிகள் தொடர்பில் மாவட்ட நீதிமன்றத்துக்குத் தகவல் தெரியப்படுத்தி அதனைத் தோண்ட முடியும். இதன்போது கண்காணிப்புப் பணியில் ஈடுபட முடியும். இவ்வாறு சில சிறப்பு அதிகாரங்கள் இவர்களுக்கு உண்டு.

> இந்த அலுவலகம் காணாமற் போனோர் தடுத்து வைக்கப்பட் டதாகச் சந்தேகிக்கப்படும் இடங்களை நீதிமன்ற அனுமதி பெற்றுத் தேடுதல் நடத்த வேண்டியதில்லை. அரச ஆவ ணங்கள், அரச அதிகாரிகளை நீதிமன்றில் விரைவு அனுமதியைப் பெற்று விசாரணைக்கு உட்படுத்தலாம்.

காணாமற் போனோரின் உறவினர்கள் இந்த அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட பதிவுகளும் இந்த அலுவலகத்தினால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

வடக்கு - கிழக்கில் போர் காரணமாகக் காணாமற் போனவர்கள், சிவில் நடவடிக்கைக் கலவரங்களினால் காணாமற் போனவர்கள், பன்னாட்டுச் சமவாயங்களின் அடிப்படையில் பலவந்தமாகக் காணாமற் போகச் செய்தல்களின் அடிப்படையில் காணாமற் போனவர்கள் என்ற வரையறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

விசாரணை செய்யும்போது அண்மையாக இடம்பெற்ற சம்பவத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும். அத்துடன் ஆதாரங்கள் கிடைக்கும் சம்பவங்களுக்கும் முன்னுரிமை வழங்கவேண்டும்.

காணாமற் போனவர் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணையின் அறிக்கை, காணாமற் போனோரின் உறவினர்களிடம் கையளிக்கப்படும். அவர்களின் விருப்பத்துடனேயே அடுத்த கட்ட நகர்வு முன்னெடுக்கப்படும். விசாரணை அறிக்கையைக் கொண்டு உரிய வழக்குத் தொடுநர்கள், உரிய விசாரணையாளர்கள் நடவடிக்கை எடுப்பர். தற்போதைய நீதிமன்றக் கட்டமைப்பில், வழக்குத் தொடுநர்களாக சட்டமா அதிபரும், விசாரணையாளராகப் பொலிஸாருமே உள்ளனர். சிறப்பு நீதிமன்றம் இலங்கையில் இன்னமும் உருவாக்கப்படவில்லை. இதனாலேயே உரிய வழக்குத் தொடுநர்கள், உரிய விசாரணையாளர்கள் என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் பன்னாட்டுச் சட்டங்களுக்கு நிகரானது. மிகச் சிறப்பான சட்டம். இலங்கையில் ஏற்கனவே உள்ள சித்திரவதைகள் தொடர்பான சட்டமும் பன்னாட்டுச் சட்டங்களுக்கு நிகரானது. ஆனால் அது நடைமுறைப்படுத்தலில் தோல்வியான பதிவையே கொண்டிருக்கின்றது. எனவே காணாமற் போனோர் அலுவலகச் சட்டவரைவும், இதற்கு யாரை நியமிக்கப் போகின்றார்கள், எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகின்றார்கள் என்பதிலேயே தங்கியுள்ளது - என்றார். (த-5)

## மீன்பிடி அமைச்சர் யாழ். வருகின்றார்

யாழ்ப்பாணம், ஓக 19

கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள அமைச்சர் மகிந்த அமரவீர நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

யாழ். செயலகத்தில் குடாநாட்டு மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர் கலந்துரையாடுவார்.

மீனவர் எதிர்நோக்கும் பல தரப்பட்ட பிரச்சினைகள், வடகடலில் இந்திய மீனவர்களின் ஆதிக்கம் போன்ற பிரச்சினைகள் குறித்து மீனவ சங்கப் பிரதிநிதிகள் அமைச்சருக்கு விளக்கவுள்ளனர்.

காரைநகர் தோப்புக் காட்டில் படகு உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றையும், நயினாதீவு தெற்கில் மீனவர்களுக்கான பொதுநோக்கு மண்டபம் ஒன்றையும் கடற்றொழில் அமைச்சு அமைக்கவுள்ளது. அவற்றுக்கான அடிக்கல்லையும் அமைச்சர் நடுவார் என்று மாவட்டக் கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ற-17)

## வலி.தென்மேற்கு பிரதேச சபையில் அடிக்கடி சைக்கிள்கள் திருட்டு

### நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

யாப்பாணம், ஓக.19

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அடிக்கடி சைக்கிள் திருட்டுகள் இடம் பெறுகின்றன. திருட்டைத் தடுப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.- இவ்வாறு அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது-

யாழ்ப்பாணம் - காரைநகர் பிரதான வீதியில் அமைந்துள்ள வலி .தென்மேற்குப் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தின் மேல் மாடியில் பொது நூலகம் இயங்கி வருகின்றது. நூலகத் துக்கு வரும் மாணவர் உட்படப் பொதுமக்கள் பலர் தங்கள் சைக்கிள்களை அலுவலக வளாகத்தில் நிறுத்திப் பூட்டிவிட்டு மேல் மாடிக்குச் சென்று விடு வார்கள்.

இவர்களின் செயற்பாடுகளை அவதானித்துக் கொண்டிருக்கும் திருடர்கள் பூட்டிய சைக்கிளைத் திறந்து திருடிச் செல்கிறார்கள். சைக்கிளைப் பறிகொடுத்தவர்கள் இது குறித்துப் பிரதேச சபையின் கவனத்துக்குத் தெரியப்படுத்தியபோதும் எந்த வித பயனும் கிடைக்கவில்லை.

கடந்த சில மாதங்களில் பல சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன. கடந்த மாதம் ஒரு வாரத்தில் மட்டும் இரு சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன. சைக்கிள் திருட்டைத் தடுப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றனர்.

இது தொடாபாக எமக்கும் முறைப்பாடு கிடைத்துள்ளது. இவ்வாறான திருட்டைத் தடுப்பதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது. பிரதேச சபையின் காவலாளியை இந்தப் பகுதிக்கு பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் பிற்பாடு இவ்வாறான திருட்டுச் சம்பவம் இதுவரை இடம் பெறவில்லை - என்று வலி.தென் மேற்கு பிரதேச சபைச் செயலா தெரித்தார். (ற-ரி, 115)

## வெள்ள வாய்க்கால்களை துப்புரவாக்கும் பணி ஆரம்பம்

வலி.தென்மேற்கு, ஓக.19

வலி.தென் மேற்குப் பிரதேசத்திலுள்ள வெள்ள வாய்க்கால்களைத் துப்புரவு செய்யும் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக ஆனைக்கோட்டையிலுள்ள யாவில் குள வாய்க்கால் வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தொழிலாளர்களால் துப்புரவாக்கப்பட்டது.

பிரதேசத்தில் அமைந்துள்ள பல வெள்ள வாய்க்கால்கள் பல வருடங்களாகத் துப்புரவு செய்யப்படாதுள்ளன. அவற்றுள் செடிகளும், [illegible] திருப்பதால் மழை காலங்களில் வெள்ளம் [illegible] களை நோக்கி வழிந்தோட முடியாமல் தேங்கு கின்றது. அருகில் வசிக்கும் குடும்பங்கள் பாதிக்கப்படுவதுடன் போக்குவரத்துக்கும் இடையூறும் ஏற்படுகின்றது.

மழைவெள்ளம் வழிந்தோடும் வகையில் வலி. தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள வெள்ள வாய்க்கால்களைப் பருவமழை ஆரம்பமாவதற்கு முன் துப்புரவு செய்யும் வேலைத்திட்டம் செயலாளரால் ஆரம்பிக்கப்பட்டது.

முதற்கட்டமாக ஆனைக்கோட்டையிலுள்ள யாவில் குளத்தை நோக்கி வீட்டுக் காணிகள் ஊடாகச் செல்லும் 2 கி.மீ நீளமான வாய்க்கால் பிரதேச சபையின் தொழிலாளர்களால் துப்புரவாக்கப்பட்டது. ஏனைய வாய்க்கால்களும் படிப்படியாகத் துப்புரவாக்கப்படவுள்ளன. (ற-115)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஓக. 19

மகரந்தச் சேர்க்கை மேற்கொள்ளும் உயிரினங்கள் பற்றிய தெளிவூட்டலுக்கும், அவற்றின் பாதுகாப்பும் வலுவூட்டலுக்குமான இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை நடைபெற வுள்ளது என யாழ்.பல்கலைக்கழக விலங்கியல்துறை சிரேஷ்ட விரி வுரையாளரும், பயிற்சிப்பட்டறை ஒழுங்கமைப்பாளருமான திருமதி இ.ஞானேஸ்வரன் தெரிவித்தார்.

முதலாவது நாள் இன்று வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்திலும், இரண்டாவது நாள் அடுத்த மாதம் 19 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட விவசாயக் கல்லூரியிலும் பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையானது மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சகத்தின் உயிர் பல்வகைமை செயலகத்தால் நடத்தப்படுகின்றது.

யு.என்.டி.பி., ஜி.இ.எப்., எஸ்.ஜி.பி. சிறுகொடைத் திட்டத்தின் கீழ் இரசாயனப் பாவனையின்றி வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட்டு வரும் கிராமத்தைச் சேர்ந்த பெண்களுக்கு, சுற்றாடல் சார்ந்த அறிவை வளப்படுத்துவதற்கு இந்தப் பயிற்சிப்பட்டறை மேலும் உதவியாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# காணாமற்போனோர் சட்டவரைவுக்கு கருத்தறியாமையை எதிர்த்து கவனவீர்ப்பு

## கிளிநொச்சி, முல்லைத்தீவில் நேற்று நடந்தது



காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கும் சட்ட வரைவுக்கு தமது கருத்துக்களை உள்வாங்கி அமைக்கப்படவில்லை என்று தெரிவித்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் ஒரு தொகுதி உறவினர்கள் கவன வீர்ப்புப் போராட்டத்தை நேற்று மேற்கொண்டனர்.

காணாமற் போனோர் அலுவலகத்தை நிறுவும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிலையிலேயே இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

**கிளிநொச்சி**

கிளிநொச்சிமாவட்டக்காணாமற் போனவர்களின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10 மணிக்குப் போராட்டம் நடத்தப்பட்டது. கிளிநொச்சி கரடிப் போக்குச் சந்தியில் ஒன்றிணைந்த 200க்கும் மேற்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நீதி கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின் முடிவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் அலுவலகத்தில் மனுவைக் கையளித்தனர்.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டக் காணாமற் போனோரின் உறவுகள் சுமார் நூறு பேர் வரையில் திரண்டனர். முல்லைத்தீவு புனித இராயப்பர் ஆலயத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டமானது வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் அலுவலகம் வரை சென்று முடிந்தது. அவரிடம் மனு கையளிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோருக்கு மனுவின் பிரதியை வழங்க வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை விடுத்தனர்.

மனுவில்தெரிவிக்கப்பட்டதாவது-

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தைக்கிளிநொச்சி அல்லது முல்லைத்தீவில் அமைக்க வேண்டும். அவ்வாறான செயலகத்தில் முடிவெடுக்கும்நிலையிலான பன்னாட்டுப் பங்காளிகளின் பங்குபற்றல் அவசியம். குற்றவாளிகளை நீதிமன்றத்தில் மெய்ப்பித்துக் காட்டுகின்ற அதிகாரம் இந்தக் குழுவுக்கு இருக்க வேண்டும். இந்தக் குழுவானது பாதிக்கப்பட்டவர்களின் விருப்பக் கருத்துக்களுக்கு அமைய உருவாக்கப் படுவதுடன் தமிழ்ச் சட்டத்தரணிகளும் நியமிக்கப்பட வேண்டும். இந்தக் குழுவின் முடிவுகள் குற்றவியல் பொறுப்பை ஏற்படுத்தக் கூடியவையாகவும் பாதிக்கப்பட்டவர்கள் சுதந்திரமாகவும் அச்சுறுத்தல் இன்றியும் செயற்படக் கூடிய அலுவலகமாக காணாமல் ஆக்கப்பட்டோர் செயலகம் அமைக்கப்பட வேண்டும் – என்றுள்ளது. (ற-5)

## பெருந்திருவிழா

வட்டுக்கோட்டை, ஓக.19

வட்டுக்கோட்டை அராலி மேற்கு நொச்சியம்பதி சித்தி விநாயகர் கோயிலின் மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 10 நாள்கள் உற்சவம் நடைபெறும். எதிர்வரும் புதன்கிழமை 31ஆம் திகதி தேர்த்திருவிழா நடைபெறும். (ற-9)

## கால்நடை வைத்திய நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஓக. 19

வடக்கு மாகாணக் கால்நடை சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கால்நடை வைத்திய நடுமாடும் சேவை நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4 மணி வரை மன்னார் கோட்டைக்காடு அர சினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் சி.வசிகரன் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடமாகாணத்தில் உள்ள கால்நடைப் பண்ணையாளர்கள் மற்றும் செல்லப் பிராணிகளை வளர்ப்போருக்காக வடமாகாண விவசாய அமைச்சரின் வழிகாட்டுதலின் கீழ் மாவட்டம் தோறும் மாதாந்தம் கால்நடை வைத்திய நடமாடும் சேவையை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நாளை மன்னாரில் கால்நடை வைத்தியசேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

கால்நடைகளுக்கான இலவச வைத்திய சேவைகள், காப்புறுதிச் சேவைகள், இனவிருத்திச் சேவைகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகளைப் பண்ணையாளர்கள் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி மற்றும் இனப் பெருக்கக் கட்டுப்பாட்டுச் சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.- என்றார். (ற-ரி)

## ஒதியமலைக் குளத்தில் சிறுவனின் சடலம் மீட்பு

முல்லைத்தீவு, ஓக. 19

முல்லைத்தீவு ஒதியமலைக் குளத்திலிருந்து ஒன்பது வயதுச் சிறுவன் ஒருவனது சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது. ஒதியமலையைச் சேர்ந்த கலைவாணன் (வயது-9) என்ற சிறுவனது சடலமே மீட்கப்பட்டது.

சிறுவன் கடந்த செவ்வாய்க் கிழமை வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ளான். பின்னர் வீடு திரும்பவில்லை. தேடுதல் மேற்கொள்ளப்பட்டபோது குளத்திலிருந்து சடலம் மீட்கப்பட்டது.

சடலம்முல்லைத்தீவுமாவட்டவைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ற-5-10)

# அமைச்சர்களைப் பதவிகளில் வைத்து விசாரிப்பது முறையான செயல் அல்ல

### வடக்கு உறுப்பினர் சர்வேஸ்வரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக. 19

விசாரணை நடத்தப்படும்போது விசாரணைக்குள்ளாகும் நபரை அவர் வகிக்கும் பதவியில் வைத்துக் கொண்டு விசாரணை செய்வது முறையான செயல் இல்லை. இது விசாரணையைப் பாதிக்கும். அதன் நம்பகத்தன்மையைக் கேள்விக் குறியாக்கும். அமைச்சர்கள் மீதான விசாரணையின் போதும் இது தொடர்பில் கவனம் எடுக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார். வடக்கு மாகாண சபையின் 59 ஆவது அமர்வு கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. அதில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது-

விசாரணையின் நம்பகத் தன்மை பாதிக்காதவாறு அமைச்சர்கள் மீதான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். சாதாரணமாகக் குறித்த நபர் மீதோ அல்லது அதிகாரியின் மீதோ விசாரணை நடத்தப் படும்போது அவரை அந்தப் பதவியில் வைத்துக் கொண்டு செய்வது வழக்கமான முறை இல்லை. அவ்வாறு பதவியில் இருக்கும்போது விசாரணையை மேற்கொண்டால் அந்த விசாரணையின் நம்பகத் தன்மையைப் பாதிக்கும்.

முதலமைச்சர் இந்த விடயத்தை கவனத்தில் எடுக்க வேண்டும் - என்றார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இது விசாரணை அல்ல, ஆய்வு என்று குறிப்பிட்டார். ஆங்கிலத்தில் 'இன்வெஸ்ரிகேசன்'. அதனைத் தமிழ்ப்படுத்தும்போது விசாரணை என்று குறிப்பிடப்பட்டது என்றார். (ற-5-ரி)

# குற்றஞ்சாட்டப்பட்டவுடன் விலகியிருக்க வேண்டும் வடக்கு அமைச்சர்கள்

### தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலர் ஆனந்தசங்கரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டவுடன் அவை நிரூபிக்கப்படும் வரையில் அவர்கள் அமைச்சுப் பதவிகளிலிருந்து தாமாகவே விலகியிருக்க வேண்டும். அதுதான் ஒழுக்கமான அரசியல் பண்பாடாகும். தங்களை மான முள்ள – வீரமுள்ள – அநீதிகளைத் தட்டிக்கேட்கும் தீரர்கள் என்று கூறிக் கொண்டு பதவி மீதுள்ள ஆசையால் ஒட்டிக் கொண்டிருப்பது மிகவும் நகைப்புக்குரியது.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது-

வட மாகாணசபையில் அமைச்சர்களின் நடவடிக்கைகள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்குக் குழு அமைக்கப்பட்டு விசாரணை செய்வதற்கான தீர்மானத்தை வட மாகாணசபை நிறைவேற்றியுள்ளது. இது எனக்கு மிகவும் அதிர்ச்சியைத் தருகின்றது. தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல் பிரமுகர்கள் எவர்மீதும் எந்தவொரு காலகட்டத்திலும் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படவும் இல்லை என்பது மட்டுமல்ல அவ்வாறான செயலில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரும் ஈடுபடவும் இல்லை. எல்லாவற்றையும் இழந்த எமது மக்களுக்கு ஏதாவது சேவை செய்வார்கள் என்ற எண்ணத்தில் தான் தமிழ் மக்கள் அவர்களைத் தெரிவு செய்தார்கள். இவர்கள் மக்களுக்குச் சேவை எதுவும் செய்யாமலேயே ஊழல் குற்றச் சாட்டுக்களுக்கு மட்டும் ஆளாகியுள்ளார்கள்.

குற்றச்சாட்டுக்கள் உண்மையா, பொய்யா என்பது வேறு விடயம். குற்றச்சாட்டுகளைக் கேள்விப்பட்டவுடன் தம்மீதுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படும்வரை அமைச்சுப் பதவிகளில் இருந்து தாமாகவே விலகியிருக்க வேண்டும். அதுதான் ஒழுக்கமான அரசியல் பண்பாடாகும்.

தந்தை செல்வா நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலங்களில் அரசு வழங்கிய வாகனத்தைக் கூட வாங்காமல் ஒரு பழைய காரிலேயே பயணம் செய்தவர். இன்று அவர் வழியைப் பின்பற்றுகிறோம் என்று கூறிக்கொண்டு மிகவும் விலை உயர்ந்த அதி நவீன கிட்டத்தட்ட 60 மில்லியன் ரூபா பெறுமதியான வாகனத்தை வரி ஏய்ப்புச் செய்து ஒரு தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பெற்றுள்ளார் என்று அறிகின்றோம். அவர் இதற்கு எதுவித மறுப்பும் தெரிவிக்காதது மட்டுமல்ல சக நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் இது மூடி மறைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாகனம் ஒன்றை வாங்குவதற்காக ஒரு கோடி ரூபா கடன் கொடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. வாக்களித்த மக்கள் உடல் உறுப்புக்களை இழந்து சக்கர நாற்காலிகளையும், ஊன்றுகோல்களையும் பாவித்து அலைந்து திரிகின்றனர். இவர்கள் வாங்கும் கடனில் பாதியளவு பணத்தையாவது பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செலவு செய்வார்களா? வெறுமனே வீர வசனங்களும், வெற்றுக் கோசங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடத்துவதிலேயே காலத்தைக் கழிக்காமல் இவ்வாறான செயல்களைச் செய்வதற்கும் இவர்கள் முன்வர வேண்டும் – என்றார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹன்ரர்-சைக்கிள்விபத்தில் இளைஞனின் கை பாதிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 19
பலாலிவீதி–கோண்டாவில் சந்தியில், நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற ஹன்ரர்–சைக்கிள் விபத்தில் சைக்கிளில் பயணம் செய்த வரது ஒரு கை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. கோண்டாவிலைச் சேர்ந்த மிதுசன் (வயது- 25) என்பவரே பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

திருநெல்வேலிப் பகுதியில் இருந்து சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் கோண்டாவில் சந்தியில் இருபாலை நோக்கித் திரும்பிய வேளையில், பலாலி வீதியூடாக யாழ். நகர் நோக்கி வந்து கொண்டிருந்த ஹன்ரர், சைக்கிளில் சென்ற இளைஞர்களை மோதியது. விபத்தின்போது சைக்கிளின் பின்னால் இருந்து பயணித்தவர் கையில் பலத்த காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் - என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்ற வேளையில், ஹன்ரர் வாகனத்தைச் செலுத்தி வந்தவர், விபத்து இடம்பெற்றதும் தனது ஆசனத்திலிருந்து இறங்கினார் என்றும், வாகனத்தில் கூடப் பயணித்து வந்தவர் சாரதி ஆசனத்தில் அமர்ந்தார் என்றும் விபத்தை நேரில் கண்ட பொதுமக்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து, ஹன்ரர் வாகனத்தில் பயணித்த இருவரையும் பொலிஸார், கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். (ந-5-101)

## யானைகளின் உயிரிழப்பை தடுக்க ரயில் வேகத்தை தணிக்க வேண்டும்

### சுற்றாடல் அமைச்சு கோரிக்கை

யாழ்ப்பாணம் ஓக. 19
யானைகள் இடம்பெயரும் பாதைகளில் ரயில் பாதைகள் குறுக்கிடுகின்றன. அந்தப் பகுதிகளில் ரயில்கள் 15 கிலோமீற்றர் வரையில் வேகத்தைத் தணிக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கேட்டுள்ளார்.

தலைமன்னார் - மதவாச்சி ரயில்ப் பாதையில் ரயில் மோதியதில் நான்கு யானைகள் உயிரிழந்தன. அது தொடர்பில் சுற்றாடல் அமைச்சால் அனுப்பப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:
யானைக்குத் தினமும் 100 லீற்றர் தண்ணீரும், 150 கிலோ எடையுள்ள இலை தழைகளும் தேவைப்படுகின்றன. இவ்வளவு தண்ணீரையும் தீனியையும் ஒரு சிறிய காட்டுத் துண்டில் இருந்து பெறமுடியாது. அதனால்தான் யானைகள் அடுத்த காட்டுத் துண்டை நோக்கி இடம்பெயர்கின்றன.

யானைகள் ஒருபோதும் வழித்தடங்களை மாற்றுவதில்லை. ஒரு காட்டுத் துண்டில் இருந்து இன்னொரு காட்டுத் துண்டுக்கு யானைகள் இடம்பெயரும் கடவைப் பாதையில் ரயில் வீதிகளோ, தெருக்களோ குறுக்கிட்டால் அந்தப் பகுதிகளில் யானைகளின் நடமாட்டம் குறித்த எச்சரிக்கைகள் செய்யப்படுகின்றன. இந்தக் கடவைப் பாதைகளில் ரயில்கள் மணித்தியாலத்துக்கு 15 கிலோமீற்றர் வேகத்தில் செல்ல வேண்டும் என்றும் உள்ளது. ஆனால், ரயில்கள் வேகக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்காததால் யானைகள் அநியாயமாக உயிரிழக்கின்றன.

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் வடக்கில் ரயில் மோதியதில் 12 யானைகள் கொல்லப்பட்டுள்ளன. ஆசிய யானைகளில் இலங்கையில் உள்ளது தனித்துவமான ஒரு உப இனம். ஒரு காலத்தில் 20 ஆயிரம் வரை இருந்த இவை, இப்போது ஐயாயிரத்துக்கும் கீழாகக் குறைந்துள்ளன. அழியும் உயிரினங்களின் பட்டியலில் இலங்கை யானைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

ரயில்களால் யானைகள் உயிரிழப்பதைத் தடுப்பதற்கு கடவைப் பாதைகளில் ரயில்களின் வேகத்தைத் தணிக்க ரயில்வேத் திணைக்களம் ஏற்பாடு செய்யவேண்டும் - என்றுள்ளது. (ந-5)

## வாழ்வாதாரத்துக்காக சேகரித்த தேனைப் பறித்தனர் அதிகாரிகள்

### பாதிக்கப்பட்டவர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 19
நெடுங்கேணி ஒலுமடு மக்கள் வாழ்வாதாரத்துக்காக காட்டில் தேனைச் சேகரித்து எடுத்து வந்தபோது வனப்பரிபாலனத் திணைக்களத்தினர் அதனைக் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

நெடுங்கேணி ஒலுமடுப் பகுதியில் வசிக்கும் நால்வர் கடந்த செவ்வாய்க்கிழமை காலையில் காட்டுக்குச் சென்று தேன் சேகரித்து மாலையில் வீடு திரும்பிய வேளையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்ததாவது:
நாம் ஆண்டாண்டு காலமாகத் தேன் எடுக்கும் தொழிலையே செய்து வருகின்றோம். அதை நம்பியே எமது வாழ்வாதாரம் உள்ளது. தேனை எடுப்பது என்பது ஒரு நாள் பணியும் அல்ல. காடு முழுவதும் தேடி இனம் காணப்பட்டதும் மறுநாள் அந்த உயரத்துக்கு ஏற்ப பொருள்களைச் சேகரித்து, மூன்றாம் நாளே அதனைக் கையில் பெறமுடியும். இவ்வாறு ஓர் இடத்தில் இனம் கானப்பட்ட தேனை எடுப்பதற்கு 4 பேரும் மூன்று நாள் முயற்சியின் பயனாக 7 போத்தல் தேன் எடுத்தோம்.

அதனை வீட்டுக்குக் கொண்டு வரும் வழியில் வனப்பரிபாலனத் திணைக்கள அதிகாரிகள் பறிமுதல் செய்து விட்டனர். இது தொடர்பில் எம்மால் பிரதேச செயலாளருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது- என்றனர். (ந-5-101)




இந்த வாரம் புதுவிதியில்...
காணி பிடிப்போம் காணி பிடிப்போம்
ஆமி ஓடி வா...
மைனர் மயிலன்
அந்தக் கால சேட்டைகள்
செல்வக் கந்தனா?
'செல்பி'க் கந்தனா?
புதுவிதி
வாசகர்களுக்கு
ரூபா
5000
மேற்பட்ட பரிசிலை வெல்லும் வாய்ப்பு
இன்னும் சிறுகதை, சிறுவர் பகுதி, உலக விடயங்கள்
என வாசிப்புக்கு தீனி போடும் பகுதிகள்.
விலை - 20/ = மட்டுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரியின் நல்லிணக்க முயற்சி பாராட்டுக்குரியது

## அஸ்கிரிய பீடாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 19

இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முயற்சி பாராட்டுக்குரியது.

இவ்வாறு அஸ்கிரிய பீடாதிபதி வராகொட சிறீ ஞானரத்ன தேரர் தெரிவித்தார்.

பொல்கொல்ல சிறீ சலவான போதிமலு விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நல்ல சிங்கள பௌத்தர். நாட்டின் அனைத்து இன சமூகங்கள் மற்றும் மதங்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு எடுத்துக் கொண்டுள்ள முயற்சி வரவேற்கப்பட வேண்டியதாகும்.

**" நாட்டில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார். மக்களிடையே பேதங்கள் அற்றிருப்பது சமாதானத்துக்கு அவசியமானது. பௌத்த மக்கள் ஏனைய இன சமூகங்களுக்கு தொல்லை கொடுப்பவர்கள் அல்லர். "**

நாட்டில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார். மக்களிடையே பேதங்கள் அற்றிருப்பது சமாதானத்துக்கு அவசியமானது.

பௌத்த மக்கள் ஏனைய இன சமூகங்களுக்கு தொல்லை கொடுப்பவர்கள் அல்லர். இந்த நாட்டை ஆட்சி செய்த ஏனைய ஆட்சியாளர்களைப் போன்றே ஜனாதிபதியும் நல்ல பௌத்தராவார் - என்றார். (ற-5)

# 82 வயதுப் பெண் மீது காலியில் வன்புணர்வு

கொழும்பு, ஓக. 19

82 வயதான மூதாட்டி ஒருவர் காலியில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

வன்புணர்வு செய்த நபரை கைது செய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பெண் தனியாக வீட்டில் வசித்துள்ளார். அவரது வீட்டின் அருகில் சில உறவினர்களின் வீடுகளும் உள்ளன என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி இரவு 7 மணியளவில் சந்தேகநபர் வீட்டுக்குள் புகுந்துள்ளார். இரவு முழுவதும் பெண் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

சந்தேக நபர் குறித்து முக்கியமான பல தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் - அவற்றின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் காலிப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-5)

# நகரக் கட்டுமான அனுபவங்களை வழங்க சீன நிறுவனம் இணக்கம்

கொழும்பு, ஓக. 19

பெருநகர மற்றும் துறைமுக கட்டுமானம் தொடர்பான தமது நிபுணத்துவம் மற்றும் அனுபவங்களை இலங்கைக்கு வழங்க, சீனாவின் மேர்ச் சன்ட்ஸ் குழுமத்தின் தலைவர் லி ஜியான் ஹோங் இணங்கினார்.

சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, சீன மேர்ச் சன்ட்ஸ் குழுமத்தின் தலைவர் லி ஜியான்ஹோங்குடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடத்திய பேச்சில் இதற்கான இணக்கப்பாடு ஏற்பட்டது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்துக்கு உதவுவதற்கும், லி ஜியான் ஹோங் விருப்பம் வெளியிட்டார்.

கொழும்புத்துறைமுக நகரத் திட்டம் மற்றும் அம்பாந்தோட்டை அபிவிருத்தித் திட்டம் ஆகிய இடங்களில் இலங்கை அரசுக்கு உதவிகளை வழங்கவும், சீன மேர்ச்சன்ட்ஸ் குழுமம் இணங்கியுள்ளது. (ற-5)

# இடம்பெயர்ந்தோர் தொடர்பில் தேசிய கொள்கை

கொழும்பு, ஓக. 19

இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பிலான தேசிய கொள்கை உருவாக்கப்படவுள்ளது என்று ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பிலான தேசிய கொள்கைகளை உருவாக்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மோதலால் ஏற்பட்ட இடம்பெயர்வுக்காக நீடிக்கக் கூடிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான தேசியக் கொள்கையொன்றின் அவசியம் உணரப்பட்டது. பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி அதைத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனால் யோசனை முன்வைக்கப்பட்டது. அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது. (ற-5)

# பொலிஸாரிடம் வல்லப்பட்டையை விற்க முயன்ற பொலிஸ் அதிகாரி!

## தற்போது கம்பி எண்ணுகிறார்

கொழும்பு, ஓக. 19

இலங்கையில் விற்பனை செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ள வல்லப்பட்டையைப் பொலிஸாருக்கு விற்பனை செய்ய முயற்சித்த பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பாலிந்தநுவர காட்டுப் பகுதியில் வெட்டப்பட்ட ஒன்றரைக் கிலோ கிராம் வல்லப்பட்டையை விற்பனை செய்ய முயற்சித்த போதே, அவர் கைது செய்யப்பட்டார்.



கைதுசெய்யப்பட்டவர் வாழைத் தோட்ட பொலிஸ் நிலையத்தின் குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி என்று கூறப்படுகின்றது.

மாறு வேடத்தில் சென்ற பொலிஸாருக்குக் குறித்த அதிகாரி வல்லப்பட்டையை விற்பனை செய்ய முயற்சித்தார். மத்துகம பிரதேசத்தில் களுத்துறை மோசடி தவிர்ப்பு பொலிஸ் உத்தியோகத்தர்கள், குறித்த அதிகாரியையும் அவரது சகோதரர் உள்ளிட்ட நான்கு பேரையும் கைது செய்தனர்.

சந்தேகநபரான பொலிஸ் அதிகாரியின் சகோதரர் இராணுவ படைச் சிப்பாய் என்றும் கூறப்பட்டது.

வல்லப்பட்டையை அளுத்கம பிரதேச வர்த்தகர் ஒருவருக்கு 17 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயற்சிக்கப்பட்டது. சில நாள்கள் முகவர்கள் ஊடாகப் பேசப்பட்டு இந்தக்கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டுள்ளது.

இந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பில் சந்தேகம் கொண்ட வர்த்தகர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். வல்லப்பட்டையை வாங்குவதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்கள் மாறுவேடமிட்டுச் சென்றனர்.

கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டபோது, வல்லப்பட்டையுடன் பொலிஸ் அதிகாரி, இராணுவப்படைச் சிப்பாய் உள்ளிட்ட நான்கு பேரும் கைது செய்யப்பட்டதுடன் வல்லப்பட்டையும் மீட்கப்பட்டது.

சந்தேகநபர்கள் மத்துகம நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (ற-5)

# சு.கவைப் பிளவுபடுத்த முயன்றால் எம்.பி. பதவிகள் கூட பறிக்கப்படும்

## ஜனாதிபதி மைத்திரிபால எச்சரிக்கை



கொழும்பு, ஓக. 19

கட்சியின் ஒழுக்கத்தை மீறி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்த முனைபவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளையும் இழக்க நேரிடும்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபா சிறிசேன எச்சரித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 40 புதிய அமைப்பாளர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

அவர் தெரிவித்ததாவது:

கட்சியின் ஒழுக்கத்தை மீறி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்த 51 நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைப்பாளர் பதவிகளை மாத்திரமன்றி, நாடாளுமன்ற ஆசனங்களையும் இழக்கும் நிலை ஏற்படும்.

இலங்கையில் ஒரு கட்சியை உடைத்துக் கொண்டு உருவாக்கப்பட்ட கட்சி, ஆட்சியைப் பிடித்ததாக வரலாறு இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து, புதிய கட்சியை உருவாக்கிய காமினி திசநாயக்கவும், லலித் அத்துலத்முதலியும் அதற்கு உதாரணம்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில், கை சின்னத்தில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி போட்டியிடும் - என்றார். (ற-5)

# பண்டாரநாயக்க கொள்கைகளை உதாசீனப்படுத்துகிறார் மைத்திரி

## குற்றஞ்சாட்டுகின்றார் மகிந்த

கொழும்பு, ஓக. 19

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறுவுநர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவின் கொள்கைகளை உதாசீனம் செய்கின்றார் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குற்றஞ் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் சிலரை நீக்கி, புதிய அமைப்பாளர்களை நேற்றுமுன்தினம் நியமித்தார். அதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த போதே மகிந்த இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனால் கட்சியின் உறுப்பினர்கள் கட்சியை விட்டு வெளியேற நேரிடும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டபோதும், பண்டாரநாயக்க அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அண்மைக் காலமாகக் கட்சியின் செயற்பாடுகள் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன - என்றார். (ற-5)

# சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கு மைத்திரியை போன்றோர் தேவை

## யுனெஸ்கோ அமைப்பின் பணிப்பாளர் புகழாரம்

கொழும்பு, ஓக. 19

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைப்பதற்கும் சூழலைப் பாதுகாக்கும் உடன்படிக்கைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைப் போன்ற நேர்மையான அரசியல் தலைமைகள் அவசியம்.

இவ்வாறு யுனெஸ்கோ அமைப்பின் பணிப்பாளர் எரினா பொகோவா தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அழைப்பில் இலங்கை வந்த யுனெஸ்கோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கடந்த சில நாள்களாக இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணம் மேற்கொண்டேன் என்று - குறிப்பிட்ட எரினா, இயற்கை எழில் மிகுந்த நாட்டின் கலாசார மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்காக யுனெஸ்கோவால் நிதி உதவி வழங்குவதற்கு வாய்ப்பு கிடைத்திருப்பதையிட்டுப் பெரிதும் மகிழ்வடைகின்றேன் என்றும் கூறினார்.

இலங்கையில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பிப் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக தற்போதைய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை பாராட்டுகின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் கலாசார மற்றும் கல்வி ரீதியான நடவடிக்கைகளுக்கு யுனெஸ்கோ மிக நீண்ட காலமாக வழங்கிவரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, எதிர்காலத்திலும் இந்த உதவிகள் தொடர வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றும் கூறினார்.

பரிஸ் நகரத்தில் நடைபெற்ற காலநிலை மாற்றம் தொடர்பான உச்சி மாநாட்டில் எரினாவுடனான் கலந்துரையாடலை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, சூழலைப் பாதுகாக்கும் பன்னாட்டு உடன்பாடுகளுக்கு ஏற்ப செயற்படுவதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளது என்று தெரிவித்தார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிகளுக்கு விச ஊசி ஏற்றப்பட்டது என்பது பொய்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 19
முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வின்போது ஊசி ஏற்றப்பட்டது என்றும்-அதனால் அவர்கள் புற்றுநோய் சார்ந்த நோய்கள் ஏற்பட்டு உயிரிழக்கின்றனர் என்றும்-வடக்கில் உள்ள சில அரசியல்வாதிகள் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.



தெல்கொட சிறீ சம்போதி விகாரையில் நேற்று செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
நாட்டு மக்களிடத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு, அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.
இந்த நிலையில் சில அரசியல்வாதிகள் மக்களிடத்தில் போலியான பரப்புரைகளை மேற்கொண்டு, நாட்டின் நல்லிணக்கத்துக்குச் சவால் விடுப்பது கவலைக்குரிய செயல் - என்றார். (ற-5)



## உடல் உறுப்புத் தான விவரம் சாரதி அனுமதி பத்திரத்தில்

*அமைச்சர் ராஜித தகவல்*

கொழும்பு, ஓக. 19
புதிய சாரதி அனுமதிப் பத்திரத்தில் உடல் உறுப்புத் தானம் பற்றி குறிப்பிடப்படும். இது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும்.
இவ்வாறு அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் இவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
எதிர்வரும் காலங்களில் சாரதி அனுமதிப் பத்திரத்தில் உடல் உறுப்புத் தானம் செய்ய விரும்புகின்றனரா? இல்லையா என்பது பற்றிய விவரங்களும் உள்ளடக்கப்படும்.
புதிதாக அறிமுகப் படுத்தப்படும் டிஜிட்டல் சாரதி அனுமதிப் பத்திரத்தில் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டிருக்கும். உடல் உறுப்புத் தானம் செய்பவர் முன்வராமையால் உடல் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.
விபத்துக்களில் உயிரிழக்கும் சாரதிகளின் உடல் உறுப்புக்களை நோயாளர்களுக்குப் பயன்படுத்த முடியும் - என்றார். (ற-5)

# வடக்கின் பிரச்சினைகள் முழுமையாகத் தீரவில்லை

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஒப்புதல்



கொழும்பு, ஓக. 19
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் ஒத்துழைத்துச் செயற்படுகின்றமை வரவேற்கதக்கது. எனினும் வடக்கின் பிரச்சினைகளுக்கு முழுமையாகத் தீர்வு காணப்படவில்லை. இதனை ஏற்றுக் கொள்கின்றேன்.
இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காக குமாரரணதுங்க தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
ஆட்சி மாற்றத்தின் பின்னர் வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஜனநாயக செயற்பாடுகளும், வடக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பில் அரசு கையாளும் பொறிமுறைகளும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதன்மை அரசியல் கட்சிகளைத் திருப்தியடையச் செய்துள்ளது என்று நம்புகின்றேன்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுத்துச் செயற்படுகின்றமை வரவேற்கதக்கது. எனினும் வடக்கில் பிரச்சினைகளுக்கு முழுமையாகத் தீர்வு காணப்படவில்லை. இதனை நான் ஏற்றுக்கொள்கின்றேன். நல்லிணக்கத்தைப் பலப்படுத்தவும் தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கும் எடுத்துள்ள வேலைத் திட்டம் ஆரம்பமாகி ஒரு வருடத்துக்கு சற்று அதிகமான காலமே கடந் துள்ளது.
போர் முடிந்து 7 வருடங்கள் கடந்திருந்தபோதிலும், குறித்த கால கட்டத்துக்குள் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கு எந்த விதமான பாதுகாப்பையும், அவர்களுக்கான நல்லிணக்க செயற்பாடுகளையும் கடந்த அரசு முன்னெடுக்கவில்லை. வடக்கு- கிழக்கு மக்கள் சிக்கல்களை எதிர் கொண்டிருந்தனர்.
ஆட்சி மாற்றத்தின் பின்னர் நாம் மீண்டும் ஜனநாயகத்தைக் கையில் எடுத்திருக்கின்ற நிலையில், வடக்கு- கிழக்கு மக்களுக்கு ஏற்ற வகையில் தீர்வுகளை வழங்கச் செயற்பட்டு வருகின்றோம்.
வடமாகாண சபையும் வடக்கின் முதல்வரும் முன்வைக்கும் சில காரணிகள் ஏற்றுக்கொள்ள முடியாத போதிலும், வடக்கில் இன்னும் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதையும் வடக்கு மக்கள் இன்னும் முழுமையான விடுதலையை அடையவில்லை என்பதையும் நான் ஏற்றுக்கொள்கின்றேன். வடக்கு-கிழக்கில் பலமான ஜனநாயகச் செயற்பாடுகளை மேற்கொள்ள அரசு பெருந்தொகையான பணத்தை ஒதுக்கீடு செய்துள்ளது.
போரில் ஏதிலியாக்கப்பட்ட மக்களுக்கான வீடுகளையும் அவர்களது காணிகளையும் அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்க அரசு துரிதமாகச் செயற்பட்டு வருகின்றது. இன்னும் 70 ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகளையும் தமிழ் மக்களுக்கான கல்வி, சுகாதார மற்றும் அடிப்படை வசதிகளையும் உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்கின்றேன்.
காணாமற் போனோர் அலுவலகம் நிறுவும் சட்டத்தின் ஊடாக நிச்சயமாகத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். இறுதிப்போரில் காணாமற்போன மக்கள் தொடர்பில் பன்னாட்டுச் சமூகம் தொடர்ச்சியாகக் கேள்வி எழுப்பிவரும் நிலையில், அரசு இந்த விடயம் தொடர்பில் துரிதகதியில் செயற்படவேண்டிய தேவை உள்ளது. ஆகவே ஐந்து ஆண்டு காலத்துக்குள் இந்தப் பிரச்சினைகள் அனைத்துக்கும் முற்றுப் புள்ளி வைக்கவேண்டும் - என்றார். (ற-5)



## பன்னிரண்டாம் திருவிழா

### ஒரு ரூபா போதும்

கல்லும் மணலும் கடையும் மட்டும்
கடவுளை எண்ண வைக்காது
காமம் பீறிடும் கவர்ச்சி உடைகள்
கடவுளை நெருங்க விடாது
வெல்லும் பேச்சும் வீசும் சோறும்
வேஷமும் வணங்க விடாது
வீடும் மாடி வாகன வசதிகள்
விளம்பரம் கும்பிட விடாது
பொல்லும் வாளும் போதையும் குடியும்
பொய்யும் போற்றிட விடாது
புழுகும் புகழும், உருட்டும், பிரட்டும்
பூஜையைப் பார்க்க விடாது
அல்லும் பகலும் அலைபேசியுடனும்
அலைந்தால் ஆணவம் போகாது
ஆறுமுகன் திருமுருகனைப் பார்த்திட
ஆயிரம் வேண்டாம் ஒருரூபா போதும்

- கே.எஸ்.சிவஞானராஜா

### ஆட்கொண்டருள்வாய் கந்தா

நல்லையம் பதியினிலே நம்மவர்க்கு
நலமும் வளமும் ஒருங்கே அருள்பவனாய்
நல்லாட்சி புரிபவனே கதிர்வேலா கந்தா
நாடித் துதிக்கின்றோம் கோலமயிலோனே

கணம்தோறும் கலக்கம் இங்கே
கலாசாரம் பண்பாடு தடம்புரள்கிறது
பலரது பார்வையிலும் செயலிலும்
பகட்டுத் தனத்தையே பார்க்க முடிகிறது

பிறந்த உடனே பிணமாகுது பிள்ளை
பிஞ்சு மகவுக்கும் கொடுக்கிறார் தொல்லை
பள்ளியில் மயங்குது பாடவேளையில் பிள்ளை
சோதனையில் வைத்தியர் சொல்கிறார் உண்மை

மக்கள் மனது மலர வேண்டும் கந்தா
மாபெரும் மாற்றங்கள் வேண்டும் கந்தா
இந்நிலை மாற வேண்டும் கந்தா
இறை நீ ஆட்கொண்டருள்வாய் கந்தா

கரவை மத்தி. யாழினி வியிகரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கு வாழ் மலையக மக்களுக்கு விடிவு கிட்டுவது எப்போது...?

*நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்பும் வகையில், அரசு மேற்கொள்ளும் அனைத்துத் திட்டங்களின் போதும், நாம் எங்களுக்கு உரிய, உரிமைகளைப் பெறும் வகையிலான பொறிமுறை தோற்றுவிக்கப்பட வேண்டும்.

*முப்பது வருட காலத்தைய போர் அனுபவத்தின் பின்னர், இப்போது, நல்லிணக்கத்தின் அவசியம் குறித்துப் பேசப்படுகிறது.

* இனங்களுக்கு இடையே நல்லிணக்கம் உண்டாக வேண்டுமெனில், அனைத்து இன மக்களும், சம உரிமைகளுடனும், சமவாய்ப்புகளுடனும் வாழ்வதற்கு வகை செய்யப்பட்டாக வேண்டும்.

* இனக் கலவரத்தின் விளைவாக, இங்கு இடம்பெயர்ந்து வந்த நாம், போரின்போது, உயிர் இழப்புகளையும், சொத்து அழிவுகளையும், இடப் பெயர்வுகளையும் சந்திக்க நேர்ந்தது.

* அவ்வாறிருந்தும், அரசியல் பிரதிநிதித்துவம், காணிகளைப் பெறுதல், கல்வி, உட்கட்டுமானம் மற்றும் தொழில் வாய்ப்புகளில் பல்வேறு வழிகளாலும் நாம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுகிறோம்.

ஆகையால் --

இங்கு வாழும் மலையக மக்களாகிய நாம், ஏனைய மக்களைப் போன்று, பொருளாதாரத்தையும் அரசியல் பிரதிநிதித்துவத்தையும் பேணிக் காத்து வாழ்வதற்கான, உரிமைகளைப் பெறுவதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட வேண்டும்--

நாட்டில், நல்லிணக்கத்தைப் பேணிக் காக்க வேண்டும் எனின், அனைத்துத் திட்டங்களிலும், நாம் எமக்குரிய உரிமைகளைப் பெறுவதற்கான நல்லிணக்கப் பொறி முறை வேண்டும்-- என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வவுனியா வாழ் மலையகத் தமிழ் மக்கள் சார்பில் நல்லிணக்கச் செயலணியிடம் முன்வைக்கப்பட்ட மேற்காட்டப்பட்ட வேண்டுகைகள், கோரிக்கைகள் நியாயமானது மட்டுமன்றி, அவசியமானவையும் ஆகும்.

காலம் காலமாக மலையகத் தமிழ் மக்கள் அரசியல், பொருளாதார மற்றும் உரிமைகள் மறுக்கப்பட்டும், இல்லையேல் புறக்கணிக்கப்பட்டும் வரும், வாழும் நிலைமை நீண்டு வருகிறது.

1958, 1977, 1983 ஆம் ஆண்டுகளில் தெற்கு மற்றும் பெரும்பான்மையின இனவாத அரசுகள் மலையகத் தமிழர்களை அடக்கி ஒடுக்கியமை இந்த நாட்டின் இருண்ட வரலாறு என்பதில் சந்தேகமில்லை.

நல்லாட்சி என்றும், நல்லிணக்கம் என்றும் வாய்கிழியக் கத்தும் இப்போதைய அரசும் முந்தைய பாதையில் கால் பதிக்க எண்ணலாகாது.

பலவகைப்பட்ட இழப்புக்களையும், வாழ்வியல் பற்றாக்குறைகளையும், துன்ப - துயரங் களையும் சுமந்து வாழும் இந்த மக்களுக்கு உதவி புரிந்து அவர்களைக் கைதூக்கிவிட வேண்டும்.

அவர்களது அபிலாசைகள் எந்த வகையிலும் தட்டிக்கழிக்க முடியாதவை. அரசு மட்டுமன்றி, மனிதாபிமானம் உள்ள சாரார், அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி, மனித நேயம் உள்ள சகல தரப்புகளும், இந்த மக்கள் தரப்பினருக்கு கைகொடுத்து உயர்த்திவிட வேண்டும்.



சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்

நாடாளுமன்றத்தில் உரத்துக் கத்தி குழப்பகரமாக நடந்து கொள்வதன் மூலம் பொதுமக்களின் கவனத்தைப் பெரிதும் கவருவதில் கூட்டுஎதிர்க்கட்சியினர் தமக்கு உரிய பங்குக்கு அதிகமாகவே இதுவரை வெற்றி பெற்று வந்துள்ளார்கள். எதுவானாலும் கடந்த வாரம் அரசின் முக்கிய சட்ட வரைவு ஒன்றை நிறைவேற்றிக் கொள்வதற்கு இடம்தராத வகையில் சதி முயற்சியில் இறங்கிய அவர்கள், தாம் உருவாக்கிய சதியில் தாமே சிக்கி மொக்கயீனப்பட்டுள்ளார்கள்.

கூட்டு எதிர்க்கட்சியினரின் தவறான கணிப்பின் காரணமாக, அரசு காணாமற் போனோர் தொடர்பான பணிமனையை அமைப்பதற்கான சட்டவரைவை இலகுவாக நிறைவேற்றிக் கொண்டது. உறவினர்கள் காணாமற் போயுள்ள குடும்பங்களுக்கு உதவுவதற்கென நிரந்தரமாக ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஆணையம் ஒன்றை அமைத்துக் கொள்ள இந்தச் சட்டம் வகை செய்கின்றது.

கடந்த வியாழக்கிழமை கறுப்புக் கைபட்டிகளையும், கழுத்துத் துண்டுகளையும் அணிந்தபடி சபைக்குள் வந்த கூட்டு எதிர்க் கட்சியினர் சட்டவரைவை விவாதிக்க அதிக கால அவகாசம் தேவை என்று கூறி ஆட்சேபனைகளைக் கிளப்பினார்கள். வியாழக்கிழமை முழுநாளும், வெள்ளிக்கிழமை அரை நாளும் ஒதுக்குவதற்கு அரச தரப்பில் ஒப்புதல் வழங்கப்பட்டது. கூட்டு எதிர்க்கட்சியினர் அதில் திருப்தி கொள்ளாமல் விவாதத்தைக் குழப்புவதற்கான முயற்சியில் இறங்கினார்கள். கோசங்களை எழுப்பிக் கொண்டு சபையின் நடுவில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடலானார்கள். இந்த அழுத்தப் பிரயோகத்தினால் சபாநாயகர் கருஜயசூரிய மடங்கி விடுவார்; சபையை ஒத்தி வைப்பார் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கலாம்.

இருந்தாலும் கடந்த வருடமும், அதன் பின்பும் கூட்டு எதிர்க் கட்சியினர் மேற்கொண்ட தந்திரோபாயங்களுக்கு விட்டுக்கொடுத்தமை போன்று இம்முறை அரசுத் தரப்பினர் விட்டுக்கொடுத்துப் போக விரும்பவில்லை. வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர எழுந்து கூட்டுஎதிர்க்கட்சியினரின் பெரும் கூச்சல் குழப்பங்களுக்கிடையிலும் சட்டவரைவை சபையில் சமர்ப்பித்து உரையாற்றத் தொடங்கினார்.

அவரது பேச்சின் பெரும் பகுதியை, எதிர்த்தரப்பின் கூச்சலினால் கேட்கமுடியாமல் போயிற்று என்றாலும், அவர் தம் உரையை நிகழ்த்தி முடித்தார். அவருக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் ஜே.வி.பி. உறுப்பினர் பிமல் ரத்னாயக்கா ஆகியோர் சட்டவரைவை ஆதரித்து உரை நிகழ்த்தினார்கள். கூட்டு எதிர்க் கட்சியினரைத் தமது ஆசனங்களுக்குத் திரும்புமாறும், விவாதத்தில் கலந்து கொள்ளுமாறும் சபாநாயகர் பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதிலும் அவர்கள் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. எனவே சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல சட்ட வரைவு நிறைவேற்றப்படுவதற்கான அறிவித்தலை விடுத்தார்.

> இந்த சட்ட வரைவு குறித்து மிகப் பெரிய சர்ச்சையொன்று நாடு முழுவதும் கிளப்பி விடப்பட்டிருந்தது. அதற்கு முதற்படி எடுத்துக் கொடுத்திருந்தவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே ஆவார்.

இந்த நிலையில் சபையில் குழப்பகரமான சூழ்நிலை நிலவியபோதும், சட்டவரைவு இரண்டாம் தடவையும் வாசிக்கப்பட்டு, திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு மூன்றாம் முறையும் வாசிக்கப்பட்டு நிறை வேற்றப்பட்டது. அத்துடன் சபைக் கூட்டமும் முடிவுக்கு வந்தது.

அன்றைய நிலமைகளைப் பார்க்கையில், சட்டவரைவின் மீது விவாதம் நடத்தும் விருப்பத்தில் எதிர்த்தரப்பினர் காணப்படவில்லை. அவ்வாறு விரும்பியிருந்தால் தாம் எதிர்ப்பதற்கான காரணங்கள் பலவற்றை அவர்கள் வெளிப்படுத்தியிருக்க முடியும். அதனை நாகரிகமான முறையில் விவாதித்து வாக்கெடுப்பைப் பின்போடச் செய்திருக்கவும் முடிந்திருக்கும். அவர்கள் செய்த குழப்பத்தினால் தங்கள் கருத்துக்களை விரிவாக வெளியிடக்கூடிய சந்தர்ப்பத்தைத் தாமே இழந்து விட்டார்கள், பொதுமக்கள் இந்த சட்டவரைவு தொடர்பாக மேலும் பலவற்றை அறிந்து கொள்ள முடியாமலும் செய்து விட்டார்கள்.

இந்த சட்டவரைவு குறித்து மிகப் பெரிய சர்ச்சையொன்று நாடு முழுவதும் கிளப்பி விடப்பட்டிருந்தது. அதற்கு முதற்படி எடுத்துக் கொடுத்திருந்தவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே ஆவார்.

சட்டவரைவு சபையில் ஜுலை நடுப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் அவர் விடுத்திருந்த அறிக்கையொன்றில் குறித்த சட்டவரைவை ஆதரித்து வாக்களிக்கும் ஒவ்வொரு உறுப்பினரும் நாட்டையும் ராணுவத்தையும் காட்டிக் கொடுத்தவர்களாகவே மக்களால் கருதப்படுவார்கள் என்று தெரிவித்திருந்தார். கூட்டு எதிர்க் கட்சியினர் தமது நடவடிக்கைகள் மூலம் விவாதத்தை ஓகஸ்ட் மத்திய பகுதி வரை நீடிக்கச் செய்ய விரும்பியதுடன், அதற்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாம் விரித்த வலையில் தாமே சிக்கி மொக்கயீனப்பட்டனர்

## கூட்டு எதிர்க்கட்சி நடத்தை குறித்த ஒருபார்வை

குள் தென் கொரியாவுக்கு சென்றிருந்த ராஜபக்ச திரும்பி விடுவார் என்றும் அவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். முறையாக வாதத்தை நடத்தியிருந்தால் அது சாத்தியமாகியிருக்கலாம். ஆனால் சட்டவரைவைநிறைவேற்றிக்கொள்ளும் அரசின் பலம் குறித்து தவறாக எடை போட்டதனால் கூட்டு எதிர்க்கட்சியினர் தாங்களே தடம் புரண்டு போனார்கள்.

சபை ஒத்திவைக்கப்பட்டதை அடுத்து வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர நடத்திய ஊடகவியலாளர்களுடனான ஒரு கூட்டத்தில், கூட்டு எதிர்க்கட்சியினரின்நடத்தையானது எவர்உண்மையான துரோகிகள் என்பதை முழு நாட்டுக்குமே எடுத்துக்காட்டுவதாய் அமைந்தது என்று குறிப்பிட்டதுடன், அவர்களது சண்டித்தனம் மற்றும் அரசியல் சந்தர்ப்பவாதப் போக்கையும் கண்டித்தார்.

அதே சமயம் எதிர்த் தரப்பினர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன, குறித்த சட்டவரைவானது சரியான நடைமுறைகளைப் பின்பற்றி நிறைவேற்றப்படவில்லை. எதிர்காலத்தில் கூட்டு எதிர்க்கட்சி அரசு அமைக்க நேர்ந்தால் இந்தச்சட்டம் குறித்து கண்டனம் தெரிவிக்கப்படுவதுடன் ரத்துச் செய்யப்படும் - என்றார்.

கூட்டு எதிர்க்கட்சியினர் உருவாக்கிய சூழ்நிலையைப் பயன்படுத்தி அரசு சட்டவரைவை இவ்வாறு நிறைவேற்றிக் கொண்டது. ஆனால் இதுஒரு சிறந்த முன்மாதிரியாக இருக்கப்போவதில்லை.



> வடக்கு -கிழக்குக்கு அப்பாலும், எங்கு வேண்டுமானாலும், அரசியல் அமைதியின்மை மற்றும் பொதுவான கலவரங்களின்போது காணாமற் போனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் பெற்றுத் தருவதற்கு இந்தப் பணிமனை செயலாற்றும் என்பதை அரசுபோதுமான அளவு மக்களுக்கு அறிவுறுத்தத் தவறி விட்டது.

எல்லா சட்ட வரைவுகளும் விரிவாக ஆராயப்பட்டதன் பின்னரே சபையில் நிறைவேற்றப்படல் வேண்டும். தெற்கில் இந்த சட்டவரைவு குறித்து பலவாறான எதிர்க் கருத்துக்கள் நிலவுகின்றன. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கோரிக்கைகளையும், அரசின் மேற்குலக நட்பு நாடுகளின் விருப்பங்களையும் மட்டுமே நிறைவேற்றுவதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்படுவதாகப் பரவலான கருத்து நிலவுகின்றது. இது வடக்கின் காணாமற் போனவர்களுக்கு மட்டுமே உதவுவதாக இருக்கும் என்றும் கருதப்படுகின்றது. ஆனால், இந்த விடயத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பில் ஒருகாலவரையறை அறிவிக்கப்படவில்லை. இது முழு நாட்டையுமே உள்ளடக்கிய தாய் இருக்கும். வடக்கு - கிழக்குக்கு அப்பாலும் எங்கு வேண்டுமானாலும் அரசியல் அமைதியின்மை மற்றும் பொது வான கலவரங்களின்போது காணாமற் போனவர்களின் குடும்பங்களுக்குநிவாரணம்பெற்றுத்தருவதற்கு இந்தப் பணிமனை செயலாற்றும் என்பதை அரசு போதுமான அளவு மக்களுக்கு அறிவுறுத்தத் தவறி விட்டது.

எதுவானாலும் கடந்த வருடம் செப்ரெம்பரில் மனித உரிமைகள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, அரசு முதல் நடவடிக்கை ஒன்றில் இறங்கியிருக்கிறது என்ற வகையில், நாம் திருப்தி அடையலாம். எதுவானாலும் சர்வதேச கோரிக்கையொன்றை நிறைவேற்ற முனையும் அதேநேரம், நாட்டின் பெரும்பாலான மக்கள் மத்தியில் நிலவும் அவநம்பிக்கையை போக்கவும் அதிகமாக காரியங்கள் ஆற்ற வேண்டிய நிலையில் அரசு இருக்கின்றது.

குறிப்பாக போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அது எப்படி செயற்படப் போகிறது என்பதை மக்கள் எதிர்பார்த்து இருக்கிறார்கள்

### போதைப்பொருள் விற்பனையை இல்லாதொழிப்போம்!

போதைப் பொருள்களின் பாவனையால் ஏற்படும் தீமைகளை கருத்திற் கொண்டு, எதிர்காலத்தில் போதைப் பொருள்கள் தடைசெய்யப்படவேண்டும் என அண்மைக்காலமாக நாடு முழுவதும் பெரும் பேரணிகள் இடம்பெற்றுவருகின்றன. போதைப்பொருள்களுக்கு எதிராக நாட்டின் தலைவரில் இருந்து பலரும் குரல் கொடுத்து வருகின்றனர். இந்தக் குரல்கள் எமது கிராமமான ஒட்டுசுட்டானிலும் ஓங்கி ஒலிக்கின்றது. இருப்பினும் எமது கிராமத்தில் நடைபெறுவதோ வேறுவிதமாகவுள்ளது.

கிராமத்துக்கு கிராமம் அதிகாரம் உள்ளவர்கள் பெட்டிக்கடைகளை வைத்து வியாபாரம் செய்து வருகின்றமை புதியவிடயமல்ல. அதிகாரத் தரப்பினரின் இந்த கடைகளில் போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதை எவராவது தடை செய்தார்களா? இன்றுவரை இல்லை என்று தான் கூறுவேன். ஒட்டுசுட்டானிலும் அவ்வாறே. எமது கிராமத்தில் உள்ள 15, 16 வயதுடைய சிறுவர்கள் இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள கடைகளுக்குச் சென்று புகைப் பொருள்கள் உட்பட பல போதைவஸ்துக்களைப் பெற்றுக் கொள்கின்றார்கள்.

கிராமத்தில் உள்ள கடைகளில் சென்று சிகரட்டுக்களைக் கொள்முதல் செய்தால் உறவினர்கள், அயலவர்களுக்கு தெரிந்து விடும் எனக் கருதியே அவர்கள் அதிகாரத் தரப்பின் கடைகளுக்குச் செல்கின்றனர். இதனால் எமது இளைய சமூதாயம் போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி சீரழிந்து சின்னாபின்னமாக மாறி வருவதை அவதானிக்கக் கூடியவாறு உள்ளது. அறியாத வயதில் இள வயதினர் இந்தப் பழக்கத்துக்கு அடிமையாகக் காரணம் குறித்த தரப்பொன்றின் பெட்டிக் கடைகள் தான். அண்மையில் பதினெட்டு வயதுகூட ஆகாத நான்கு சிறுவர்கள் இந்தப் பெட்டிக்கடைகளில் பெற்ற போதை வஸ்துவால் போதை தலைக்கேறிப்போய் தங்கள் வீடெனக் கருதி அயல் வீட்டுக்குச் சென்ற சம்பவம் எங்கள் பிரதேசத்தையே கதிகலங்க வைத்துள்ளது. இது பலருக்குத் தெரியும். இருந்தும் என்ன பயன்? அதிகாரத் தரப்பை எவராவது கேள்வி கேட்க முடியுமா? எமது சிறுவர்களைக் காப்பாற்றும் பொறுப்பு எமக்கு உரியது என்ற ஒரு ஆதங்கத்தில் இதை உதயனுடன் பகிர்ந்து கொள்கின்றேன். மக்களுடைய வாழ்வாதாரங்களைச் சுரண்டும் வகையில் பெட்டிக்கடைகளை அமைத்துள்ள அதிகாரத் தரப்பினர், சிறுவர்கள், இளைஞர்களுக்கு போதைப்பொருள்களை விற்பனை செய்வதை அனுமதிக்க முடியாது. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

பா.லிங்கம், முல்லைத்தீவு

### பனைவளம் பெருக பங்குதாரர்களாவோம்!

வட பகுதியின் பனைவளம் தனித்துவம் மிக்கது. குறிப்பாக யாழ்.குடா நாட்டின் குக்கிராமங்களில் தற்போதும் குறிப்பிடத்தக்க அளவில் பனம் பழங்கள் அவற்றுக்குரிய பருவகாலங்களில் கிடைக்கின்ற போதிலும், அவற்றை முறைப்படி சேகரித்து பயனுள்ளவகையில் பனங்களியாக்கிப் பயன்படுத்துவதில் அந்தந்தப் பகுதிகளில் வாழும் பொதுமக்கள் மத்தியில் அக்கறையீனம் நிலவுகிறது.

பனை வளத்தைப் பேணிப் பாதுகாத்து, நவீன தொழில்நுட்ப ஊக்குவிப்புகளுடன் , பருவ காலங்களில் பனம்பழங்களிலிருந்து பயன் பெற்றுக் கொள்வதை ஊக்குவிக்கும் நோக்குடன் இயங்கும் பனை அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகளுக்குப் பொதுமக்கள் தரப்பில் கூடிய ஒத்து ழைப்பு அவசியமாகிறது.

இந்தப் பனைவளம் நலிவுநிலை உறாத வகையில் அதனை மேம்படுத்த எமது உறவுகள் மனம் கொள்ள வேண்டும். பனை விதை நடுகையை ஊக்குவிக்கும் பனை அபிவிருத்திச் சபையின் முயற்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் நாமும் எமது அயலிலுள்ள காணிகளில் பனம் விதைகளை நாட்டி பனைவள அபிவிருத்தியின் பங்காளராவோம்.

குணம்
எழுதுமட்டுவாழ்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விபரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்யுத்தத்தில் சாக்சி வெண்கலம் முதல் பதக்கம் வென்றது இந்தியா

ரியோ ஒலிம்பிக் தொடரில் பெண்களுக்கான மல்யுத்தத்தில் இந்திய வீராங்கனை சாக்சி மலிக் வெண்கலப் பதக்கம் வென்றார். இதையடுத்து ரியோ ஒலிம்பிக்கில் தொடரில் இந்தியா தனது முதல் பதக்கத்தை வென்றது.

58 கிலோ எடைப் பிரிவில் இந்திய வீராங்கனை சாக்சி மலிக், கிர்கிஸ்தான் வீராங்கனை டின் பெக்கோவாவை எதிர்கொண்டார். பரபரப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் 7:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் சாக்சி மலிக் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கம் வென்றார்.

130 கோடி சனத்தொகையைக் கொண்ட இந்தியா, ரியோ ஒலிம்பிக் தொடரில் ஓர் பதக்கத்தையேனும் வெல்ல முடியாமல் திக்குமுக்காடி வருகிறது என அந்த நாட்டின் மீதும் ஒலிம்பிக் அணியின் மீதும் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில், இந்தப் பதக்கம் கிடைத்துள்ளது. பதக்கப் பட்டியலில் தனக்கெனத் தரப்படுத்தல் இல்லாமல் தவித்த இந்தியா, தற்போது 70 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. (ம-ரி4)



# அரையிறுதியில் ஆர்ஜென்ரீனா

ரியோ ஒலிம்பிக் தொடரில் பெண்கள் பிரிவு ஹொக்கில் தொடரில் ஆர்ஜென்ரீனா அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனாவை எதிர்த்து நெதர்லாந்து மோதியது. 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற ஆர்ஜென்ரீனா அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

ஏனைய காலிறுதிகளில் ஜேர்மனி, அமெரிக்காவை 2:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியும், நியூசிலாந்து, ஆஸ்திரேலியாவை 4:2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியும், பிரிட்டன், ஸ்பெய்னை 3:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியும் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன. (ம-ரி4)






# சக வீராங்கனைக்கு உதவிய நியூசி. வீராங்கனைக்கு மீண்டு

## ஒலிம்பிக் சம்மேளனம் அதிரடி

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான 5,000 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தின்போது காயமடைந்த அமெரிக்க வீராங்கனைக்கு நியூசிலாந்து விராங்கனையொருவர் தனது போட்டி மனப்பான்மையைக் கைவிட்டு உடனடியாக உதவினார். இதனால் அவரால் இன்று நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற முடியவில்லை. இந்த நிலையில் நியூசிலாந்து வீராங்கனையின் மனிதாபிமானத்தை வெகுவாகப் பாராட்டிய பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனம், அவர் இன்று நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் கலந்துகொள்ள முடியும் என்று அதிரடியாக அறிவித்தது.


பெண்களுக்கான 5,000ஆயிரம் மீற்றர் அரையிறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. போட்டி ஆரம்பித்து சில செக்கன்களில் ஓடுபாதை மாறும்போது வீராங்கனைகள் எதிர்பாராத விதமாக மோதிக்கொண்டனர். இதில் அமெரிக்க வீராங்கனை டி அக்கோடினா காயமடைந்து கீழே விழுந்தார். ஏனைய போட்டியாளர்கள் தமது இலக்கை நோக்கி விரைந்து கொண்டிருந்த போதிலும், நியூசிலாந்து வீராங்கனை நிக்கி ஹம்ளின் உடனடியாக அவருக்கு உதவி செய்ய முன்வந்தார். அவர் அமெரிக்க வீராங்கனையைத் தூக்கி இலக்கை அடைய உந்து தலைக் கொடுத்தார்.

சில மீற்றர் தூரம் சென்றதும் அமெரிக்க வீராங்கனை மீண்டும் விழுந்தார். ஹம்ளின் மீண்டும் உதவி செய்து அவர் இலக்கை அடைய காரணமாக இருந்தார். இவர்கள் இருவரும் தாம் விரைந்து கொண்டிருந்த கதியில் தொடர்ந்து சென்றிருந்தால் மூன்றாவது, நான்காவது (மூன்றாவது அமெரிக்க வீராங்கனை, நான்காவது நியூசிலாந்து வீராங்கனை) இடங்களைப் பிடித்து இன்று நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றிருக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் குறித்த
விபத்தால் ச
முதலிடத்தி
இலக்கை
வீராங்கனை
முடியாமல்
செல்லப்ப
வீராங்கனை
வழங்கினா
தொடரில்
நெகிழ்ச்சிச்
குறிப்பாக ச
தனது வா
வீராங்கனை
பலராலும்
நியூசிலாந்
பாராட்டிய
அவர் இன்
யில் கலந்
வித்தது.

# சேர்பியாவுக்குத் தங்கம் மல்யுத்தத்தில் கிடைத்தது

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று இரவு (இலங்கை நேரப்படி) நடைபெற்ற 66 கிலோ எடைப் பிரிவு மல்யுத்தப் போட்டியில் சேர்பியாவுக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது.

சேர்பிய வீரர் டாபர் ஸ்ரீபன், ஆர்மெனிய வீரர் மெக்கரை வீழ்த்தி தங்கம் வென்றார். மெக்கருக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. அரையிறுதிவரை முன்னேறிய ஜோர்ஜிய வீரர் சாம்சய், அசர்பையான் வீரர் ரசல் இருவருக்கும் வெண்கலம் கிடைத்தது. (ம-ரி4)



# பிரேஸில் 'அவுட்'

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு கரப்பந்தாட்டத்தில் தொடரை நடத்தும் நாடான பிரேஸிலை வெளியேற்றியது சீனா.

இந்த இரு அணிகளும் நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) தமது காலிறுதியில் பலப்பரீட்சை நடத்தின. கரப்பந்தில் ஜாம்பவானா சீனாவை எதிர்த்து பிரேஸில் தனது தாக்கத்தை நிலைநிறுத்தவே செய்தது. முதலிரு செற்களையும் பிரேஸில் கைப்பற்றிய போதிலும், அடுத்த மூன்று செற்களையும் கைப்பற்றிய சீனா 3:2 என்ற செற் கணக்கில் பிரேஸிலை வெளியேற்றி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விவகாரம்
# டும் வாய்ப்பு

த்தால் கடைசியும் (அமெரிக்கா), கடைசிக்கு
லிடத்திலுமே (நியூசிலாந்து) வந்தனர்.
க்கை அடைந்த பின்னர், அமெரிக்க
ங்கனை அக்கோடினா தொடர்ந்து நடக்க
யாமல் சக்கர நாற்காலியில் அழைத்துச்
ல்லப்பட்டார். அப்போதும் நியூசிலாந்து
ங்கனை அவர் அருகில் சென்று ஆறுதல்
ங்கினார். இந்தச் சம்பவம் ரியோ ஒலிம்பிக்
டரில் நேற்றுமுன்தினம் பதிவான ஓர்
கிழ்ச்சிச் சம்பவமாக அமைந்தது.
ப்பாக சக வீராங்கனைக்கு உதவ முன்வந்து
து வாய்ப்பை இழந்த நியூசிலாந்து
ங்கனையின் மனிதாபிமானச் செயல்
ாலும் பாராட்டப்பட்டது. இந்த நிலையில்
சிலாந்து வீராங்கனையை வெகுவாகப்
ட்டிய பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனம்
ர் இன்று நடைபெறவுள்ள இறுதிப் போட்டி
கலந்துகொள்ள முடியும் என்று அறி
தது. (ம-ரி4)

# புற்றுநோயிலிருந்து மீண்ட வீரர் படகோட்டத்தில் தங்கம் வென்றார்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இருவர் பங்குபற்றும் ஆண்களுக்கான படகோட்டப் போட்டியில் ஆர்ஜென்ரீனா தங்கப் பதக்கம் வென்றது. இந்த அணியில் இடம்பிடித்திருந்த சான்ரியதகோ என்ற வீரர் கடும் நுரையிரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தவராவார். தற்போது அதிலிருந்து மீண்டு வந்த அவர் தங்கப் பதக்கத்தையும் வென்று சாதித்தமை உலகின் கவனத்தை வெகுவாகவே ஈர்த்துள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் தொடர் முடிவடைந்த பிற்பாடு சான்ரியதகோவுக்கு நுரையீரல் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது. இதனையடுத்து அவருக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டாலும் நோயைக் கண்டறிய காலதாமதம் ஏற்பட்டமையால், நுரையீரல் ஒன்று நீக்கப்பட்டும் அளவுக்கு புற்றுநோய் அவரைக் கட்டிப்போட்டிருந்தது. இவற்றிலிருந்து மீண்டு, 2014 ஆம் ஆண்டு வழமையான பயிற்சிக்குப் படிப்படியாகத் திரும்பிய அவர், ரியோ ஒலிம்பிக் தொடரில் தங்கப் பதக்கத்தை வென்று, பிரமிக்க வைத்துள்ளார். சான்ரியதகோவுக்கு தற்போது (வயது- 53) ரியோ ஒலிம்பிக் தொடரில் அதிக வயதான போட்டியாளர் என்ற பதிவையும் அவர் ஏற்படுத்தியுள்ளார். (ம-ரி4)







## தங்கத்தை தனதாக்குவது பிரேஸிலா, ஜேர்மனியா?

ரியோ ஒலிம்பிக் தொடரில் ஆண்களுக்கான கால்பந்தாட்டத்தில் பிரேஸில், ஜேர்மன் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

அரையிறுதிப் போட்டிகள் நேற்று நடைபெற்றன. முதலாவது அரையிறுதியில் பிரேஸிலை எதிர்த்து ஹொண்டுராஸ் மோதியது. ஆட்டத்தின் 15 ஆவது செக்கனில் பிரேஸிலின் தலைவர் நெய்மர் முதல் கோலைப் பதிவுசெய்தார். ஒலிம்பிக் வரலாற்றில் மிகவிரைவாகப் பதிவான கோல் இதுவே. 29 ஆவது நிமிடத்தில் ஜீசஸ், 38 ஆவது நிமிடத்தில் ஜேசன் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் பிரேஸில் 3:0 என்றிருந்தது. இரண்டாவது பாதியிலும் பிரேஸிலின் ஆதிக்கம் மிகுந்திருந்தது. ஹொண்டுராஸ் வீரர்கள் நால்வர் குறுகிய நேர இடைவெளிகளில் மஞ்சள் அட்டைகளை வாங்கிக் குவித்தனர். இதுவும் பிரேஸிலுக்கு மேலும் சாதகத்தைக் கொடுக்க அந்த அணி முடிவில் 6:0 என்ற கோல் கணக்கில் ஹொண்டுராஸை வீழ்த்தி இறுதிக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியில் ஜேர்மனியை எதிர்த்து நைஜீரியா மோதியது. முதல் பாதியின் 31 ஆவது நிமிடத்தில் ஜேர்மனின் முதல் கோல் பதிவானது. வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் 60 ஆவது நிமிடத்தில் ஜேர்மன் தனது இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முடிவில் அந்த அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.

பிரேஸில், ஜேர்மன் அணிகள் நாளை மறுதினம் தங்கத்துக்கான போட்டியில் மோதுகின்றன. ஜேர்மனி உலகச் சம்பியன் என்பதாலும், பிரேஸிலின் சொந்த மண்ணில் தொடர் நடைபெறுவதாலும் ஆட்டத்தில் மேலும் விறுவிறுப்புத் தன்மை தொற்றியுள்ளது.

வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் நைஜீரியா, ஹொண்டுராஜ் அணிகள் நாளை மோதுகின்றன. (ம-ரி4)

ாடரில்
ண்கள்
டத்தில்
ாடான
ற்றியது

களும்
லங்கை
றுதியில்
ா. கரப்
ணாவை
தனது
த்தவே
ற்களை
பற்றிய
மூன்று
பற்றிய
கணக்
ியேற்றி
தி பெற்
(ம-ரி4)




## ஆண்களுக்கான 200 மீற்றர்; ஜஸ்ரின் கேத்லின் வெளியே

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 200 மீற்றர் அரையிறுதிப் போட்டியில், ஜஸ்ரின் கேத்லின் தோல்வியடைந்து வெளியேறினார். 100 மீற்றர் ஓட்டத்தில் உலக ஜாம்பவானான உசைன் போல்ட்டின் போட்டியாளராகக் கருதப்பட்ட கேத்லின், 200 மீற்றர் ஓட்டத்தில் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறாமல் வெளியேறியிருப்பது உலகத் தடகள அரங்கில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மூன்று பிரிவாக நடைபெற்ற இந்த அரையிறுதிப் போட்டியில், அமெரிக்காவின் ஸ்வான், பிரான்ஸின் கிறிஸ்தோப், ஜமைக்காவின் உசைன் போல்ட், கனடாவின் அன்ரே டி கிராசி, பிரிட்டனின் அடம், துருக்கியின் ரெமில், பனாமாவின் எட்வாட்ஸ், நெதர்லாந்தின் மார்ட்டினா ஆகியோர் இறுதிக்குத் தகுதி பெற்றனர். இறுதிக்குத் தகுதி பெற்றதில் நெதர்லாந்தின் மார்ட்டினாவே மோசமான பெறுதியைக் கொண்டுள்ளார். அவர் 20 செக்கன்கள் 10 மில்லி செக்கன்களில் இலக்கைத் தொட்டார். அவரைவிட மூன்று மில்லி செக்கன்கள் தாமதித்த கேத்லின் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறாமல் வெளியேறினார். (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி?

குருப் பெயர்ச்சி, ஒகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18 ,ஆடி அமாவாசை கூடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுப பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

## துலாம்

### சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3ஆம் பாதங்கள் வரை



**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

குடும்ப வாழ்க்கை குதூகலமாக அமையும். புகுந்த வீட்டில் நல்லிணக்கம் ஏற்படும். பொன், வெள்ளி நிறையச் சேரும். கணவன்–மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட, விட்டுக் கொடுத்துச்செல்வது நல்லது. வீடு கட்டிக் குடியேறவேண்டுமென்ற ஆசை நிறைவேறுவதற்கான அறி குறிகள் தென்படும். மருத்துவச் செலவுகள் குறையும். பண வரவுகள் வந்து கொண்டே இருக்கும். திருமண வயதில் உள்ள பிள்ளைகளுக்கு நல்ல வாழ்க்கைத் துணையை அமைத்துக் கொடுப்பீர்கள். பதவி உயர்வு எதிர்பார்த்தபடி வந்து சேரும்.

கூட்டுக் குடும்பத்தில் உள்ளவர்கள் தனித்து இயங்க முன் வருவர். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். பொது நலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி கிடைக்கும். குல தெய்வ வழிபாடும், முருகன் வழிபாடும் நன்மையை வழங்கும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்கிர காலம்!**

குருபகவான் அதிகாரமாகவும் இருக்கிறார், வக்கிரமாகவும் இருக்கிறார். வக்கிர காலத்தில் வளர்ச்சி கூடுதலாக இருக்கும். வக்கிரகாலத்தில் அதிக விரயம் ஏற்படும். தகராறுகள் தானாக வந்து சேரும். குடும்ப உறுப்பினர்களே குழப்பங்களை விளைவிப்பர். வக்கிர காலத்தில் உடன்பிறப்புகளின் உதவி கிடைக்கும். நிலம் சம்பந்தமாக போட்ட வழக்குகள் நல்ல முடிவுக்கு வரும். உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் தித்திக்க வைக்கும். முக்கியப் புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள். வருமானம் திருப்திகரமாக இருக்கும். வாகன மாற்றங்கள் பயன்தரும் விதத்தில் அமையும்.

**செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!**

ராசிநாதன் சுக்கிரன் என்பதால் வெள்ளிக்கிழமை தோறும் விரதம் இருப்பது நல்லது. சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானை காலையிலும், சனிபகவானை மாலையிலும் வழிபட்டு வருவது நல்லது.

(தொடரும்)

---

# விலையில்லாச் சிரிப்பால் விளையும் பயன்களோ விலை மதிப்பற்றவை

சி.நற்குணலிங்கம்

எமது வாழ்வை வளமடையச் செய்யும் சிறந்த மருந்து சிரிப்பு. எப்போதும் நாம் சிரிப்புடன் மகிழ்வாக வாழவேண்டும் என விரும்புகின்றோம். ஆனால், சில சந்தர்ப்பங்களில் கவலைகள் மனதில் புகுந்து மகிழ்வைக் கட்டுப்படுத்துகின்றன. மகிழ்ச்சி என்பது மனம் சார்ந்ததாகும். எனவே மனதை நிம்மதியாக வைத்திருக்க வேண்டும். மனதை மகிழ்வாக, நிம்மதியாக வைத்திருக்கச் சிரிப்பை வர வழைக்க வேண்டும். சிரிப்பதற்கு மனமும், மூளையும் ஒத்துழைக்க வேண்டும்.

சிரிப்பில் பலவகைகள் உண்டு. நகைப்பு, புன்னகை, அகங்காரம் ஆணவம், நையாண்டி, ஏளனம், கேளிக்கை, ஆனந்தம் என பலவகைகள் உண்டு. இவற்றில் நையாண்டி, ஆணவம், ஏளனம், அகங்காரச் சிரிப்பு என்பன வாழ்க்கைக்குப் பொருத்தமற்ற சிரிப்பு வகைகளாகும். வயிறுஎரியச் சிரிப்பவர்கள் மிருகஜாதி. வயிறு வலிக்கச் சிரிப்பவர்கள் மனிதஜாதி. ஏனையோருடன் சேர்ந்து சிரித்துப் பரிமாறும்போது எமது மனம் நிறைவடைகிறது.

இன்றைய அவசர உலகில் உணர்வுகள் பாதிக்கப்பட்டு, உறவுகள் சிதைவடைந்து வாழும் பலர் முகங்களிலும் கலாசாரச் சீரழிவுகள், சமூகப் பிளவுகள், பாலியல் வன்புணர்வுகள், வாள் வெட்டுக் கலாசாரம், கசிப்பு காய்ச்சும் தொழில், கஞ்சா கடத்துபவர்கள் ஆகியோரிடத்தும் சிரிப்பைக் காணவே முடியாது.

சிரிப்பு இல்லாதவர்களின் இதயம் பாலைவனம் போலிருக்கும். அவர்களது மனம் நிறைய இருளிருக்கும். மனம் கல்லாய்ப் போன மனிதர்களாக இருப்பார்கள். இன்றைய காலத்துக்குக் கட்டாயம் சிரிப்பு அவசியம்.

கவலைகள் மனதை ஆட்கொள்ளும்போது, சிரிப்பு கவலையைத் தீர்க்க உதவுகின்றது. உடற்சோர்வின் போதும் உளரீதியான மன அழுத்தத்தின்போதும் சிரிப்பு எமது தளம்பல் நிலையை, சுமையைக் குறைக்க வழிசமைக்கின்றது. உள்ளத்துக்கு உற்சாகத்தையும் உடலுக்கு விறுவிறுப்பையும் உடனடியாகத் தருவது சிரிப்பாகும். வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்பார்கள். எனவே நோயைத் துரத்தவும் சிரிப்பு உதவுகின்றது. பெங்களூரில் சிரிப்பு பல்கலைக்கழகம் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளதிலிருந்து சிரிப்பின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள முடியும். மனம் விட்டுச் சிரிக்கும்போது தெளிவு பிறக்கும். சிரிப்பானது சுவாச குருதி ஓட்டத்தை அதிகரிப்பதால் உடலில் பிராணவாயுவின் செறிவானது கூடுகின்றது.



முகம் மலர்ச்சி அடைகின்றது.

மூளையைச் சிறப்பாக ஆரோக்கிய வாழ்வை நோக்கி நகர்த்த உதவும். சிரிப்பதும் ஒரு யோகக்கலை. எமது ஆயுள்காலத்தைக்கூட அதிகரிக்கச் செய்யும். சிரிப்பால் மன அழுத்தம் குறைவகின்றது. மனித வாழ்வுக்கு இது ஒரு சிறந்த மனப்பாங்கா கும்.

சிரிப்பு, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகப்படுத்துகிறது. ஆறு வயதுவரை குழந்தைகள் ஒருநாளைக்கு 300 தடவைகள் சிரிக்கும். 18 வயது கடந்தவர்கள் ஒரு நாளைக்கு 100 தடவைகள் சிரிப்பார்கள்.

இதன் மூலம் எந்த மருந்தும் உட்கொள்ளாமல் நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெற்றுக்கொள்கிறார்கள். இவை தொடர்ந்தும் பேணப்பட வேண்டும். நவீன உலகில் சிரிப்பது என்பது அருகிவரும் ஒன்றாகவே காணப்படுகின்றது. சிரிக்கும் விலங்கான மனிதனே சிரிக்க மறுப்பது அவன் சுக தேகியாக வாழ மறுப்பதற்குச் சமனாகும்.

புன்னகை முகத்தை அழகாக வைத்திருக்கவும், வயதைக் குறைத்து மதிப்பிடவும் உதவும். ஒரு நாளைக்கு மூன்று முறையாவது மனம் நிறையச்சிரிக்கவேண்டும்.புன்னகையற்ற முகத்தில் விரைவில் சுருக்கங்கள் விழும். சுருக்கத்தக்கு நீங்கள் செய்யும் செலவைவிட, இலவச சிரிப்புக்கு நேரத்தை ஒதுக்கினால் இலாபம் அதிகம் கிடைக்கும்.

உலக இன்பம் அற்பமானது. உலகம் சுமைகள் நிறைந்து, கவலை மிகுந்தது. இறைவன் இந்த உலகத்தை முரண்பாடுகளால் அமைத்துள்ளான். வாழ்க்கையில் ஏற்படும் கசப்புக்களைச் சகித்து வாழ்வதற்கு உன்னிடம் சிரிப்பை வரவழைத்துக்கொள்.

சிரிக்கச் சிரிக்க மனம் ஊட்டம் பெறுகின்றது. சிரிப்புக்கென்று இருப்பது ஒரே சுவைதான் அது இனிப்பு. இனிப்பு எவ்வளவு தூரம் எல்லோராலும் விரும்பப்படுகிறதோ அதே போன்று சிரிப்பையும் எல்லோரும் விரும்ப வேண்டும். அதன் பயன்களை அறிந்து முகத்தை உம்மென்று வைத்திருக்காது சிரிக்கப் பழக வேண்டும். மகிழ்ச்சிக்காக சிரிக்கும் சிரிப்பே சிரிப்பு. சுவையான வாழ்வு வாழவும், ஆனந்தமான மனோபாவத்துடன் வாழவும் எப்போதுமே சிரித்து வாழவேண்டும். மனஅமைதியைத் தொலைத்துவிட்ட இந்த வேளையில், மகிழ்வான சிரிப்பே மனதுக்கு ஆறுதல். துன்பம் வரும்போது சிரிக்கப்பழக வேண்டும் என வள்ளுவர் சும்மாவா சொன்னார்! சிரிப்பின் உற்சாகத்துடன் உழைப்பவர்கள் மற்றவர்களைவிட, ஏழு ஆண்டுகள் இளமையுடன் இருப்பார்கள் என ஆய்வு உரைக்கின்றது.

இன்றைய சூழ்நிலையில் அனைவருமே ஏதோவொரு விதத்தில் பாதிக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். பொருளாதாரக் கஷ்டம், கடன் தொல்லை, குற்றச்செயல்களால் ஏற்படும் பயம், பிள்ளைகளை ஒழுங்காக வளர்க்க வேண்டுமே என்ற ஏக்கம், பணிபுரியும் இடங்களில் ஏற்படும் நெருக்கீடுகள், குடும்பப் பிணக்குகள் எனப்பல காரணிகள் எம்மை வாட்டுகின்றன. இதனால் எங்கே அமைதி எனத் தேடுகின்றோம். இந்த வேளையில் மகிழ்வான சிரிப்பே மனதுக்கு ஆறுதலையும், அமைதியையும் தரக்கூடியது. எனவே விலையில்லாச் சிரிப்பால் விளையும் பயன்களோ விலைமதிப்பற்றவை. இதனை மனதில் கொண்டு சிரிப்பைத் தொலைத்தவர்கள் சிரித்து வாழ, சிரித்து வாழ்பவர்களுடன் இணைந்து கொள்ளுங்கள். வாழ்க்கையை எதிர்கொள்வதற்கு நாம் சிரித்தே ஆக வேண்டும். இல்லையேல் வாழ்க்கை அடிமையாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ஆர்.கார்த்திகேயன்

# புறக்கணிக்கப்பட்ட மனங்களும் சட்டங்களின் செயற்பாடும்

குற்றவாளி பிறக்கிறானா? அல்லது உருவாக்கப்படுகிறானா? என்ற கேள்வி உளவியலில் பெரும் விவாதப்பொருள். இரண்டும் என்பதுதான் உண்மை. ஆனால், சமூகத்தின் பங்கு பற்றி அதிகம் பேசுகிறோம். காரணம், குற்றத்தின் காரணம் மற்றும் பாதிப்பு இரண்டும் சமூகத்தைச் சேருகிறது. இருந்தும் கூட சட்டரீதியாகப் பார்க்கும் அளவுக்குக் குற்றங்களைச் சமூகரீதியாகப் பார்க்கத் தவறுகிறோமோ என்று அஞ்சத் தோன்றுகிறது.

தண்டனையை அதிகரித்தால் குற்றங்கள் குறையும் என்ற பார்வையை மீறி இங்கு குற்றங்கள் புரிந்து கொள்ளப்படுவதில்லை. குற்றம் பற்றிய செய்திகளும் விமர்சனங்களும் எதிர் வினைகளும்கூட இங்கு பாரபட்சமாகத்தான் உள்ளன. சென்ற மாதத்தில், சென்னையின் கூர்நோக்கு இல்லத்தில் நடந்த தப்பித்தல், தற்கொலை முயற்சி, பிடிபடல் சம்பவங்கள் 'த இந்து தமிழ்' நாளிதழில் முழுப் பக்கச் செய்தியாக வந்தது. பிளேடால் அறுத்துக்கொண்டு மிரட்டும் பிள்ளைகளையும், பதைக்கும் பெற்றோர்களின் அவலத்தையும் படமாகப் போட்டது. என்னை செய்தியைப் படிக்க விடாமல் அலைக்கழித்தது. அரை குறையாகத்தான் செய்தியைப் படித்தேன். பின் மனதில் மீரா நாயரின் சலாம் பாம்பே படம் ஓடியது. கல்லூரிக் காலத்தில் பாப்ப நாயக்கன் பாளையத்தில் உள்ள கூர் நோக்கு இல்லம் சென்ற நினைவுகள் வந்து போயின. மறுநாளும் அந்தப் புகைப்படங்கள் வேலைக்கு நடுவில் என்னை அலைக்கழித்தன. அதையெல்லாம்விட என்னைப் பாதித்தது, பேசிய நண்பர்கள் எவரையும் இந்தச் செய்திகள் பெரிதாகப் பாதிக்காததுதான். நகரம் இயல்பாக இயங்கிக்கொண்டிருந்தது. பெரும் சமூக நிகழ்வு என்றால், கபாலி ரிலீஸ்தான்.

## பதினைந்து வயதில் குற்றப் பின்னணி

குற்றம் நடக்கையில் தடுக்க வேண்டும், தண்டிக்க வேண்டும் என்று பேசும் நாம், குற்றவியல் பற்றிய அடிப்படை அக்கறையற்ற சமூகமாக மாறி வருகிறோமோ என்ற சந்தேகம் வந்தது. மணிரத்னம் பட நாயகன்போல, பால்கனியிலிருந்து பார்த்து, ஏன் இப்படிச் செய்றாங்க? என்று கேட்டுவிட்டு, அடுத்த வேலை பார்க்கப் போய்விடுகிறோமோ?

பதினைந்து வயதுகளில் குற்றப் பின்னணி என்பது எவ்வளவுகொடுமையானது?அவன் குற்றவாளியா? இல்லையா? என்பது வேறு விடயம். ஆனால், குற்றங்கள் நிகழும் சூழலில் வளர்ப்பு, குற்றம் செய்ய வாய்ப்புகள், காவல் துறையில் பிடிபட்டுக் குற்றவாளியாக நடத்தப்படும் வாய்ப்புகள் போன்றவை.

இன்று குற்றப் பின்னணியற்ற, நல்ல விழுமியங்கள் கொண்ட குடும்பங்களிலிருந்து வரும் பிள்ளைகளிடமே நடத்தைக் கோளாறுகள் ஏராளமாக உள்ளதை ஓர் உளவியல் சிகிச்சையாளனாகப் பார்க்கிறேன். ஆனால், அனேகமாக இவை வெளியில் கூட வருவதில்லை. காரணம், வசதி வாய்ப்புகளும் குடும்பத்தின் முழு ஆதரவும், பிற சமூக ஊக்கிகளும் இவர்களை எப்படியோ ஆளாக்கிவிடுகின்றன. பலர் எனக்குத் தெரிந்து, நல்ல படிப்பும், வேலையும், தொழிலும் பெற்று கிட்டத்தட்ட இயல்பு வாழ்க்கை வாழ்கிறார்கள்.

> அன்பும், மன்னிப்பும், அங்கீகார நன்மதிப்பும், ஆதரவும், ஊக்குவிப்பும் பெருகப் பெருக நடத்தைகள் மாறுவதை நான் பலமுறை குழுச் சிகிச்சையில் கண்டிருக்கிறேன். உபுண்டு என்ற ஆப்பிரிக்கப் பழங்குடியினர், குற்றத்தைக் கையாளும் வழக்கம் கவனிக்கத்தக்கது. தவறிழைத்த மனிதனை நடுவில் நிறுத்தி, அவன் நற்குணங்களைத் தொடர்ந்து கூறுவார்கள். அவன் செய்த நல்ல செயல்களைப் பட்டியல் போடுவார்கள். இரண்டு மூன்று நாள்கள்கூட இந்தச் சடங்கு தொடரும். சம்பந்தப்பட்டவர் மனம் இளகி, தன் தவறுக்கு வருந்தி நல்வழிக்குத் திரும்புவார்.

## பொய்யான கற்பிதங்கள்

ஆனால், நலிந்த பிரிவிலிருந்து வரும் பிள்ளைகளின் நிலை அப்படியல்ல. அவர்களைக் குற்றவாளியாகப் பார்க்க சமூகம் தயாராக உள்ளது. பழைய பேப்பர் வாங்க வரும் பையனைச் சந்தேகமாகப் பார்ப்போம். கூரியர் பையனைச் சுமாராக நடத்துவோம். ஆங்கிலம் பேசும் வெள்ளைச் சட்டை அணிந்த விற்பனை சிப்பந்தியை கௌரவமாகப் பதில் சொல்லி அனுப்புவோம். நம் கற்பிதங்கள் அப்படி. வெள்ளைத் தோல், ஆங்கிலம், நல்ல உடைகள், நாகரிகப் பெயர்கள் போன்றவை நம்மை அவர்கள் மேல் கௌரவம் கொள்ள வைக்கின்றன.

கறுப்பு நிறம், கசங்கிய உடை, சிறுபான்மை அடையாளம், கொச்சைமொழி என்றால், அவர்களை அப்புறப்படுத்தத் தயாராகிவிடுகிறோம். அவர்கள் பொருளாதார நிலையிலோ, கல்வி மற்றும் பண்பாட்டுத் தளங்களில் முன்னேறினால்கூட, நம் ஏற்புத்தன்மை பெரிதாக மாறுவதில்லை.

ஒருமுறை குப்பம் ஒன்றில் வேலைவாய்ப்பு முகாம் நடத்தியபோது, ஒவ்வொரு பெண்ணும் இரண்டுக்கு மேற்பட்ட வேலை செய்கையில், ஆண்களில் சரி பாதிப் பேர் எந்த வேலையும் செய்யாமல் இருப்பது தெரிய வந்தது. வேலை இல்லாத மனம் அதற்கான ஒரு வேலையைத் தேடிக்கொள்கிறது. குற்றம்கூட ஒரு தொழில்தான்.

## வலைப்பின்னலின் சதி

முறையான கல்வியும், நியாயமான வேலையும் கிடைத்தால், குற்றங்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறையும். எல்லாக் குற்றங்களிலும் சிறார்களை ஈடுபடுத்துவது தற்செயலான நிகழ்வு அல்ல; ஒரு வலைப் பின்னலாக விரியும் வர்த்தகத் திட்டத்தின் ஒரு செயற்றிட்டம். போதை மருந்து, பாலியல் தொழில், திருட்டு, பிச்சை என எல்லாத் தொழில்களிலும் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். காவல் துறையால் இதை ஓரளவே தடுக்க முடியும். புனரமைப்பு, கல்வி, திறன் வளர்ப்பு, உளவியல் ஆலோசனை, வேலை வாய்ப்பு என அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட்டாலொழிய இளம் குற்றவாளிகள் உருவாவதைத் தடுக்க முடியாது.

ஒரு நிறுவன அமைப்பு பெரும்பாலும் மனிதர்களை ஒடுக்கிவைக்கும், எத்தனை மேன்மையான குறிக்கோள்களைக் கொண்டிருந்தாலும், ஆலயம் சார்ந்த அமைப்புகள் கூட இதற்கு விதிவிலக்கல்ல. குறிப்பாக, பள்ளிக்கூடங்கள் சிறைச்சாலைகள் போல இயங்குகின்றன. மருத்துவமனைகளையும் குறிப்பாக, மன நல மருத்துவமனைகளைச் சொல்லலாம். அதனால், கூர்நோக்கு இல்லங்களின் செயற்பாடுகளிலும் பெரிதாக எதிர்பார்க்க முடியாது. காவல்துறையும் பரிதாபத்துக்குரியதுதான். புதரில் சிறுவர்களைத் தேடும் காவல்துறைப் பணியாளர்கள் பற்றிப் படிக்கையில், விசாரணை படம் நினைவுக்கு வருகிறது. விசாரணை அதிகம் விவாதிக்கப்படாமல் போன படைப்பு என்பது என் கருத்து. அதை சௌகரியமாக ஒதுக்கிவைத்துவிட்டது தமிழ்ச் சமூகம்.

## கவனிக்கத்தக்க வழக்கம்

சில மாதங்களில் கவுதம் மேனனின் இன்னொரு பொலிஸ் படம் வரலாம். அதில் ஒட்ட முடி வெட்டி, வெள்ளைச் சட்டை போட்ட நாயகன், கறுத்த நீள் முடி, வில்லனை ஒரு புல்லட்டில் விசாரணை இல்லாமல் சுட்டுத்தள்ளுவார். சமூகத்தைத் துப்புரவாகத் துலக்கிச் சீர்திருத்தும் உடல் மொழியுடன்.


தமிழ் ரசிகர்கள் நாம் அதை வெற்றிப் படமாக்குவோம். அடுத்த முறை குற்றச் செய்தி படித்தால், பொலிஸ் என்ன பண்ணுது? என்று கேள்வி கேட்டுவிட்டு, நம் கடமையை முடித்துக்கொள்வோம். நெஞ்சைக் கீறி தற்கொலைக்கு மிரட்டுவது நம் பிள்ளைகள் என்றால், இப்படி விலகிச் செல்வோமா?

அன்பும், மன்னிப்பும், நன்மதிப்பும், அங்கீகாரமும், ஆதரவும், ஊக்குவிப்பும் பெருகப்பெருக நடத்தைகள் மாறுவதை நான் பலமுறை குழுச் சிகிச்சையில் கண்டிருக்கிறேன். உபுண்டு என்ற ஆப்பிரிக்கப் பழங்குடியினர், குற்றத்தைக் கையாளும் வழக்கம் கவனிக்கத் தக்கது.

தவறிழைத்த மனிதனை நடுவில் நிறுத்தி, அவன் நற்குணங்களைத் தொடர்ந்து கூறுவார்கள். அவன் செய்த நல்ல செயல்களைப் பட்டியல் போடுவார்கள்.

இரண்டு மூன்று நாள்கள்கூட இந்தச் சடங்கு தொடரும். சம்பந்தப்பட்டவர் மனம் இளகி, தன் தவறுக்கு வருந்தி நல்வழிக்குத் திரும்புவார்.

அன்பும், மன்னிப்பும் கிடைக்காத புறக்கணிக்கப்பட்ட மனதை சட்டங்கள் எப்படிச் சீர்செய்ய முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT


உதயன் சிறுவர் பகுதியில் ‘வர்ணம் தீட்டுவோம் வாங்க’ என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.



ஜெ.ஜெனுசினி,
தரம் - 2 D,
புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# வரலாற்றில் இன்றைய தினம்

1561 - 13 ஆண்டுகளைப் பிரான்ஸில் கழித்த பின் 18 வயது ஸ்கொட்லாந்து அரசி மேரி, ஸ்கொட்லாந்துக்குத் திரும்பி வந்தார்.

1666 - இரண்டாம் ஆங்கில-டச் போர்; போர்த்துக்கேய தீசு ரெர்ஷெல்லிங்கில் மீது, றியர் அட்மிரல் றொபேட் ஹோல்ம்ஸ் தலைமையிலான அதிரடித் தாக்குதலின் போது, 150 வணிகக் கப்பல்கள் அழிக்கப்பட்டன.

1766 - ரஷ்யா செயின் பீட்டர் பேர்க்கில் புனித ஐசாக் தேவாலயம் கட்டப்பட்டது.

1839 - பிரான்ஸ்அரசு, லூயிஸ்டவுகரின் ஒளிப்படச் செயன்முறையை உலகுக்கு இலவச நன்கொடையாக அறிவித்தது.

1861 - அல்ப்ஸ்மலைத்தொடரில் 5ஆவது உயரமான வெய்ஸ் ஹோர்ன் சிகரத்தில் முதன் முதலாக ஏறினர்.

1919 - ஐக்கிய இராச்சியத்திலிருந்து ஆப்கானிஸ்தான், சுதந்திரம் பெற்றது.

1940 - மிச்செல் நடுத்தர குண்டு வீச்சு விமானம் B-25 முதலாவது பறப்பை மேற்கொண்டது.

1953 - பனிப்போர்; சி.ஐ.ஏயும், M16 உம் ஈரானில் மொஹமட் மொசடாக்கின் ஆட்சியை வீழ்த்தி ஷா முஹமட் றிஷா பஹ்லாவியை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வர உதவி புரிந்தன.

1960 - ஸ்புட்னிக் திட்டம்; கொறப்பல்-ஸ்புட்னிக் 2; சோவியத் யூனியன் பெல்கா மற்றும் ஸ்ரேல்கா நாய்களுடன் 40 சுண்டெலி, இரண்டு எலிகள் மற்றும் பல்வேறு தாவரங்களைச் செயற்கைக் கோளில் விண்ணுக்கு அனுப்பியது.

1980 - சவூதி அரேபிய லொக்ஹீட் L-1011 ட்றைஸ்ரார் விமானம் 163 சவூதி அரேபிய கிங்காலிட் சர்வதேச விமான நிலையத்தில் அவசரத் தரையிறக்கத்தின்போது, விபத்துக்குள்ளாகி 301 பேர் சாவு.

1987 - ஹங்போர்ட் படுகொலை: ஐக்கிய இராச்சியத்தில், மைக்கல் றயன் தானியங்கி றைபிளால் 16 பேரைச் சுட்டுக்கொன்ற பின் தற்கொலை செய்து கொண்டான்.

1992 - அரசுக்கு எதிராக பத்திரிகையாளர்கள் போர்க் கோலம்.

1995 - தீர்வுத் திட்டத்தை எதிர்த்து மொரட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் சத்தியாக்கிரகம்.

1995 - தீர்வுத் திட்டம் வெறும் கண் துடைப்பே போர் நடத்துவதே அரசின் நோக்கம் என பி.பி.ஸிக்கு விக்கிர மபாகு கருணாரட்ணா பேட்டி.

2002 - கன்காலா M.26 ரஷ்ய துருப்புக்காவி ஹெலிகொப்டர் குரோஷ்னிக்கு வெளியே செச்சென் ஏவுகணையால் தாக்கப்பட்டு 118 வீரர்கள் கொல்லப்பட்டனர்.

2005 - சமாதான மிஸன் என அழைக்கப்படும், ரஷ்யா - சீனாவுக்கு இடையேயான முதன் முதலான இணைந்த இராணுவப் பயிற்சி தொடங்கியது.

- போர் நிறுத்த ஒப்பந்த நடைமுறை தொடர்பாக அரசுடன் பேசப் புலிகள் இணக்கம். நோர்வே அழைப்பைப் புலிகள் ஏற்றனர்.

2006 - ஊரடங்கு தளர்த்தப்பட்டவேளை யாழ்.நகரில் இருவர் சுட்டுக் கொலை.

- சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகம் மாணவர்களால் திடீர் முற்றுகை. இனப்படுகொலையை தடுக்க இந்தியா தலையிடக் கோரிக்கை.

2009 - ஈராக்கின் பாக்தாத்தில் தொடர் குண்டு வெடிப்பில், 101 பேர் சாவு: 565 பேர் காயம்.

2010 - ஈராக்கின் போர் நடவடிக்கைகள் அமெரிக்கப் படைகள் குவைத்துக்குள் சென்றதையடுத்து முடிவுக்கு வந்தன.

# சேமிப்பது சிறந்த பழக்கம்

ரவிக்கு இரண்டு சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் உண்டு. மூத்தவர்களில் ஒரு அண்ணனும், ஒரு அக்காவும், இளையவர்களில் ஒரு தம்பியும், ஒரு தங்கையும். ரவியின் அப்பா மாவட்டச் செயலகத்தில் எழுத்தாளராக இருந்தார். பிள்ளைகள் எல்லோரும் பாடசாலை செல்வதால் வருமானத்தில் சிக்கனமாகத் தான் செலவு செய்ய வேண்டியிருந்தது.

ரவியின் தந்தை சம்பளத்தின் போது ஒரு சிறிய தொகையைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து விரும்பியவற்றை வாங்கிச் செலவழிக்குமாறு கூறிவிடுவார். பிள்ளைகள் அப்பா கொடுக்கும் பணத்தில் தங்களுக்கு விரும்பிய தின்பண்டங்களை வாங்கிச் சாப்பிட்டும் அல்லது தங்களுக்கு விருப்பமான விளையாட்டுச் சாமான்கள் வாங்கியும் மகிழ்வார்கள்.

அன்று ஒரு வங்கி அதிகாரி ரவியின் பாடசாலைக்கு வந்திருந்தார். அவர் மாணவர்கள் மத்தியில் உரையாற்றும் போது சேமிப்பின் நன்மை பற்றியும் சிறு வயது முதலே சேமிப்புப் பழக்கத்தை மேற்கொள்வதால் எவ்வாறு அந்த சேமிப்பின் ஓர் அவசர தேவைக்கு உதவுகிறது என்பது பற்றியும் எடுத்துக் கூறினார். பாடசாலை மாணவர்களில் யார் யார் சேமிப்புப் பழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள் என வினவிய போது ஒரு சில மாணவர்கள் எழுந்து தாங்கள் தபாற்கந்தோர் சேமிப்புக் கணக்கில் சேமிப்பதாகக் கூறினர். அவர்களில் பலர் ஐம்பது ரூபாயுடன் சேமிப்பைத் தொடங்கியதோடு விட்டு விட்டதையும் ஒரு சிலர் இரண்டொரு மாதங்கள் இருநூறு ரூபாய், முன்னூறு ரூபாய் வரை சேமிப்புக் கணக்கில் போட்டு விட்டு பிறகு தொடராமல் விட்டதையும் விசாரித்து அறிந்து கொண்டார்.

ரவி அன்று சேமிப்புக் கணக்கில் இடுவதற்காகத் தனது தபாற் கந்தோர் சேமிப்புக் கணக்குப் புத்தகத்தையும் பாடசாலைக்கு கொண்டு வந்திருந்தான். அவன் தனது புத்தகத்தை நேரே வங்கி அதிகாரியிடம் கொண்டு சென்று காட்டினான்.

கணக்குப் புத்தகத்தின் படி ரவி இரண்டு வருடங்களில் ஐயாயிரம் ரூபாய் சேமித்திருந்ததைக் கண்டு வங்கி அதிகாரி வியந்து பாராட்டினார். மற்றவர்களும் ரவியைப் போல் சேமிப்பைத் தொடங்கி நிறுத்தாமல் தொடர வேண்டும் என்று புத்திமதி கூறினார். அன்று ரவியின் வீட்டில் தாயும், தகப்பனும் இவ்விடயத்தைக் கேள்விப்பட்டு பெருமையடைந்தனர். ரவியைப் பாராட்டினார்கள். சகோதர சகோதரிகள் "ரவி உனக்கு ஏது இவ்வளவு பணம்?" எனக் கேட்டபோது "அப்பா மாதா மாதம் தருகின்ற பணத்தில் கொஞ் சத்தைச் செலவழிப்பேன்; மிச் சத்தைச் [illegible] எனக்குத் தரும் காசெல்லாவற்றையும் சேமிப்புக் கணக்கில்தான் போட்டிருக்கிறேன்" என்று கூறியதும் தங்களுக்கு இப்படி யோசனை வரவில்லையே என்று அவர்கள் கவலைப்பட்டார்கள்.

சில மாதங்கள் செல்ல ரவியின் அப்பா கடமையாற்றும் அலுவலகத்தின் உயர் அதிகாரியின் மகளுக்குத் திருமண நாளும் வந்தது. மாதக் கடைசி என்பதால் சம்பளமும் வரவில்லை. கையில் காசும் இல்லை. கட்டாயம் திருமணத்துக்குப் போக வேண்டும். தரமான பரிசும் கொடுக்க வேண்டும். இதைப் பற்றி ரவியின் பெற்றோர் பேசிக் கொண்டிருந்தது ரவியின் காதில் விழுந்தது.



அவன் தந்தையிடம் சென்று "என்னுடைய சேமிப்புக் கணக்கில் ஐயாயிரம் ரூபாய் இருக்கிறது தானே அப்பா. அதில் தேவையான காசு எடுக்கலாம் தானே" என்று கூறவும் "வேண்டாம் ரவி, நீ சின்னப்பிள்ளை. நீ சேமித்த பணத்தைப் பெரியாக்களுடைய தேவைக்கு எடுக்கிறது சரியில்லை" என்று தந்தை கூறினார்.

"நான் சேமித்ததெல்லாம் உங்கள் பணம் தானே அப்பா. வீட்டில் அவசியமான தேவைகளுக்குத் தானே சேமிப்பது! என்று கூறினான் ரவி.

தகப்பன் தன்னுடைய சிறிய மகனின் பொறுப்புணர்ச்சியை நினைத்துப் பெருமைப்பட்டார். இந்த நிகழ்ச்சியின் பின் ரவியினுடைய சகோதரர்கள், சகோதரிகள் எல்லாம் சேமிப்புக் கணக்குளைத் தொடங்கி சேமிக்கத் தொடங்கினார்கள். பாடசாலை மாணவர்களும் ரவியின் முன்மாதிரியைப் பின்பற்றி சேமிப்பில் ஆர்வம் காட்டத் தொடங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானித்திருங்கள்.! பசித்திருங்கள்..! விழிப்போடும் இருங்கள்..!

யாழ்ப்பாணம் யாழ்.. இசையின் கானங்களிடை பக்தியின் நாதங்களை வானுயர்ந்து வரமருளுகின்ற காலம். வீதி எங்கும் அலங்காரங்கள் அர்த்தப்படுகின்ற சூழல். ஊரவர்கள் ஒன்றுகூடி உறவாடிக் களிப்புறும் நேரம். தொலைதூரங்களின் புலம்பெயர் சொந்தங்களும் தமிழ்க் காவலனை நினைதலால் கூடி நிற்கின்றனர். தலைமேல் இருகரம் கூப்பி வீதி நடக்கும் அடியவரின் அரோகாராக் கோசங்கள் எழுந்தருளும் நர்த்தனம்.பன்னீரில் தினம் குளித்து சந்தனவாசம் சூடும் கோலம் காணும் தருணம்.சொற்பொழிவுகள், பாட்டிசைகளின் ரீங்காரம், பண்ணிசைகளின் இன்னிசைகள் மன அமைதி தரும். இத்தனையும் தமிழ் மக்கள் பெற்றுவிட்ட கிடைத்தற்கரிய பேறுகள். வருடந்தோறும் 25 தினங்கள் மகிழ்ந்திருகின்ற வாழ்வின் வசந்த ஜாலமிடல்கள். முருகு என்ற ஞானத்தின் அழகுடை நல்லைக் கந்தனவன் திருவிழாக்களின் இலக்கணங்கள்...! அவன் திருவருளின் பொலிவிடல்கள்...!

வரலாற்றுச்சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகி இடம்பெற்றுவருகின்றது. பெருந்திருவிழாக்கள் எதிர்வருகின்றன. அடியவர் கூட்டங்களின் வேண்டுதல்களும் அவன் பதம் பணிதல்களும் பக்தி மயமாக தியானிக்கப்படுகின்றன.நல் அலங்காரங்களுடன் வீதி நடமாடும் குமரனின் அழகிடை அலைமோதுகின்றன. மெய்ஞானத்தின் திருவருளை எடுத்தியம்புகின்றன.காவல் செய்கின்றன. இவை அனைத்தும் இயல்பாய் ஞானத்தை தமிழர்களிடை பெருக்கெடுக்கச் செய்கின்றது. தமிழர்களின் முத்தான சொத்தான கல்வியை உயர் நிலைப்படுத்துகின்றன. இந்த நிலையிலே எமைக் காத்தருளும் இறை கந்தனவன் குடியிருக்கும் வீதி வழியே காவல் மனிதர்களின் நிலைநிறுத்தலும் கண்காணிப்புக் கமராக்களின் படமெடுத்தலும் தமிழ் மக்கள் அழிவின் வழி பெற்றுவிட்ட தோசங்களின் நிலைபெறலே..! பக்தர்கள் வேலனின் அலங்கார மகத்துவங்களிடை பொழி(லி)வுறும் அருள்மழையில் லயித்திருக்க தீய எண்ணங்கொண்ட வெண்மையான தூய மனமற்ற கொள்ளையர்கள் பக்தர்களின் அணிகலன் அலங்காரங்களை ஆசையோடு பற்றிக் கொண்டோடுதல் என்பது தோசத்தின் வழி வந்த நேசங்களே..!

இந்தச் செயல்நிலைகள் சந்தன மருந்தோடு சுதந்திரமான, அலங்காரமான உலவல்களின் மட்டற்ற விருந்தோடு எந்த எல்லையிடல்களுமின்றி உலவியிருந்த வீதிகளின் ஞாபகங்களை எம்மிடையே மீட்டுகின்றன. அந்தத் தருணங்களை தற்போதைய இத்தருணங்களின் மேற்போந்த தோசங்களிடையேயும் அதன்வழி வந்த வேசங்களிடையேயும் முரணுறச் செய்கின்றன..! உண்மை பக்தியிடை இடைவிலகலை திட்டமிட்டுச் சார்புறச் செய்கின்றன..! காவல் மனிதர்களின் நிழல்களின் வேலியிடையே இந்தக் கொள்ளைகளின் வேசம் வேகமுறுகிறது என்றால் சுதந்திரம் என்பது இன்னமும் எங்களிடை எழுந்தருளவில்லை என்பது வெளிப்படுகிறது...! மாறாக வேசமிடும் கொள்ளையர்களிடம் நாட்டமுறுகிறது என்பது மறுக்கமுடியாதது..! வருத்தப்பட வேண்டியது..! பக்தியின் வழி திருத்தப்பட வேண்டியது..! இதனை மறுக்க முடிகிறதா...? மறுத்துரைக்க முடிகிறதா..?? இல்லை என்பதே பதிலுரை...!

ஆக,ஆலயம் வருகின்ற அடியவர்கள் நல்லை வாழ் முருகனின் அலங்காரக் கந்தனின் பக்தியை அனுசரியுங்கள்..! தியானித்திருங்கள்.! பசித்திருங்கள்..! அவன் அருளை மனமாரத் தரிசியுங்கள்...! இதனிடை உங்கள் அறிவின் ஞான திருஷ்டியை பயனுறுதியாக்கி உங்களையும் உங்கள் சூழலையும் நன்முறையில் கணித்திருங்கள்...! விழிப்போடு இருங்கள்..! துடிப்போடு இருங்கள்..!




ஏறு மயில் ஏறி வந்து கூறும் அடியார்களின் வினைகளைக் களைவான் ஆதி அருணையில் அமர்ந்த பெருமான்..!

# சைவாலய பூசையில் பஞ்ச கௌயம்

சி.சக்திகிரீவன்

சைவக் கிரியைகள்,பூர்வம்,அபரம் என இருபெரும் பிரிவுகளாகவுள்ளன. இவற்றில் பஞ்சகௌய பூசை இல்லாத கிரியையே இல்லை எனலாம். எந்த வகையான கிரியையிலும் மண்டபசுத்தி, ஆத்மசுத்தி, திரபிய சுத்தி, விம்பசுத்தி ஆகியவற்றின் பொருட்டு இந்த பஞ்ச கௌயபூசை இடம்பெறுகிறது. இந்தப் பஞ்ச கௌய பூசையை சிவாகமக் கிரமமாகச் செய்து இறைவனுக்கு அபிசேகிப்பதாலும் அதனைப் பருகுவதாலும் எல்லா நோய்களிலிருந்து விடுபடுவதோடு சகல பாவங்களில் இருந்தும் விமோசனம் பெற வழிபிறக்கிறது. இதனைக் காலையில் இறைவனுக்கு அபிசேகிப்பதால் சகல கொடிய பாவங்களும் அழியும் என்றும், மத்தியானத்தில் அபிசேகிப்பதால் (உலகிலும்) குடும்பத்தில்ஏன் சகல இடங்களிலும் அமைதி சாந்தி நிலவும் என்றும், மாலையில் அபிசேகிப்பதால் தீராத எத்தகைய நோய்களும் இல்லாது போகுமென்றும் சிவாகமங்கள் கூறுகின்றன. இந்த பஞ்சகௌயத்தில் அடங்கும் திரவியங்களான பால், தயிர், நெய், கோசலம், கோசாணம் என்பவை பசுவிலிருந்தே பெறப்படுகின்றன. வெள்ளைப் பசுவிலிருந்து பாலும் மஞ்சள் நிறப் பசுவிலிருந்து தயிரும், கறுப்புநிறமான பசுவிலிருந்து நெய்யும், சிவப்பு நிறமான பசுவிலிருந்து கோசலமும், பழுப்புநிறமான பசுவிலிருந்து சாணமும் பெறப்பட வேண்டும்.

பசு பஞ்சகௌயத்தைத் தருவதோடல்லாது, எமது சிவசின்னமான திருநீறும் பசுவின் சாணத்தில் இருந்தே பெறப்படுகிறது. இத்தகைய புனிதமான பசுவின் உடலெங்கும் முப்பத்து முக்கோடி தேவர்கள் வீற்றிருக்கின்றார்கள். ஆதலால் கோபூஜையும் மகோன்னதமாகப் போற்றப்படுகிறது. மனிதனுக்கும் ஆரோக்கியமாக சத்துணவாக பால், தயிர், நெய் போன்றவை அமைகின்றன. கோசலம், கோமயம் கிருமி நாசினியாக விஞ்ஞானிகளால் கூட ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. ஆலய பூசைகளில் பால் அபிகேம் செய்வதோடு மாலைப் பூசையில் பால் பெருமளவில் நிவேதித்து பின் மக்களுக்கு அதனை விநியோகிப்பது வசதிபடைத்த ஆலயங்களின் கடமையாகிறது. இதற்கென ஆலயங்களில் கோசாலை (பசுத் தொழுவங்கள்) அமைக்கப் பெற்று பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது ஆலயங்களின் கடப்பாடாகிறது. இன்றைய உலகில் கலப்படமில்லாது பால், தயிர், நெய் போன்றவற்றை வெளியே பெறமுடியாத அளவுக்கு நிலைமை மாறிவிட்டது. ஆகையால் மாறிய உலகைத் திருத்துவதற்கு ஆலயங்கள் இன்று கடப்பட்டுள்ளன. கோசாலைகளை அமைப்பதில் ஆலய நிர்வாகிகளுக்குப் பல நடைமுறைப் பிரச்சினைகள் இருப்பினும் அர்ப்பணிப்பும், பக்தியுணர்வும் உள்ள நிர்வாகிகள் இதற்கு முன்னுரிமை வழங்குவார்கள் என்பது உண்மை. இதற்கு பக்தர்களின் ஆதரவு காலக்கிரமத்தில் பெருகும் என்பது திண்ணம். கோடிக் கணக்கான ரூபா செலவில் கோபுரங்களை வானளாவ உயர்த்தும் எம்மவர் இத்தகைய விடயங்களில் ஏன் பின்னிற்கின்றார்களோ என்பது அறியாத புதிராகவே உள்ளது.

முன்னைய காலத்தில் கோயிலுக்கு அல்லது வேறு தேவைக்கு பாலைக் கேட்டால் இலவசமாகக் கலப்படம் இல்லாது வழங்கிய எம்மவர்கள் இன்று பாலுக்குள் தண்ணீர் மட்டுமல்ல ஏதேதோவெல்லாம் கலந்து காசுக்கு விற்கவும் தமது மனதைக் கல் மனமாக்கிவிட்டார்கள். இத்தகைய கல் நெஞ்சில் எப்படி இறைவன் நிற்கமுடியும். இவைபற்றி இன்று நாம் சிந்திக்க வேண்டாமா? பசுவைப் பேணிக் கோயில்களில் வளர்ப்பதோடு வீடுகளிலும் வளர்த்து அருள் பெறுவோம்

கோசம் ரக்ஷணம், லோகசம்ரக்ஷணம் பஞ்ச கௌய பூசை

ஆலய அல்லது பூஜா மண்டபத்தில் நெல்லினால் அல்லது அரிசியினால் நவபதங்களை அமைத்து அதில் தர்ப்பை , பூ முதலியவற்றைப் பரப்பி மத்தியில் சிவதத்துவ கோஷ்டத்தில் அப்பிரதிஷ்ட பாத்திரத்தில் பாலையும் கிழக்கில் சதாசிவ தத்துவ கோஷ்டத்தில் சுசார்ந்த பாத்திரத்தில் தயிரையும் தெற்கில் வித்யா தத்துவ கோஷ்டத்தில் தேஜோவத் பாத்திரத்தில் நெய்யையும் வடக்கில் புருதத்வ கோஷ்டத்தில் ரத்நோகத பாத்திரத்தில் கோசலத்தையும் மேற்கில் காலதத்துவ கோஷ்டத்தில் அமிர்தாத் மக பாத்திரத்தில் கோசாணத்தையும் வைக்கவும், வடகிழக்கில் பிரகிருதி தத்துவ கோஷ்டத்தில் அவ்யக்த பாத்திரத்தில் தர்ப்பைப்புல் இட்ட தண்ணீரையும் தென்கிழக்கில் பிறதுதத்வ கோஷ்டத்தில் வியக்த பாத்திரத்தில் அரிசிமாவையும் தென்மேற்கு மூலையில் அப்புதத்வகோஷ்டத்தில் சௌரபாத்திரத்தில் நெல்லிக்காய் வற்றல் பொடியையும் (வடமேற்கு) மூலையில் வாயு தத்துவ கோஷ்டத்தில் சம்யுக்த பாத்திரத்தில் மஞ்சள் மாப்பொடியையும் வைத்தல் வேண்டும்.

ஸ்நான சந்தியா வந்தனம், சிவபூஜை ஆகியவற்றை நிறைவு செய்தபின் சிவாச்சார்யர் சகளீகரணம் செய்து குறித்த கோஷ்டங்களிலும் பாத்திரங்களையும் திரவியங்களையும் பூஜிக்க வேண்டும்.

பாலில் சுக்கிரனையும், தயிரிலே சந்திரனையும், நெய்யில் உருத்திரனையும், கோசலத்தில் அக்கினியையும், கோசாணத்தில் பிரகஸ்பதியையும், தர்ப்பையிட்ட நீரில் கங்கையையும் அரிசி மாவில் கௌரியையும், நெல்லிக்காய்ப் பொடியில் இலக்குமியையும், மஞ்சள் பொடியில் சரஸ்வதியையும் பூசித்தல் வேண்டும்.

பால் முதலான திரவியங்களில் முறையே பாரத்துவாஜர், காசிபர், விஷ்வாமித்திரர், கௌதமர், ஆக்ரேஜர் ஆகிய ரிசிகள் பூசிக்கப்பட வேண்டும். மத்தியில் இருந்து பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகியவை ஈசான தற்புரு, அகோர, வாமதேவ, சந்தியோசாத மந்திரங்களையும் முறையே ஒருதடவை, இருதடவை, மூன்று தடவை, நான்கு தடவை, ஐந்து தடவை என உச்சரித்தல் வேண்டும். அதற்குரிய வேதங்கள் ஓதுவது சாலச் சிறந்ததாகும். ஏனைய கோஷ்டங்களும் அதற்குரிய தேவர்களின் வேதமந்திரத்தினால் பூசித்த பின் நிவேதித்து தூப தீபாராதனை செய்து கொள்ள வேண்டும். பின்காயத்திரி மந்திரத்தினால் கோமூத்திரமும் கந்தத்துவார மந்திரத்தால் கோசாணமும் ஆப்யாயஸ்வ மந்திரத்தினால் பாலையும் ததிக்கிரா பின்னே என்ற மந்திரத்தினால் தயிரையும் சுக்கிரமகி மந்திரத்தால் நெய்யையும் தேவஸ்யத்வா மந்திரத்தினால் தர்ப்பை நீரையும் சேர்க்கவும்.

இதன் பின் சங்கார மார்க்கமாக கோசாணத்தையும் கோமூத்திரத்திலும் கோமூத்திரத்தை நெய்யிலும் நெய்யைத் தயிரிலும் தயிரைப் பாலிலும் சேர்த்து அவற்றைத் தர்ப்பை நீருடன் சேர்க்கவும்.

பின் உரிய வேத் மந்திரங்களால் பூசித்து தூப தீபம்கொடுத்து பின் இறைவனுக்கு அபிசேகித்துக் கொள்ளவேண்டும்.

இப்பிரபஞ்ச கௌயம் ரோக தோச நிவாரணி என்பதைப்புரிந்து நாமனைவரும் இப்பூஜையை கிரியைகளில் நிறைவாக நடைபெற சகல வகையிலும் ஒத்துழைப்பு நல்கிப் பயன் பெறுவோமாக. இப்பூஜை நிறைவுற ஆலய நிர்வாகிகள் மட்டுமல்ல வழிபடுவோரும் சகல வகையிலும் உதவ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமையல் கட்டிலிருந்து வரும் வாசம் நம் நாசியை தட்டினால் அது அம்மாவின் சமையல்...!

சமையல் கட்டிலிருந்து "வாசம் வருதா" என்ற சத்தம் நம் செவியைத் தட்டினால் அது மனைவியின் சமையல்...!












# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 4 | 5 | 1 | 8 | 9 | 2 | 7 |
| 5 | 9 | 8 | 7 | 3 | 2 | 1 | 4 | 6 |
| 2 | 7 | 1 | 9 | 4 | 6 | 5 | 3 | 8 |
| 7 | 4 | 9 | 8 | 6 | 1 | 2 | 5 | 3 |
| 8 | 5 | 2 | 4 | 7 | 3 | 6 | 1 | 9 |
| 1 | 6 | 3 | 2 | 5 | 9 | 8 | 7 | 4 |
| 4 | 2 | 6 | 1 | 9 | 7 | 3 | 8 | 5 |
| 3 | 1 | 5 | 6 | 8 | 4 | 7 | 9 | 2 |
| 9 | 8 | 7 | 3 | 2 | 5 | 4 | 6 | 1 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | | | | 6 | 8 | |
| 8 | | | | 4 | | | | |
| | | 1 | 6 | | | 9 | | |
| 4 | 3 | | | 6 | | 7 | | |
| | 8 | | 9 | 3 | 1 | | | |
| | | 2 | 4 | 7 | | | | 3 |
| | | 3 | | | 4 | 2 | | |
| | | 4 | | 1 | | | | 7 |
| | 2 | 8 | | 9 | | | 5 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Palani கிங் VJ

உடல் வலிமை எப்போது வேண்டுமானாலும் நம்மை விட்டுப் போய்விடும். ஆனால், உள்ளத்தின் வலிமை மட்டுமே நம்முடன் இறுதி வரை பயணம் செய்யும்.




# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து முன்னேறுவர்.

**இடபம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். போட்டிப் பந்தயங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தொழிலில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேசவேண்டாம்.

**மிதுனம்:** முக்கியப் பணியை மறக்க நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகமாகலாம். இலாபம் சுமார். பெண்கள் சிக்கனத்தால் சேமிக்க முயல்வர். கண்களின் பாதுகாப்பில் கவனம்வேண்டும்.

**கடகம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். எதிர்பார்த்த சுபச்செய்தி வந்து சேரும். பணியாளர்களுக்குச் சலுகைப் பயன் கிடைக்கும்.

**சிங்கம்:** வாழ்வில் வளம் பெறப் புதிய வகையில் திட்டமிடுவீர்கள். நண்பரின் ஆலோசனையை ஏற்பது நன்மை தரும். தொழிலில் ஆதாயம் உயரும். பணியாளர்கள் சிறந்த பணிக்காகப் பாராட்டுப் பெறுவர்.

**கன்னி:** உங்களின் இரக்க குணத்தால் சிரமம் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளைத் தாமதமின்றிச் சரி செய்யவும். மிதமான வருமானம் இருக்கும். உடல் நலத்துக்கு மருத்துவச் சிகிச்சை உதவும்.

**துலாம்:** வழக்கத்துக்கு மாறான பணி தொந்தரவு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம்போதும். இலாபம் சுமாராக இருக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் சுப விடயம் குறித்த பேச்சு நடக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். அரசியல்வாதிகளுக்கு எதிர்ப்பாளரால் இருந்த தொல்லை மறையும்.

**தனுசு:** சிலரது பேச்சு, உங்களைச் சங்கடப்படுத்தலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். எதிர்பார்த்ததைவிட வருமானம் குறையும். பெண்கள் ஆடம்பர எண்ணத்தைத் தவிர்க்கவும். உடல்நலனில் கவனம் தேவை.

**மகரம்:** இஷ்டதெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியைக் கண்டு வியப்படைவீர்கள். சேமிக்கும் விதத்தில் வருமானம் வந்துசேரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கும்பம்:** எவருக்கும் வாக்குறுதி தரவேண்டாம். தொழில், வியாபாரம் வளரக் கூடுதல் உழைப்பு தேவை. வருமானம் சுமார். சொத்து ஆவணத்தைக் கவனமுடன் பாதுகாக்கவும். அரசியல்வாதிகளுக்கு பேச்சில் நிதானம் அவசியம்.

**மீனம்:** மனதில் ஆன்மிக சிந்தனை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் தாராள முன்னேற்றம் உருவாகும். பணவரவு திருப்தி தரும். மாமன், மைத்துனருக்கு உதவுவீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

# சென்னையில் உருவாகும் கமெரா அருங்காட்சியகம்

இத்தனை கமெராக்களா என்று வியக்கும் வகையில் கமெரா அருங்காட்சியகம் சென்னை வி.ஜி.பி கிங்டம் வளாகத்தில் உருவாகி வருகிறது.

பிரபல ஓவியர் ஏ.பி.ஸ்ரீதர் இந்தப் பிரம்மாண்ட கமெரா அருங்காட்சியகத்தை உருவாக்கி வருகிறார். இங்கே உலகின் அதிநீளமான மம்மோத் கமெரா முதல் 11 கிராம் எடையளவே கொண்ட சிறிய கமெராக்களும் அடங்கும். அதுமட்டுமன்றி 3டி பிஸ்டல் வாக்கிங் ஸ்டிக் கமெரா என்று விதம் விதமான கமெராக்களை காட்சிப் படுத்தவிருக்கிறார்கள்.

இது தவிர, வித்தியாசமான புகைப்படங்கள், கலை தொடர்பான சுவாரஸ்யமான தகவல்கள் அடங்கிய புத்தகங்கள், ஆவணப் படங்கள் என்று வித்தியாசமாக அருங்காட்சியகத்தை உருவாக்கி வருகிறார்கள்.

உலக ஒளிப்பட தினத்தில் இந்த அருங்காட்சியகத்தை ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராம் திறந்து வைக்கிறார். கமெரா வரலாறுகள் குறித்த ஆவணக் குறும்படங்களை நடிகர் சிவகார்த்திகேயன் வெளியிடுகிறார்.

இந்தக் கமெரா அருங்காட்சியகம் தினமும் முற்பகல் 10 மணி முதல் இரவு 8 மணி வரை பொதுமக்களுக்காகத் திறக்கப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆண்களுக்கு கற்கள் பதித்த வேட்டிகள் அறிமுகமாகியுள்ளன. விழாக் காலங்களில் ஆண்கள் அணியும் கலாசார ஆடை வேட்டி ஆகும். கால மாற்றத்துக்கிணங்க ஆண்களின் வேட்டிகளும் நன்கு வடிவமைக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய பட்டுக்கரை பதித்த வேட்டிகளில் கற்கள் வேலைப்பாடுகளும் உள்ளடங்கலாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை, 3 ஆயிரம் ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

**இது புதுசு**



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 700 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 450 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 800 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 800 | 700 | 500 | 500 |
| சுறா | 500 | 500 | 600 | 800 | 1000 | 800 | – |
| சீலா | 300 | 600 | 400 | 600 | 500 | 600 | – |
| விளை | 650 | 600 | 400 | 600 | 600 | 600 | 500 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 400 | 350 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 500 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 600 | 500 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | 500 | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 150 | 300 | 300 | – |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | 250 | 400 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | – | 300 | 300 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | 400 | 160 |
| மதனம் | 150 | 250 | 180 | 400 | 300 | 350 | 250 |
| கொய் | 100 | 850 | 60 | 70 | 80 | 20 | – |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 400–500 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | – | 200 | – |

# சமையல் குறிப்புகள்

- வாழைக்காய் நறுக்கும்போது கையில் ஏற்படும் பிசுக்கு நீங்க சிறிது தயிரால் கையைக் கழுவலாம்.
- முட்டைக்கோவா, கீரை இவற்றை சமைப்பதற்கு முன்பு வெந்நீரில் சிறிது உப்பு சேர்த்து அதில் சிறிது நேரம் போட்டு வைத்தால் அவற்றில் உள்ள புழு, மண் அடியில் தங்கிவிடும்.
- குருமா, தேங்காய்ச் சட்னி இவற்றுக்கு அரைக்கும்போது முந்திரிப் பருப்பு சில சேர்த்து அரைத்தால் சுவையாக இருக்கும்.
- அடைக்கு அரைத்த மாவில் சிறிது மஞ்சள் பொடி சேர்த்து இட்லி தட்டில் ஊற்றி வேகவைத்துச் சாப்பிட்டால் எளிதில் ஜீரணமாகும்.
- சவ்வரிசியை வறுத்து பொடி செய்து வைத்துக்கொண்டு அடை, வடை, தோசை செய்யும்போது சிறிது சவ்வரிசி மாச் சேர்த்து செய்தால் மொரு மொரு வென்றிருக்கும்.
- அடை, பக்கோடா செய்யும்போது புதினா இலை சேர்த்து செய்தால் வாசனையாக இருக்கும். உடலுக்கும் நல்லது.
- தக்காளியின் தோல் நீக்க தக்காளியின் மேல்பக்கமும் கீழ்ப்பக்கமும் கத்தியால் சிறிது கீறிவிட்டு 10 நொடிகள் சுடுநீரில் போட்டு எடுத்தால் தோல் சுலபமாகக் கழன்று விடும்.
- சப்பாத்தி மாவுடன் சோயா மாவும் சேர்த்து சப்பாத்தி செய்தால் குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும். புரோட்டின் சத்தும் கிடைக்கும்.

## நாளை

ஆவணி-04
சனிக்கிழமை
-20.08.2016
திதி: துதியை பி.ப.12.55
நட்சத்திரம்: பூரட்டாதி
மு.இ.11.25
ராகுகாலம்: 09.05-10.35
வரை
சுபநேரம்:03.05-04.35
வரை



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 80 | 120 | 40 | 40 | 30 | 30 |
| கத்தரி | 80 | 60 | 20 | 80 | 60 | 40 | 90 | 30 |
| கரட் | 100 | 120 | 150 | 140 | 160–180 | 200 | 110 | 140 |
| மரவள்ளி | 100 | 100 | 80 | 80 | 80 | 80 | 80 | 60 |
| பயிற்றை | 40 | 50 | 60 | 40 | 60 | 40 | 100 | 40 |
| பாகல் | 120 | 100 | 120 | 120 | 140 | 120 | 240 | 80 |
| கருணைக்கிழங்கு | 150 | – | 120 | – | 120 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 75 | 90 | 85–80 | 80 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 60 | 70 | 60 | 80 | 70–80 | 60 | 90 | 60 |
| பூசணி | 40 | 40 | 50 | 60 | 40–60 | 40 | 70 | 40 |
| தக்காளி | 40 | 60 | 60 | 80 | 40–50 | 50 | 120 | 30 |
| வாழைக்காய் | 100 | 110 | 60 | 120 | 80–100 | 80 | 70 | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 15–20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 200 | 200 | 180 | 160 | 200 | 400 | 200 |
| புடோல் | 40 | 40 | 30 | 60 | 60–70 | 40 | 70 | 40 |
| கோவா | 100 | 120 | 120 | 140 | 100–120 | 160 | 90 | 120 |
| வெண்டி | 80 | 40 | 60 | 80 | 60 | 40 | 70 | 20 |
| போஞ்சி | 150 | 160 | 160 | 180 | 120–140 | 160 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 140 | 100–120 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 28 | 40 | 30 | 20–30 | 40 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 100 | 100 | 90–100 | 120 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 200 | 100 | 140 | 120–140 | 200 | 120 | 160 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 120 | 140 | 200 | 200 | 160–200 | 240 | 200 | 100 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 80 |
| முருங்கைக்காய் | 70 | 60 | 80 | 80 | [illegible] | [illegible] | [illegible] | 60 |




# தக்காளி தோசை

**தேவையான பொருள்கள்**

பச்சரிசி – ஒரு கப்
தக்காளி – 2
துவரம் பருப்பு – ஒரு மேசைக்கரண்டி
மிளகாய் வற்றல் – 3
கறிவேப்பிலை – ஒரு கெட்டு
பெருங்காயத் தூள் – கால் தேக்கரண்டி
கல் உப்பு – அரை தேக்கரண்டி

**செய்முறை**

ஒரு பாத்திரத்தில் பச்சரிசி, மிளகாய் வற்றல், துவரம் பருப்பு, தக்காளி போட்டு ஒரு மணிநேரம் ஊற வைக்கவும்.

மிக்ஸியில் ஊற வைத்தவற்றை போட்டு உப்பு, பெருங்காயத் தூள் போட்டு தண்ணீர் சேர்த்து தோசைமாப் பதத்தில் அரைத்துக் கொள்ளவும்.

அரைத்த மாவை ஒரு பாத்திரத்தில் போட்டு கறிவேப்பிலை சேர்த்து கரைத்துக் கொள்ளவும்.

தோசைக்கல்லை அடுப்பில் வைத்து எண்ணெய் தடவி காய்ந்ததும், ஒரு கரண்டி மாவை எடுத்து தோசைக்கல்லில் முழுவதும் பரவலாக ஊற்றவும். தோசைக்கல்லில் மாவை ஊற்றி தேய்க்கக் கூடாது.

மேலே எண்ணெய் ஊற்றி வெந்ததும் திருப்பிப் போட்டு எடுக்கவும். சுவையான தக்காளி தோசை தயார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.சிங்கர் கொண்டாட்டத்தின் மூலம் களைகட்டும் யாழ்ப்பாணம்




நீடித்து உழைக்கின்ற நுகர்வோர் சாதனங்களின் விற்பனையில் நாட்டில் முன்னிலை வகித்து வருகின்ற சிங்கர் ஸ்ரீலங்கா பீஎல்சி, ஓகஸ்ட் 20 முதல் 23 வரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஏற்பாடு செய்துள்ள Yaal Singer Fiesta என்ற 4 நாள் நிகழ்வின் மூலமாக யாழ்ப்பாணத் திலுள்ள மக்களுக்கு ஆனந்தமான அனுபவத்தை வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் சிங்கர் நிறுவனம் சந்தைப்படுத்தி வருகின்ற உலகத்தரம் வாய்ந்த 40 இற்கும் மேற்பட்ட வர்த்தக நாமங்களின் கீழான உற்பத்திகள் இந்த யாழ்.சிங்கர் கொண்டாட்ட நிகழ்வில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இதில் பங்குபற்றுபவர்கள் மொபைல் தொலைபேசிகள், டப் சாதனங்கள் போன்ற தனிப்பட்ட பாவனை சாதனங்கள் முதல் வீட்டுப் பாவனைப் பொருள்கள் மற்றும் சமையலறைச் சாதனங்கள் என பல்வேறு வகையான உற்பத்திகளுக்கு 50 வீதம் வரையான விலைத் தள்ளுபடிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனக் கூறப்பட்டுள்ளது. மேலும், தினசரி சமையல் விளக்க நிகழ்வுகள், தையல் விளக்க நிகழ்வுகள், புதிய உற்பத்திகளின் அறிமுகம், சிறுவர்களுக்கான விளையாட்டு அம்சங்கள், பொழுதுபோக்கு நிகழ்வுகள், போட்டிகள், வியப்பூட்டும் பரிசுகளுடன் தினசரி குலுக்கல் சீட்டிழுப்புக்கள், மாபெரும் இசை நிகழ்வு மற்றும் பலவேடிக்கை நிரம்பிய நிகழ்வுகள் அடங்கலாக முழுக் குடும்பத்தினருமே மகிழக் கூடிய வகையில் பல்வேறுபட்ட செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன என்றும் சிங்கர் கூறியுள்ளது.

இந்தக் கொண்டாட்ட நிகழ்வு தொடர்பில் சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் துறை பணிப்பாளரான குமார் சமரசிங்க கருத்து வெளியிடுகையில்,

நாட்டின் அனைத்து பாகங்களிலும் வளர்ச்சி கண்டு வருகின்ற எமது வாடிக்கையாளர் தளத்தை எட்டுவதில் சிங்கர் எப்போதும் முன்னின்று செயற்பட்டு வருகின்றது. எமது விசாலமான வலையமைப்பின் மூலமாக நாம் அனைத்து பகுதிகளிலும் கால்பதித்திருப்பினும், எமது தற்போதைய மற்றும் எதிர்கால வாடிக்கையாளர்களுடன் நேரடியாக தொடர்புபட்டு, விரைவாக மாற்றம் கண்டு வருகின்ற அவர்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு உலகத்தரம் வாய்ந்த உற்பத்திகளை தள்ளுபடிகளுடனான விலைகளில் அவர்கள் கொள்வனவு செய்ய வாய்ப்பை வழங்கவேண்டியது அவசியம் என நாம் நம்புகின்றோம். யாழ். சிங்கர் கொண்டாட்ட நிகழ்வின் மூலமாக முழுக் குடும்பத்தினருமே பங்குபற்றி மகிழும் வகையில் புதிய மட்டத்திலான நிகழ்வை நாம் ஏற்பாடு செய்துள்ளோம். நாடளாவிய ரீதியில் வியாபித்துள்ள 420 இற்கும் மேற்பட்ட காட்சியறைகள் மற்றும் அதற்கு ஈடாக வியாபித்துள்ள விற்பனைக்குப் பின்னரான சேவை வலையமைப்பு அடங்கலாக, தொடர்ச்சியாக வளர்ச்சி கண்டு வருகின்ற நிறுவனத்தின் வலையமைப்பினூடாக சிங்கர் உற்பத்திகள் கிடைக்கப் பெறுகின்றன. இலங்கையில் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதில் நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்புடனான ஈடுபாடானது தொடர்ச்சியாக 10 ஆண்டுகளாக வருடத்திற்கான மக்களின் அபிமானத்தை வென்றெடுத்த மிகச் சிறந்த வர்த்தக நாமம் என்ற விருதை வென்றுள்ளதன் மூலமாக தொடர்ச்சியாக நிரூபிக்கப்பட்டுவந்துள்ளது–என்றார். (கு)

## 60 ஆவது ஆண்டில் எமரல்ட்




எமரல்ட் சர்வதேச நிறுவனம் 60 ஆவது ஆண்டு பூர்த்தியை கொண்டாடுகின்றது.

ஆடவர்களுக்கான சேர்ட்களுக்குப் புகழ்பெற்ற எமரல்ட் நிறுவனம் 60 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டுப் பல்வேறு சலுகைகளை நுகர்வோர்களுக்கு வழங்குவதாக அறிவித்துள்ளது.

சர்வதேச தரத்திலான ஆடை உற்பத்திகளைத் தேசிய மற்றும் சர்வதேச நுகர்வோரின் விருப்பத்துக்கு உற்பத்தி செய்து அவற்றை விநியோகிப்பதில் முன்னிலை வகிக்கும் எமரல்ட் சர்வதேச நிறுவனம் இன்று அனைவரினதும் உள்ளம் கவர் தெரிவாக மாறியுள் ளதாக நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.எப்.எம்.ஹிக்ரம் அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார். எமரல்டுடன் வெற்றி பெறுங்கள் என்ற போட்டியில் 6மில்லியனுக்கும் அதிகமான பணப்பரிசில்களை நிறுவனம் வழங்குகின்றது. (கு)




## சுப்பர் செவன்ஸ் ரக்பி போட்டியில் முதல் சுற்றில் மொபிடெல் ஈகிள்ஸ்

இலங்கை ரக்பி சங்கத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்ட 2016 சுப்பர் செவன்ஸ் கழகங்களுக்கிடையிலான ரக்பி போட்டியின் முதல் கட்டப் போட்டி முடிவின் போது வெற்றிக் கிண்ணத்தினை மொபிடெல் ஈகிள்ஸ் ரக்பி குழு பெற்றுக்கொண்டுள்ளது.

இந்தப் போட்டி கடந்த 5 ஆம், 6ஆம் திகதிகளில் கொழும்பு ரேஸ்கோஸ் மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் 21 - 14 எனும் புள்ளிகள் அடிப்படையில் மொபிடெல் ஈகிள்ஸ் அணி வெற்றி பெற்றது. இவ்வணியைச் சேர்ந்த தரிந்த ரத்வத்த கோல் ஒன்றினைப் பெற்று அணியின் வெற்றிக்கு வழி வகுத்தார். (கு)

## வணிகம்

## நுட்பம்



## கூகுளின் டூவோ

டூவோ எனப்படும் புதிய காணொலி செயலியொன்று கடந்த செவ்வாய்க்கிழமை அறிமுகம் செய்யப்பட்டது. இதனை உலகின் முன்னணி நிறுவனமான கூகுள் நிறுவனம் தயாரித்து வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக கூகுள் குழும சேவைப் பிரிவு அதிகாரி அமித் ஃபுலே வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

காணொலி அழைப்புகளுக்கு வரவேற்பு அதிகரித்து வரும் நிலையில், கூகுள் தனது புதிய சேவையான டூவோவை அறிமுகம் செய்கிறது. ஏற்கெனவே உள்ள காணொலி அழைப்பு செயலிகளைவிட இதில் முக்கிய வேறுபாடு என்னவென்றால் காணொலி அழைப்பு கைத்தொலைபேசியில் வரும்போதே அழைப்பவரின் காட்சியைக் காண முடியும்.

எனவே அழைப்பை ஏற்பதா வேண்டாமா என நீங்கள் தீர்மானிக்கலாம். டூவோவின் இந்த வசதிக்கு நாக்–நாக் என்று பெயர். அன்ட்ரொய்ட் மற்றும் அப்பிளின் ஐஓஎஸ் செல்லிடப்பேசிகளில் இந்தச் செயலியைப் பயன்படுத்தலாம்.

வை–பையிலும் செல்லிடப்பேசியின் இணையத் தொடர்பிலும் தானாக மாறி மாறிச் செயல்படும் விதமாக இந்தச் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளதால், அழைப்புத் துண்டிப்பு இல்லாமல் பேச முடியும் என்பது இதன் மற்றொரு சிறப்பம்சம்.– என்றார்.

டூவோவின் செயல்பாடு தொடங்கிவிட்டதாக கூகுள் தெரிவித்தபோதிலும் உலகின் அனைத்துப் பகுதிகளிலும் இந்த செயலியின் சேவையைப் பெறுவதற்கு இன்னும் ஓரிரு நாள்களாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## போர்ட் நிறுவனத்தின் ஆளில்லா கார்

சாரதி இல்லாமல்முற்றிலும்தான்னிச்சையாக பயணிக்கக் கூடிய நவீன காரை எதிர்வரும் 2021ஆம் ஆண்டுக்குள் அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக உலகின் முன்னணிக் கார் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றான போர்ட் தெரிவித்தது.

கூகுள், மேர்சிடிஸ் பென்ஸ், டெஸ்லா மோட்டார்ஸ், பி.எம்.டபிள்யூ உள்ளிட்ட முன்னணி நிறுவனங்கள்நவீனதொழில்நுட்பத்துடனான தமது புதிய தயாரிப்பாக சாரதி இல்லாக் கார்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இவற்றுக்கு போட்டியாகவே தற்பொழுது போர்ட் நிறுவனமும் இந்த முயற்சியை மேற்கொள்கின்றது.



போர்ட் தயாரிக்கும் இந்த காரில் சுக்கான் இருக்காது என்றும், லிடார் என்ற புதிய தொழில்நுட்பத் திட்டத்தின் அடிப்படையில் தனக்கு அருகில் மற்றும் தனது சூழலில் இருக்கும் விடயங்களை உணர்ந்து பயணிக்கும் விதத்தில் இது தயாரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தாம் தயாரிக்கும் இந்தப் புதிய கார், முதலில் வர்த்தக பயன்பாடுகளுக்கும் பின்னர் பொது மக்களின் போக்குவரத்திற்கும் பயன் படுத்தப்படும் என போர்ட் நிறுவன தலைமைச் செயல் அதிகாரி மார்க் பீல்ட்ஸ் தெரிவித்தார்.

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை தகவல்கள்

| | | | |
|---|---|---|---|
| 18/8/2016 | | | |
| www.cse.lk | | | |
| ASPI | 15.30 | 6,593.25 | 6,577.95 |
| S&P SL20 | 15.72 | 3,622.22 | 3,606.50 |
| வியாபாரப்புரள்வு | | 1,784,420,608 | 851,718,976 |
| உள்நாடு- கொள்வனவு | | 484,637,088 | 747,483,584 |
| விற்பனை | | 827,845,312 | 657,631,616 |
| வெளிநாடு- கொள்வனவு | | 1,299,783,552 | 104,235,376 |
| விற்பனை | | 956,575,296 | 194,087,392 |

| அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | | | | |
|---|---|---|---|---|
| நேஷனல் டிவேலப்மென்ட் வங்கி | NDB.N | 164 | 5,169,373 | 852,945,860 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 158 | 2,188,151 | 345,443,461 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 139 | 652,901 | 91,129,231 |
| டிஸ்டில்லரீஸ் | DIST.N | 273.5 | 287,885 | 78,791,591 |
| லங்கா ஐ.ஓ.சி | LIOC.N | 41 | 1,090,281 | 44,289,486 |
| சன்ஷைன் ஹோல்டிங்ஸ் | SUN.N | 56 | 788,188 | 43,729,513 |
| லங்கா ஓரிக்ஸ் லீசிங் | LOLC.N | 87 | 450,500 | 39,194,302 |
| அமானா தக்காபுல் லைப் | ATLL.N | 1.8 | 14,445,057 | 25,893,035 |
| ரெக்ஸ்போட் பெர்ஷீ | TJL.N | 40 | 458,120 | 18,300,365 |
| கொழும்பு லண்ட் | CLND.N | 28.9 | 562,302 | 16,037,855 |

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| [illegible] | 295 |
| [illegible] | 232 |
| விலை உழைப்பு | 13.6 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

பங்குலாபம்
ராயல் பால்ம்ஸ் பீச் (HARI) - பங்கு ஒன்றிற்கு Rs. [illegible]
கெஸ்டெட்னெர் சிலோன் (GEST) - பங்கு ஒன்றிற்கு Rs.1.00
ஹைகம் வாயம்ப சல்ட்டேர்ன்ஸ்(RWSL) -பங்கு ஒன்றிற்கு Rs. 0.10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரவிப்பாஞ்சான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை அடுத்து அவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டிருந்தனர். இந்த நிலையில் மீள்குடியேற்ற அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பரவிப்பாஞ்சான் மக்கள் நேற்று முன்தினம் புதன்கிழமையுடன் தமது போராட்டங்களை முடிவுறுத்தியிருந்த நிலையில், கிளிநொச்சிக்கு நேற்று வருகை தந்த அமைச்சர் சுவாமிநாதன், பரவிப்பாஞ்சான் மக்களை மாவட்டச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இராணுவத்தினரின் பிடியிலிருந்து பரவிப்பாஞ்சான் எப்போது விடுவிக்கப்படும், நாம் எப்போது மீளக்குடியமர்வது என்று மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனிடம் மக்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சுவாமிநாதன், விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். எப்போது என்று கூற முடியாது - என்றார்.

இதன்போது மக்கள், இரண்டு வாரங்களில் காணிகள் விடுவிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்தார் என, எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் எங்களிடம் குறிப்பிட்டிருந்தார். எனவே நாம் இரண்டு வாரங்களில் அங்கு செல்ல முடியுமா என்று கேள்வி எழுப்பினர்.

அதற்கு அமைச்சர், உடனடியாக மீளக்குடியமர முடியாது. பரிசீலனை செய்தே இதற்கு முடிவு எடுக்க வேண்டும். எங்களுடைய கருத்தில் நம்பிக்கை வையுங்கள். இரண்டு வாரங்கள், ஒரு மாதம் கூடச் செல்லலாம் - என்றார்.

பரவிப்பாஞ்சான் மக்கள் கடந்த சனிக்கிழமை, இராணுவ முகாம் எதிரில் தமது காணிகளை விடுவிக்கக் கோரிப் போராட்டதை ஆரம்பித்திருந்தனர். இரவு - பகலாக இராணுவ முகாம் முன்பாக உணவு சமைத்து உண்டுகொண்டு போராடினார்கள்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், அவர்களைச் சென்று சந்தித்திருந்தார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்டோருடன் தொடர்பு கொண்டு பேசினார். இரண்டு வாரங்களில் காணி விடுவிக்கப்படும் என்று வழங்கப்பட்ட உறுதிமொழியை மக்களுக்குத் தெரிவித்தார். இதனையடுத்து மக்கள் தமது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5-ரி)


## மரண அறிவித்தல்

### அன்ரனி யோசப்

(பொஸ்ஸா - கொழும்பு) (கடல் உணவு ஏற்றுமதியாளர்)



பிறப்பு
23.06.1962
இறப்பு
15.08.2016

கொழும்பைப் பிறப்பிடமாகவும், குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரனி யோசப் (பொஸ்ஸா) 15.08.2016 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சக்கரியாஸ் - செலின் தம்பதியரின் அன்பு மகனும், பிறேமாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செபஸ்ரி - சிசிலியா தம்பதியரின் அன்பு மருமகனும், லவன்சியா (British Business School.Temple Road) டிவோன்யூட், கிளெறிகிறிஸ்ரன் (புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கொன்மக்காரியஸ்சின் (பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை) அன்பு மாமனும், மெல்கீஸ்இன் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.08.2016) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து யாழ்.புனித மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

63/4, மவுண்கார்மல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(ஜெ.3859) (13.18)

077 616 8170, 077 724 3028, 021 222 8311



## மரண அறிவித்தல்

### திருமதி சுகந்தி விஜியகுமார்



யாழ். குடத்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுகந்தி விஜியகுமார் (17.08.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சிவகுரு-ரஞ்சிதமலர் தம்பதி களின் அன்பு மகளும் யேசுதாசன்- பார்பறம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் விஜியகுமார்(விஜியன்) அவர்களின் அருமை மனைவியும் சுஜிதா, சுனந்தா, விதுசா ஆகியோரின் அன்புத் தாயாரும் எதிர்மன்னசிங்கம் (பிரான்ஸ்), ஜெயசிங்கம்(பிரான்ஸ்), குணசிங்கம் (பிரான்ஸ்), சுகிர்தா (பிரான்ஸ்), புஸ்பானந்தி (பிரான்ஸ்) . ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்ரன் பெனடிற் (மலேசியா), டயானா (பிரான்ஸ்), டயஸ்(இலங்கை), டங்கேஸ்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் பிரான்சில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 76, A.V. றோட்,
கொழும்புத்துறை.

(68232)
(12.18)

தகவல்:
P.ஜேசுதாசன்
குடும்பத்தினர்.

076 658 2059,+ 33651449992,
+33669723878,+33617015548,+33661191493,
+33695472904, +33781447143



## மரண அறிவித்தல்

### திருமதி உரோகினி குருசாமி



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உரோகினி குருசாமி நேற்றுமுன்தினம் (17.08.2016) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குருசாமியின் (எழுதுவினைஞர்) அன்பு மனைவியும் விமலன் (அதிபர் - சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), ரஜனி, ராஜ்மோகன் (ஜேர்மன்), முகுந்தன் (விளையாட்டுத்துறை பயிற்றுநர் - மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), இராகவன், பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தாயும், ஜெயபாரதி (ஆசிரியர் - யா/ ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலை), மங்களேஸ்வரன் (பிள்ளையார் களஞ்சியம் - கும்பளாவளை), தயாளசுந்தரி (ஜேர்மனி), யசோதராதேவி (ஆசிரியர் - யா/நாகர்கோயில் மகா வித்தியாலயம்), லதாங்கி, இராஜராஜேஸ்வரி (உளவளத் துணையாளர் - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியும், கௌதமி, அருண்பிரகாஷ், சாருஜன், ஆர்த்திகா, அனுஷன், அனித்தா, சந்தோஷ், வைஷ்ணவி, பிரணவி, பிரவீனா, பிரபஞ்சன், பிரியங்கன், அபிப்பிரியன், அக்சாயினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2016) வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கும்பளாவளை
பிள்ளையார் கோயிலடி,
அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

(ஜெ.3870) (13.18)

077 905 8543/ 077 679 3797



## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி இராமகிருஷ்ணா

(இளைப்பாறிய முகாமையாளர்- இலங்கை வங்கி)



உடுவில் வேதாரணியர்வளவைப் பிறப்பிடமாகவும், கொழும்பு இல. 18, I.B.C றோட், வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராமகிருஷ்ணா 16.08.2016 செவ்வாய்க்கிழமை அதிகாலை அவரது இல்லத்தில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- சுகிர்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன்- கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதி (இளைப்பாறிய ஆசிரியை இரசாயனவியல் ) அவர்களின் அன்புக் கணவரும் சந்திரிக்கா (ஆஸ்திரேலியா), கீதா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி தர்மேஸ்வரி- சச்சிதானந்தம், காலஞ்சென்ற ஜெகநாதன், விநாயகமூர்த்தி, திருமதி ஜெகதீஸ்வரி - பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கருணாகரன் (ஆஸ்திரேலியா), புவிச்சந்திரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும் கேசாயினி, சஞ்சிவாணி, அக்சயன், ஆரிணி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.08.2016) சனிக்கிழமை மாலை 6 மணி முதல் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு மறுநாள் (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 2.00 மணிக்கு கல்கிசை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No: 18,IBC றோட்,
வெள்ளவத்தை,
கொழும்பு -06

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

011 250 3325



## மரண அறிவித்தல்

### திருமதி றோஸ்மலர் விசுவாசம்



நாரந்தனை வடமேற்கு, அம்பலவாணர்வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றோஸ்மலர் விசுவாசம் 15.08.2016 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மிக்கேல் - லூறுதின் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற விசுவாசத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கிறிஸ்ரீனா (லேபி) மற்றும் செல்வமலர் (கொழும்பு), பாக்கியலீலா(மணி-ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் அருளப்பு (கொழும்பு), அன்ரனிபெனாண்டோ (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் சந்திரன்(கொலண்ட்), மேபிள், ஜெஸ்மின்யசோதா (குஞ்சரம்), இந்திரன் (லண்டன்), இந்திரா (ஜேர்மனி) ஆகியோரின் தாயும் வனசா(கொலண்ட்), பீற்றர், மனோகரசீலன், விமலா (லண்டன்),யோகராசா (ஜேர்மனி), ஆகியோரின் மாமியாரும் செரோன் (கொலண்ட்), றாஜினி(இத்தாலி), றஜனி, றஜிதா, நிறோஜன்(இத்தாலி), றஜீவன், றஜீந்திரன், நிலக்ஷன், சுகந்தினி, சுகந்தன், சுதர்சன்(டோகா - கட்டார்), சுகிர்தன், ஜரின், டினோஜா (லண்டன்), கறோளின்(லண்டன்), மைக்கல்(லண்டன்), ஸ்பெயின்(ஜேர்மனி), சுவைதா (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் எலேனா (இத்தாலி),ஏஞ்சல்(இத்தாலி), சந்தோஷ்(இத்தாலி), அப்ஷிகா, லியோனா, வினீத், வினோத், விதுர்சிகன், குபேக்சன், நிவேதா (இத்தாலி), றம்மியா, றபிசேக், சுஜன்சியா, சுகர்னியா, குணாளினி, சுவானுஜன், அனோஜன், சுலச்சன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.08.2016) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு இராஜப்பர் சின்னப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை வடமேற்கு,
அம்பலவாணர் வீதி,
ஊர்காவற்றுறை.

தகவல்:
குடும்பத்தினர்.

077 865 9227


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டுத் திவச அழைப்பு

கடந்த 30.08.2015 அன்று
சிவபதம் அடைந்த எங்கள்
குடும்பத் தலைவி

அமரர்
**பத்மபிரியா
சசிகுமார்**



அவர்களின் சிவபதப்பேறு குறித்த ஆண்டுத்திவசக் கிரியைகள் 19.08.2016 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணேஸ்வரம், அளவெட்டி.
077 1676243, 077 0376928
குடும்பத்தினர்.



## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**யோகாம்பிகா
உதயகுமார்**
(அச்சுவேலி மத்திய
கல்லூரி, ஆசிரியை)

பிறப்பு
06.06.1967

இறப்பு
11.08.2014



இரண்டு வருடங்கள் - நம்
இரு விழிகளிலும் ஈரங்கள்
இரண்டு பாதையில் மேன்மையாய்!
ஆசிரியராய் மற்றொன்று அன்னையாய்!
காலனவன் உம்மை அழித்தாலும்-உம்
நினைவுகளை என்றும் யாராலும் அழிக்க முடியாது

அச்சுவேலி தெற்கு.
அச்சுவேலி.
குடும்பத்தினர்.



## ASTROLOGY Softwares Based on வாக்கிய பஞ்சாங்கம்

ICS நிறுவனத்தாரின் வாக்கிய பஞ்சாங்க முறையிலான Softwares விற்பனைக்குண்டு. துல்லியமான கணிதம், எல்லா நாடுகளுக்குமானது. திருமணப் பொருத்தம், சுபமுகூர்த்தம், குழந்தை பெயர், நியுமாலஜி உள்ளடக்கப்பட்டுள்ளது. ஜாதகம் 7,11,21,115 பக்கங்களில் பிரிண்ட் செய்யும் வசதி.

077 789 1945 - கமலநாதன்



## தங்க ஆபரணங்கள் ஏல விற்பனை

இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி கடன் ஒழுங்கமைப்பின் கீழ் மட்டக்களப்பு கிளையில் 30.06.2016 க்கு முன் தங்க கடனுக்காக வைக்கப்பட்ட நகைகளும் 60 நாட்களுக்கு மேல் மீட்கப்படாத தவணை கடந்த தங்க நகைகளை 26.08.2016ம் திகதி காலை 10.00 மணி முதல் இல.187, திருகோணமலை வீதி, மட்டக்களப்பிலுள்ள ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி அலுவலகத்தில் 85வது சட்டத்தின் நிபந்தனைகள் பிரகாரம் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

ASIA ASSET FINANCE PLC
The unconventional finance company
Muthoot Finance

உதவி பொது முகாமையாளர் (கடன்மீட்பு)
இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
Hotline: 071-6531349
Tel: 0115-899300 / 0115-669922
Fax: 0112577477 Reg No: PB139



## சீமெந்துக் கற்கள் விற்பனைக்கு

தரமான சீமெந்துக் கற்கள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. யாழ்ப்பாணம்,கிளிநொச்சி பகுதிகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.

தொடர்பு: 075 0391980
077 0494246


## சன்னா...

இடம்பெற்றுள்ளது. கோரமாக வெட்டுக்காயங்களுக்கு உள்ளான அவர், உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது மூன்றரை மணித்தியாலத்தின் பின் உயிரிழந்தார்.

வெட்டுவதற்கெனத் திட்டமிடப்பட்டவர் தப்பியோடிய நிலையில் தற்போது அவர் பொலிஸ் நிலையத்தில் வைத்துத் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையிலிருந்து இதற்கு, முன் பகையே காரணம் என்று தெரியவந்துள்ளது–என்றார்.

கொக்குவில் பகுதியில் தற்காலிகமாக வசித்து வரும் 'சன்னா' என்றழைக்கப்படும் குறித்த நபர், சில வருடங்களாக வாள்வெட்டு உள்ளிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது. அவர் முன்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர், பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவர் தற்போதும் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றார். விரைவில் அவர் கைது செய்யப்படுவார் என்றும் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கூறினார்.

சன்னா என்ற நபருக்கும் பொலிஸாருக்கும் தொடர்பு உள்ளதாகவும், இதனாலேயே அவர் கைது செய்யப்படவில்லை என்றும் பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனரே? என்று பொலிஸ் அத்தியட்சகரிடம் கேட்டபோது, அவ்வாறுதான் சில தகவல்கள் தவறாகச் சென்றடைகின்றன. ஆனால் உண்மையில் அவ்வாறில்லை. சன்னா கிளிநொச்சியைச் சேர்ந்தவர். அவரது தாயார் வைத்தியசாலை ஒன்றில் பணி புரிகிறார். அவர்களுக்கும் சன்னாவுக்கும் தொடர்பில்லை என்றும் எமக்குத் தெரிவிக்கப்படுகின்றது. ஆயினும் சன்னா விரைவில் கைது செய்யப்படுவார் - என்று பதிலளித்தார்.

கொல்லப்பட்டவரது சடலம் விசாரணை மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

(த-4-106)


## பணியாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் வாகன சுத்திகரிப்பு நிலையத்தில் பணியாற்றுவதற்கு அனுபவம் உள்ள மற்றும் பழக ஆர்வமுடையோர் தேவை.
தொடர்பு கொள்ளவும்.

077 7729525



## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள மிக்சர் உற்பத்தி நிறுவனத்திற்கு பொதி செய்வதற்கு வேலைக்கு ஆள்கள் தேவை. (பெண்கள்)
அனுபவம் உள்ளவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 500/- ரூபா, மதிய உணவும் வழங்கப்படும்.

தொடர்பு: 075 9789223
021 2052200



## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு டச்சு வீதியில் அமைந்துள்ள 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 5342390
077 9317674



## வேலை வாய்ப்பு

கட்டட வேலை சார்பான எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் பணிகளில் வெற்றிடம் உண்டு.

1) தொழினுட்ப உத்தியோகத்தர்
2) முகாமைத்துவ பயிலுனர்
3) உப/கூலி ஒப்பந்தகாரர்
4) மேசன்/வயறிங்/பெயின்ரிங்/வெல்டிங் வேலையாள்கள்

காலம்: சனி (20.08.2016) 10.00 மணிக்கு

தொடர்பு: 155,மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
070 3232340, 021 2217980



## சிங்களம்

* O/L PAST PAPER CLASS
* ORAL (செவிமடுத்தல் பயிற்சி வகுப்பு)
* சிங்களம் பேச, எழுத புதிய பிரிவுகள்

G.C.E. O/L (சிங்களம்) PAST PAPER CLASSES
ஆரம்பம் 03.09.2016 எவரும் கலந்து கொள்ளலாம்
பதிவுகளை மேற்கொள்ளும்.

Level I, II, III, மற்றும் IV ORAL & செவிமடுத்தல் பயிற்சி வகுப்பு சனி, ஞாயிறு நாட்களிலும் வார நாட்களிலும்.

சிங்களம் பேச, எழுத, வாசிக்க மிக இலகுவான முறையில் கற்பிக்கப்படும் எவரும் எத் தினத்திலும் இணைந்து கொள்ளலாம் இணையும் திகதி எதுவாக இருந்தாலும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். (ஆரம்பம் 03.09.2016)

ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகம்
(SSLEC) இல. 72 இராமநாதன் வீதி, (மிலேனியம் அருகில்) கலட்டி யாழ்ப்பாணம். இல. 41, றக்காலேன் சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
விவரங்களிற்கு- 077 7033729


## அரச...

வேற்றுவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி இன்றைய தினம் விளக்கமளிக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

(த-5)


## மரண அறிவித்தல்

திருமதி
**இராசலட்சுமி சண்முகலிங்கம்**



சுருவில் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், 43, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம் நேற்று (18.08.2016) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பியப்பா - சண்முகலிங்கம் (நோர்தேன் இன்டஸ்ரீஸ் ஸ்தாபகர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான திரு.திருமதி சிற்றம்பலம் (சுருவில் ஊர்காவற்றுறை) தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி தம்பியப்பா (சுருவில் ஊர்காவற்றுறை) தம்பதியரின் அருமை மருமகளும், சுபோதினி, சுபேந்திரன், Dr. விநோதினி, நந்தினி ஆகியோரின் அருமைத் தாயாரும், Dr. உதயகுமாரன், பாலாம்பிகை ஆகியோரின் அருமை மாமியும், சத்தியனின் அருமைப் பேர்த்தியும், காலஞ்சென்ற Dr.ராசலிங்கம் மற்றும் சிவலிங்கம், மகாலட்சுமி, காலஞ்சென்ற ஆனந்தலட்சுமி மற்றும் ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் அருள்கந்தராஜன், நவநீதராஜா ஆகியோரின் அருமைச் சகோதரியும், மாணிக்கவாசகன், காலஞ்சென்ற சபாநாதன் மற்றும் சிவநாதன், உலகநாதன், விஜயலட்சுமி ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

43, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
Dr. விநோதினி
சண்முகலிங்கம் (மகள்)

021 222 8038



## இலங்கை மின்சாரசபை

கூறுவிலை கோரல்

**இலங்கை மின்சாரசபையில் பணிபுரியும் ஊழியர்கள் தங்குவதற்கான விடுதி வாடகைக்கு தேவை.**

இலங்கை மின்சாரசபையின் யாழ். ஒளி மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்கள் தங்குவதற்கான விடுதிகள் தேவை சம்பந்தமாக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. இவ் கேள்விப் பத்திரங்கள் மற்றும் மேலதிக விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் மேலும்

01. கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளும் திகதி:- 19.08.2016 இருந்து 01.09.2016, 12.00 மணி வரை
02. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம்:- 01.09.2016 பி.ப. 2.00 மணி
03. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் இடம்:- யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையம், இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.

கேள்விப் பத்திரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கவும் அல்லது பிரதம பொறியியலாளர் யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையத்திலுள்ள கூறுவிலைப் பெட்டியில் (Tender Box) நேரடியாக இடலாம்.

பிரதம பொறியியலாளர்.
யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையம்.
இலங்கை மின்சார சபை. சுன்னாகம், 40075.

தொலைபேசி இலக்கம்:
021 224 2400/021 224 2247


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்துக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தெரிவித்ததாவது:

காணாமற் போனோர் செயலகம் கொழும்பில் மட்டும் அமையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுவது ஒரு தவறான கருத்தாகும். இந்தப் பணியகத்தின் தலைமைப் பணியகமே கொழும்பில் அமையும். பிராந்திய அலுவலகங்களும் இயங்கும். அவ்வாறான பிராந்திய அலுவலகங்கள் மக்களின் கருத்துக்கு அமைவாக நிறுவும் முடிவை மேற்கொள்ள முடியும். எமது செயலணி ஆரம்பமாகி இடம்பெறும் நிலையில் இந்தச் சட்டவரைவு உருவாக்கத்திலும் எமது கணிசமான அனுசரணை இருந்தது எனலாம்.

இந்தச் சட்ட வரைவு உருவாக்கப்படும்போது எமது வலயச் செயலணிகள் மூலம் இரு தடவைகள் நாட்டின் சகல பிரதேசங்களையும் சேர்ந்த 69 குடும்பங்களை அழைத்துச் சென்று அயலுறவுத் துறை அமைச்சில் நேரடியாக உரையாடி, அவர்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தோம். அவர்களில் வடக்கு-கிழக்கு மக்களும் உள்ளடக்கம்.

அவர்களுக்கான மொழி பெயர்ப்பு வசதிகள் உள்ளிட்டவையும் எம் மால் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இந்த நிலையிலேயே எமது செயலணிகள் இயங்குகின்றன.

இந்தக் காலத்தில் சட்ட உருவாக்கத்தின் தேவை கருதி எமது இடைக்கால அறிக்கை ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது. எனவே இவ்வாறான செயல்பாடுகளில் எமது பங்களிப்புக்களில் இல்லையெனக் கூறிவிட முடியாது - என்றார். (த-5-101)

## மரண அறிவித்தல்கள்

### சிவகுமாரன் பிரணவன்
(சாரு மினிபஸ் உரிமையாளர்)



மயிலிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், சங்குவேலி வடக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுமாரன் பிரணவன் 17.08.2016 புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் லாவண்யாவின் அன்புக்கணவரும் சாதனாவின் பாசமிகு தந்தையும் சிவகுமாரன் - சிவகவி தம்பதியரின் அன்புமகனும் ஜெகதீஸ்வரன் - ரஜனிமாலா தம்பதி யரின் மருமகனும் கலாதரனின் அன்புச்சகோதரரும் கேசனாவின் அன்புமைத்துனரும் கபிஷனின் அன்புப் பெரியதந்தையும் சுபாரத்தினம், பொன்னம்மா, தம்பிராசா, செல்லம்மா, கனகராசா, செல்வரத்தினம் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைள் இன்று (19.08.2016) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று புதவுடல் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி,
சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.
077 8999997, 077 8999991

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### நல்லதம்பி முத்துலிங்கம்



புங்குடுதீவு கிழக்கு 11 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது நல்லூர் சங்கிலியன் வீதியில் வசித்து வந்தவருமான நல்லதம்பி முத்துலிங்கம் அவர்கள் 18.08.2016 வியாழக் கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

393/15 கோயில் வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்
077 9909721

### செல்லத்துரை நாகேந்திரன்
(ஓய்வுபெற்ற கட்டடப் பொறியியலாளர்)

மலர்வு
05.03.1937

உதிர்வு
11.08.2016

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமர்கவும் வைமன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை நாகேந்திரன் 11.08.2016 வியாழக் கிழமை ஆஸ்தி ரேலியாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் மடத்தைச் சேர்ந்த செல்லத்துரை - சரஸ்வதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சாயுடை மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கந்தப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும், சயனொளிபவன், ரவீந்திரன், காலஞ்சென்ற பத்மலோசனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வைத்திய கலாநிதி திருமதி சின்னப்பிள்ளை - நாகேந்திரன் (ஓய்வுபெற்ற பொது வைத்திய நிபுணர் யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும், உமா மாதவன், சர்மிளா ஆகியோரின் அன்புத் தந்தையும், குகதாஸ் கவிதாபிரியதர்சினி, ஹரேந்திரா ஆகியோரின் அன்பு மாமனும், சேயோன், பிரமியா, சௌமியா, ஹரேஸ், ஹரிசா, ஆரூரன், ஆரூபன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 21.08.2016 ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணி தொடக்கம் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் பிற்பகல் 2.00 மணியளவில் கல்கிசை இந்துமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.18 ¼, கொலிங்வூட் பிளேஸ்,
கொழும்பு - 06

தகவல்:
நா.மாதவன்
077 918 4002 (மே.3840) (13.18)

### திருமதி பூபதி கந்தையா



பிறப்பு
13.06.1932

இறப்பு
14.08.2016

யாழ் புளியங்கூடல் வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூபதி கந்தையா கடந்த (14.08. 2016) ஞாயிற்றுக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தையா (Contractor) அவர்களின் அன்பு மனைவியும் உமாதேவி, சித்தராதேவி (இந்தியா), ஈஸ்வரி, விக்னேஸ்வரன், வாமன் ,கணேஸ்வரி, இளமுருகன், சிவநேசன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான கற்பகம், அன்னமுத்து, கந்தையா, கனகரெத்தினம் மற்றும் துரைச்சாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தர்மதுரை, காலஞ்சென்ற நல்லநாதன் மற்றும் அற்புதராசா,ஜெயந்தி, கலைவாணி, பேரின்பநாதன்,நிஷாந்தி, சிவமதி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான ராசம்மா, கந்தப்பு, அன்னம்மா,தெய்வானை,சோமசுந்தரம், தில்லையம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் தேவிகா-சுதாகரன், வனஜா-சுபாஸ்கரன், கார்த்திகா-அமுதன், காலஞ்சென்ற அரிகரன் மற்றும் வாகீசன்-கார்த்திகா, அகிலன், சஞ்சீவன், பிரதுஜா, அகல்யா, அனிஜா, பிரியங்கா, துளசிகா, கார்த்திகேயன், சரண்யா, நியுந்தன், சாருகா, கேஷன், கேஷிகா, ஹரிசன், சிவஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அச்சுதன், உமாசுதன், சங்கவி,அக்ஷரன், அக்ஷனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.08.2016 புதன் கிழமை கனடாவில்(ரொரான்ரோ) நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி
(கனடா) +14166091626
(இந்தியா) +914314050810

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி றட்ணாம்பாள் வீரவாகு




சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெஸ்ரேன் லொட்ஜ் உரிமையாளர் சதாசிவம் வீரவாகுவின் அன்பு பாரியார் திருமதி றட்ணாம்பாள் வீரவாகு நேற்று முன்தினம் (17.08. 2016) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

தகவல்: இ. றமேஸ்
(மருமகன்)

### கந்தையா வேலாயுதபிள்ளை



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வேலாயுதபிள்ளை 17.08.2016 புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சேதுப்பிள்ளை தம்பதியரின் மகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் தனீஸ்வரன் (ப.நோ. கூட்டுறவு சங்க முகாமையாளர்), விக்னேஸ்வரன் (வீதி அபிவிருத்தி திணைக்கள சாரதியும், முன்னாள் வலி கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச்சங்க முகாமையாளர்) கமலேஸ்வரன் (சாலை பரிசோதகர் இ.போ.சபை, கோண்டாவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகந்தினி, சரஸ்வதி, சுதர்சினி (UNION ASSUARANCE) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று ந.ப. 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி.
077 6178474,
077 3151645

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி றஞ்சிதமாலா மனோகரன்
(ஆசிரியை, யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்)



சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் வட்டு தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றஞ்சிதமாலா மனோகரன் (ஆசிரியை யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்) 18.08.2016 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் மேரி றெஜினா இராசமணி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணப்பிள்ளை நாகம்மா மற்றும் மனோன்மணி தம்பதியரின் மருமகளும் மனோகரனின் அன்புமனைவியும் மதுசன் (1ஆம் வருட ஊவா வெல்லச பல்கலைக்கழகம் - பதுளை) பிரபு (வங்கி பாணந்துறை) மிதுலா (மாணவி. யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புத்தாயும் யோகசந்திரன் (சுவிஸ்) ஜெயலலிதா (ஆசிரியர் யா /சுழிபுரம் அ.மி.த.க பாடசாலை) வத்சலா கிருஸ்ணமாலா கிருஸ்ணவேணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற சிறீதரன் மற்றும் வாகீசன் (ஆசிரியர். யா/வட்டு மத்திய கல்லூரி) வனஜா (ஆசிரியர் யா/அராலி கிழக்கு அ.மி.த.க பாடசாலை) வசந்தன் (நடத்துநர் இ.போ.ச முல்லைத்தீவு சாலை) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2016) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு தெற்கு. வட்டுக்கோட்டை

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தென்னாபிரிக்கா நியூசியை வெள்ளையடிக்க வேண்டும்

### கிப்ஸ் தெரிவிப்பு

தென்னாபிரிக்கா அணி நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2:0 என்று வெள்ளையடிக்கவேண்டும் எனத் தெரிவித்தார் தென்னாபிரிக்காவின் முன்னாள் வீரரான கிப்ஸ்.

நியூசிலாந்து – தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது. இந்த நிலையிலேயே கிப்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர், பன்னாட்டு ஆட்டங்களுக்கான டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்தில் இருந்த தென்னாபிரிக்கா, இந்தியாவுக்கு எதிரான தொடரை இழந்ததில் இருந்து சரிவையே கண்டு வந்தது. தற்போது அந்த அணி முதல் ஐந்து இடங்களுக்குள் இல்லை. டெஸ்ட் ஆட்டங்களில் தென்னாபிரிக்க அணி, தான் இழந்த இடத்தை மீண்டும் பெற வேண்டும். அதற்கு அத்திபாரமாக இந்தத் தொடரைக் கைப்பற்ற வேண்டும் என கிப்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)





# அனைத்துவகை கிரிக்கெட்டிலும் தொடர வில்லியர்ஸ் திட்டவட்டம்

தென்னாபிரிக்காவின் நட்சத்திர கிரிக்கெட் வீரரான வில்லியர்ஸ், டெஸ்ட், ஒருநாள், ரி–20 என மூன்று கிரிக்கெட் ஆட்டங்களிலும் தொடர்ந்து விளையாடுவது உறுதி எனத் தெரிவித்தார்.

அதிக வேலைப்பளு காரணமாக ஓரிரண்டு ஆட்ட வடிவங்களில் இருந்து வில்லியர்ஸ் ஓய்வு பெறுகிறார் போன்ற செய்திகள் சிலகாலங்களாக உலாவி வந்தன. மேலும், அவரது சுயசரிதை நூல் ஒன்று அடுத்த மாதம் வரவுள்ள நிலையில் வில்லி யர்ஸ் ஓய்வு பெறப்போகிறார் என்று தெரி விக்கப்பட்டது. இந்த நிலையில் நியூசிலாந் துக்கு எதிரான இரு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் வில்லியர்ஸ் முழங்கை காயம் காரணமாக ஆடமாட்டார் என்ற செய்தியும் சேர்ந்து கொள்ள, அவர் விடைபெறுவது உறுதி என நம்பப்பட்டது. இந்த நிலையில் தான் மூன்றுவகை கிரிக்கெட்டிலும் தொடருவது உறுதி என வில்லியர்ஸ் தெரிவித்தார்.

என் தாய்நாட்டுக்காக விளையாடுவது எனக்கு மிகவும் நேசத்துக்குரியது. என்னால் முடிந்தவரை விளையாடியே தீருவேன். நம் உடல்நிலையைக் கவனித்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகிறது. நியூசிலாந்து தொடருக்குப் பிறகு, நான் மீண்டும் விளையாடத் தொடங்கிவிடுவேன், ஒக்ரோபரில் ஆஸ்திரேலியாவை எதிர்கொள்வேன். தென்னாபிரிக்காவை டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்துக்குக் கொண்டுவருவதே அடுத்த 10 மாத காலத் திட்டம் என வில்லியர்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)

## புதுக்குடியிருப்பு மத்தி. அளம்பில் றோ.க.ம.வி. நாளைமறுதினம் மோதல்

யாழ்ப்பாணம், ஓக. 19

இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியும், அளம்பில் றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயமும் நாளைமறுதினம் மோதவுள்ளன. இரணைப்பாலை செம். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் மாலை 6 மணிக்கு இந்த ஆட்டம் இடம்பெறும். நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராக வடமாகாணசபை விளையாட்டுத்துறை இணைப்பாளர் இ. ஆனல்ட் கலந்துகொள்வார். (ம)

## நியூசி.– தெ.ஆபிரிக்கா டெஸ்ட் தொடர் ஆரம்பம்

நியூசிலாந்து – தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது. தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெறுவதால், அந்த அணியின் ஆதிக்கம் மேலோங்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், நட்சத்திர வீரரான வில்லியர்ஸ் காயம் காரணமாக விலகியுள்ளமை நியூசிலாந்துக்குப் பலம் சேர்ப்பதாக அமைந்துள்ளது. (ம)

## ஒவ்வொரு துறையிலும் தோற்கடிக்கப்பட்டோம்


### சிமித் குமுறல்

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தமது ஒவ்வொரு நகர்வுகளும் தோல்வியிலேயே முடிந்ததாக ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்ரீவ் சிமித் புலம்பித் தள்ளியுள்ளார்.

இலங்கைக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள ஆஸ்திரேலிய அணி மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் மூன்றிலும் படுதோல்வியடைந்து வெள்ளையடிக்கப்பட்டது. ஆஸ்திரேலிய இவ்வாறு மண்ணைக் கௌவுவது இது முதல் முறையல்ல. ஆசிய ஆடுகளங்கள் அந்த அணிக்கு எட்டாப் பொருத்தம். முன்னதாக இந்தியாவுக்கு எதிராக 4:0 என்ற கணக்கிலும், பாகிஸ்தானுக்கு எதிராக 2:0 என்ற கணக்கிலும் படுதோல்வியடைந்தது. இந்த நிலையிலேயே சிமித் இவ்வாறு தெரிவித்தார்.

எப்படி இவ்வாறு நிகழ்ந்தது என்பதை புரிந்து கொள்ள உண்மையில் கடினமாக உள்ளது. மீண்டும் ஒரு கடினமான தொடரை எதிர்கொண்டோம், துணைக்கண்டத்தில் தொடர்ச்சியான மூன்று வெள்ளையடிப்புக்கள். நாங்கள் தொட்டது எதுவும் துலங்கவில்லை. ஒவ்வொரு துறையிலும் அடுத்தடுத்து தோற்கடிக்கப்பட்டோம். துடுப்பாட்ட வீரர்கள் சூழலுக்கேற்ப எம்மைத் தகவமைத்துக் கொள்ளவில்லை. வேகப்பந்து வீச்சாளர்களை நான் குறை கூற மாட்டேன். குறிப்பாக ஸ்ராக் உண்மையில் தன்னை அர்ப்பணித்து வீசினார். ஒரு வேகப்பந்து வீச்சாளராக இருந்துகொண்டு சுழலுக்கு சாதகமான ஆடுகளத்தில் 20 இலக்குகளை வீழ்த்தியமை அவரது அதீத திறமையை வெளிப்படுத்துகிறது. இலங்கை அணிக்கு எம்மால் நெருக்கடி கொடுக்க இயலவில்லை. தொடரைக் கைப்பற்ற முடியும் என்ற நம்பிக்கையுடன் வந்தோம். சாத்தியமில்லாமல் போனது. இலங்கையின் பந்து வீச்சாளர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். குறிப்பாக கேரத்தின் திரும்பல்கள் அபாரம். அடுத்ததாக மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட தொடர்கள் வருகின்றன. இதில் எமது ஆட்டத்தை நிலைநிறுத்த இயலுமானவரை முயற்சி செய்வோம் என சிமித் மேலும் தெரிவித்தார். (ம)






## சம்பியன்ஸ் லீக் தகுதிச் சுற்று மன்செஸ்டர் சிற்றி வென்றது

ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையே இடம்பெறும், சம்பியன்ஸ் லீக் தொடருக்கான தகுதிச் சுற்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் இங்கிலாந்தின் மன்செஸ்டர் சிற்றி, ரோமானியக் கால்பந்தாட்டக் கழகமான ஸ்டவா புக்கிரேஜை வீழ்த்தியது.

மன்செஸ்டர் சிற்றியின் நட்சத்திர வீரரான சேர்ஜியோ அக்ரோ, ஆரம்பத்தில் தடுமாற்றங்களை வெளிப்படுத்திய போதிலும், பின்னர் சரிவிலிருந்து மீண்டு, ஆட்டத்தில் 29 ஆவது, 35 ஆவது, 43 ஆவது நிமிடங்களில் கோல் மழை பொழிந் தார். இதனால் 3:0 என்ற சிற்றியின் ஆதிக்கத்துடன் முதல் பாதி முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாதியின் 60 ஆவது, 80 ஆவது நிமிடங்களில் மன்செஸ்டர் சிற்றியின் வீரர்களான டேவிட், நொலிட்டோ ஆகியோர் அடுத்தடுத்து கோல்களைப் பதிவு செய்ய முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் சிற்றி அபார வெற்றிபெற்றது. (ம)

## கூடைப்பந்தாட்ட பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்ட நடுவர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்று யாழ். மத்திய கல்லூரியில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளது. எனவே கூடைப்பந்தாட்ட நடுவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 19

**ஐயனார் வி.க. தொடர்**

பூநகரி ஐயனார் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் லக்கிஸ்ரார் அணியை எதிர்த்து ஜெயந்திநகர் அணியும், காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் செந்தாரகை அணியை எதிர்த்து உதயதாரைக அணியும், மு.ப 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கனகபுரம் அணியை எதிர்த்து இரணைமாதாநகர் சென். மேரிஸ் அணியும், முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முரசுமோட்டை விளைபூமி அணியை எதிர்த்து பள்ளிக்குடா ஜொலிபோய்ஸ் அணியும் மோதவுள்ளன.

**இருதயராஜா வி.க. தொடர்**

மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புங்குடுதீவு சென். சேவியர் அணியை எதிர்த்து சென். நீக்கிலஸ் அணி மோதவுள்ளது.

**பாரதியின் கால்பந்தாட்டம்**

பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டு கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**சக்திவேலின் தொடர்**

கொடுக்குளாய் சத்திவேல் விளையாட்டுக் கழகம் நடத்தத் திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், இன்று ஆரம்பமாகின்றன. இதன்படி காலை 8.30 மணிக்கு அருணோதய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாரதி விளையாட்டுக் கழக 'பி' அணியும், முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து கணேசானந்த விளையாட்டுக் கழகமும், பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பிங்பொங் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உதய சூரியன் விளையாட்டுக் கழகமும், மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் செந்தமிழ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வெள்ளிநிலா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-23-422-108)



# பருத்தித்துறை சிறுவர் முற்றம் இன்னும் திறக்கப்படாதது ஏன்?

யாழ்ப்பாணம், ஓக. 19

பருத்தித்துறை மூர்க்கக் கடற்கரையில் அமைக்கப்பட்ட சிறுவர் விளையாட்டு முற்றத்துக்கான கட்டுமானப் பணிகள் முழுமையாக நிறைவடைந்தபோதும், திறப்புவிழா இன்னும் நடத்தப்படாததால் சிறுவர்கள் வேலிகளால் புகுந்து சென்று அதனைப் பயன்படுத்தும் நிலை உருவாகியுள்ளது.

2015 ஆம் ஆண்டு வடமாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து, வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் இந்த வேலைக்கான நிதி பரிந்துரைக்கப்பட்டது. இதற்கமைய முப்பத்தொன்பது லட்சத்து தொண்ணூறாயிரம் ரூபா செலவில் பருத்தித்துறை நகரசபையால் பருத்தித்துறை மூர்க்கக் கடற்கரையில் சிறுவர் விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டது. இந்த வேலைத் திட்டம் கடந்த ஜனவரி மாதம் நிறைவடைந்தது. கிட்டத்தட்ட 8 மாதங்கள் கடந்த நிலையிலும் இன்னமும் குறித்த முற்றம் பயன்பாட்டுக்குக் கையளிக்கப்படவில்லை.

குறித்த விடயம் தொடர்பாகப் பருத்தித்துறை நகரசபைச் செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, வேலைகள் நிறைவடைந்தமை தொடர்பாக அறிவித்திருக்கின்றோம். முதலமைச்சரால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இந்த வேலைத் திட்டம் இடம்பெற்றுள்ளதால் அவரைக் கொண்டு திறந்து வைப்பது என முடிவு செய்யப்பட்டது. இதற்கு முதலமைச்சரும் சம்மதித்து பருத்தித்துறைக்கு வரும்போது திறந்து வைப்பதாகத் தெரிவித்தார்.

இந்த மாதத்தின் இறுதியில், அல்லது அடுத்த மாதத்தின் ஆரம்பப் பகுதியில் அனேகமாக பாவனைக்குக் கையளிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

குறித்த விளையாட்டு முற்றத்தைப் பயன்படுத்த தமது குழந்தைகளை அழைத்து வந்த பெற்றோர்கள், முதலமைச்சர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அசமந்தப் போக்கில் விசனம் தெரிவித்தனர். (ம-422)

## லூட்ஸ், மனோகரா அணிகள் வென்றன

கரணவாய் ஓக. 19

பொலிகை பாரதியின் கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

பாரதியின் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. பொம்மர்ஸ் அணியின் சாரங்கன் ஹற்றிக் கோலைப் பதிவு செய்தார். முதல் பாதியின் முடியும் தருவாயில் சென். லூட்ஸ் அணியின் யூட் கோல் ஒன்றைப் பதிவுசெய்ய 3:1 என்ற கோல் கணக்கில் பொம்மர்ஸ் அணி முன்னிலை வகித்தது. தொடர்ந்து இரண்டாம் பாதியில் சென். லூட்ஸ் மிகப் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தி, அடுத்தடுத்து மூன்று கோல்களைப் பதிவு செய்தது. பொம்மர்ஸ் வேறு எந்த கோலையும் பதிவுசெய்யாத நிலையில் முடிவில் 4:3 கோல் கணக்கில் வெற்றிபெற்றது சென். லூட்ஸ்.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதி, நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில், இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பதிவுசெய்ய சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 7:6 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதிபெற்றது அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம். (ம-108)

## கூடைப்பந்தாட்ட அணித் தெரிவு

வடமாகாண ஆண்கள் கூடைப்பந்தாட்ட அணித் தெரிவு நாளை இடம்பெறவுள்ளது. யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் மாலை 4 மணிக்கு இந்தத் தெரிவு முகாம் நடைபெறவுள்ளது. (23)

## சக்கரநாற்காலி கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 19

உயிரிழை அமைப்பினால் நடத்தப்படும் முள்ளத்தண்டு வடம் பாதிப்புற்றோருக்கான சக்கர நாற்காலி கூடைப்பந்தாட்டத் தொடர் ஒன்று வவுனியா நகர சபை கூடைப்பந்தாட்டத் திடலில் நாளை இடம்பெறவுள்ளது. நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராக வவுனியா மாவட்ட உதவி அரச அதிபர் தி.திரேஸ்குமார் கலந்துகொள்ளவுள்ளார். (ம-23)

## ஆதிசக்தி அணி இறுதிக்குத் தகுதி

நவசக்தி விளையாட்டு கழகம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத்தில் வல்வை ஆதிசக்தி அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.


நவசக்தியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் வல்வை ஆதிசக்தி அணியை எதிர்த்து, கரவெட்டி நவசக்தி அணி மோதியது. ஆட்டத்தின் 7 ஆவது நிமிடத்தில் ஆதிசக்தி அணியின் வீரர் குகன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார். அடுத்த சில நிமிடங்களில் பதிலடி கொடுத்தார் நவசக்தி அணியின் விவேக். 15 ஆவது நிமிடத்தில் ஆதிசக்தி அணியின் குகன் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் ஆதிசக்தி அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

2:1என்ற கோல் கணக்கிலேயே இரண்டாம் பாதி நகர்ந்து கொண்டிருந்தது. ஆட்டம் நிறைவடைய இரண்டு நிமிடங்கள் இருந்தவேளை ஆதிசக்தி அணியின் அருள் கோலைப் பதிவுசெய்ய முடிவில் அந்த அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-422)



அரியாலை சனசமூக நிலையத்தின் 67ஆவது நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆண்களுக்கான 50 மைல் தூரம் கொண்ட சைக்கிள் ஓட்டப் போட்டியின் போது... (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போட்டியின்போது தவறி வீழ்ந்து காயமடைந்தார் ஜிம்னாஸ்டிக் வீரர்

நெதர்லாந்தைச் சேர்ந்த ஜிம்னாஸ்டிக் வீரர் போட்டியின்போது தவறி விழுந்ததில் கடுமையான காயங்களுக்கு ஆளாகினார்.

ரியோ ஒலிம்பிக் தொடரில் ஆண்களுக்கான ஜிம்னாஸ்டிக் போட்டிகள் சில நேற்று நடைபெற்றன. இதில் நெதர்லாந்து நாட்டின் எபிக் சொன்டர்லாந் என்ற வீரரும் கலந்துகொண்டார். இறுதியாக இடம்பெற்ற லண்டன் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற அவர் இலக்கைத் தவறாகக் கணித்து இரும்புக் கம்பி ஒன்றுடன் அடிபட்டு நிலத்தில் வீழ்ந்ததில் காயமடைந்தார். இதனையடுத்த அவர் உடனடியாக மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். (ம-ரி4)

# ஜோர்ஜிய வீரர் உலகசாதனை ரியோ ஒலிம்பிக் பளுதூக்கலில்



ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற 105 கிலோ எடைப் பிரிவு பளுதூக்கலில் ஜோர்ஜியா வீரர் உலக சாதனையுடன் தங்கம் வென்றார்.

ஜோர்ஜியாவைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய லக்சாரலக்ஸ்டி என்ற வீரர் ஒட்டுமொத்தமாக 431 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். ஆர்மெனிய வீரர் ஜோர் மனிஸ்ஜன் ஒட்டுமொத்தமாக 451 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும். ஜோர்ஜியாவின் பிறிதொரு வீரர் ஜரக்லி ஒட்டுமொத்தமாக 448 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-ரி4)



சம்பியன்ஸ் லீக் தொடரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ரியல் சொசைற்றெட் அணிக்கு எதிரான ஆட்டத்துக்காக பயிற்சியில் ஈடுபட்டுவரும் ரியல் மட்ரிட் அணியின் வீரர்கள். (ம)



# ஆஸ்திரேலியத் தொடருடன் விடைபெறுகிறார் டில்சான்?

இலங்கை அணியின் சகலதுறை வீரரான டில்சான், ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெறவுள்ள ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள், இரு ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடர் ஆகியவற்றுடன் பன்னாட்டு ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெறப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்கு வந்துள்ள ஆஸ்திரேலிய அணி மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரை 3:0 என்று இழந்துள் ளது. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர், இரு ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் என்பன அடுத்ததாக நடைபெறவுள்ளன. இந்தத் தொடர்களில் டில்சானின் மீது அதிக எதிர்பார்ப்புக்கள் நிலவு கின்றன. இந்த நிலையில் அவர் இந்தத் தொடர்களுடன் பன்னாட்டு ஆட்டங்களில் இருந்து விடைபெறப் போகிறார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இருப்பினும் டில்சானின் தரப்பில் எந்தவிதக் கருத்துக்களும் தெரிவிக்கப்படவில்லை. (ம)

# கடற்கரைக் கரப்பந்தாட்டத்தில் தங்கத்தை வென்றது ஜேர்மனி

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான கடற்கரைக் கரப்பந்தாட்டத்தில் ஜேர்மனிக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.

ஜேர்மனியின் சார்பாகக் களமிறங்கிய லௌட்விங், ஹோஸ்ட் இணை பிரேஸிலின் பேர்டிக், சைக்ஸா இணையை 2:0 என்ற நேர் செற் கணக்கில் வீழ்த்தி



தங்கம் வென்றது. பிரேஸில் இணைக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. அமெரிக்காவின் ஜென்னிங்ஸ், றோஸ் இணை வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியது. (ம)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
* தகைமை,திறமை அனுபவம் வாய்ந்த விரிவுரையாளருடன் துறைசார்வளவாளர்கள்
* குறைந்த கட்டணம் கூடிய நேரம்
* எதிர்பார்க்கை வினாத்தாள்கள்
GS,சமுர்த்தி
புதியபிரிவு
சனி,ஞாயிறு காலை 8.30-1.30 மணிவரை
பழையபிரிவு
சனி,ஞாயிறு பி.ப 1.30-5.00 மணிவரை
வடமாகாண ஆசிரியர் தெரிவு
பிரதி ஞாயிறு காலை 10.00-3.00 மணிவரை
வடமாகாண சனசமூக நன்நடத்தை, ஆய்வு,விவசாய, உத்தியோகத்தர்
பிரதி சனி 1.00-5.00 மணிவ்ரை
SLTES
பிரதி ஞாயிறு 9.30-3.00 மணி
கணக்காய்வாளர்
சனி,ஞாயிறு 9.00-4.00 மணி வரை
D.O.P.M.A, G.S EB Exam
சனி,ஞாயிறு 9.00-12.00
தொடர்புகளுக்கு
076 6883394
021 2223382
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

கிளி/ எடிசன் பட்டப் படிப்புகள் கல்லூரி,கிளிநொச்சி
(வலயக்கல்விப் பணிமனை முன்பாக கிளிநொச்சி)
* B.A (பேராதனை) புதிய பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன
* பட்டதாரிகளுக்கான போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
* கிராம சேவையாளர், சமுர்த்தி வகுப்புக்கள்
திங்கள்: 22.08.2016 பி.ப 2.00 மணி
ஆசிரியர் திரு. தவசேகர்
தொடர்பு: 077 5483470

வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு
யாழ்/ நல்லூர் மருதடி ஒழுங்கையில் இல. 38/2/ A முகவரி கொண்ட 1675 சதுர அடி கொண்டதும் 4 அறைகளும் இணைந்த குளியல் அறையும் புறம்பான குளியல் அறையும் கொண்ட சகல வசதிகளும் உள்ள மாடி வீடும் 3 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை.
தொடர்புகளுக்கு:-
077 801 4335, 076 545 5426

சாரதி தேவை
யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வாகனச் சாரதி தேவை. கொழும்பு சென்றுவரக் கூடியவராகவும், தேவையேற்படின் இரவு வேளையிலும் பணிபுரியக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
தங்குமிட வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு:- 071 377 8826
இல. 107,
இராசவீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்
யாழில்40 வருடங்களாக AF இன் பயணம்...
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.
பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்:
யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.
இலவசம்: PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து...
ஆரம்பம்: 28.08.2016 உடன் பதிவு செய்யுங்கள்.
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
→ AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.